07TH NOVEMBER 2025

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 92 | பக்கங்கள் - 18 | editor.uthayam@gmail.com



# அரசின் இரண்டாவது பட்ஜெட்

## இன்று ஜனாதிபதியால் சமர்ப்பிப்பு

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2026ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் இன்று (07) நிதி அமைச்சர் என்ற 03ம் பக்கம்பார்க்க...

# பாதுகாப்பு அமைச்சு அனுமதி கிடைத்ததும் அல் குர்ஆன் பிரதிகள் இந்தியாவுக்கு அனுப்பப்படும்

## முஸ்லிம் திணைக்கள பணிப்பாளர் நவாஸ்

## இந்தியா அல்லது கனடாவுக்கு அனுப்ப நடவடிக்கை – அஷ்ஷெய்க் ஸாதிக்





சவுதி அரேபியாவில் இருந்து இலங்கைக்கு சில வருடங்களுக்கு முன் அனுப்பி வைக்கப்பட்டு சர்ச்சைக்குள்ளாகி இருக்கும் அல்குர்ஆன் மொழிபெயர்ப்பு பிரதிகள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்ததன் பின்பே இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்படும் என முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களத்தின் பணிப்பாளர் எம் எஸ் எம் நவாஸ் தெரிவித்தார்.

குர்ஆன் பிரதிகளை அனுப்பி வைத்த அஷ்ஷெய்க் சாதிக் இலங்கையில் குர்ஆன் பிரதிகளை பகிர்ந்தளிக்க முடியாவிடின் இந்தியா அல்லது கனடாவுக்கு அனுப்பி வைக்குமாறு விடுத்துள்ள வேண்டுகோளின் பிரகாரம் முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களம் அவற்றை இந்தியாவுக்கு அனுப்பி வைக்கவுள்ளது.

இது குறித்தான உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளிவகார அமைச்சர் விஜித ஹேரத் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இதுகுறித்தான பாதுகாப்பு 02ம் பக்கம்பார்க்க...

# சவூதியிலிருந்து 1000 அல் குர்ஆன் பிரதிகள்

## தூதுவர் காலித் ஹமூத் நடவடிக்கை!

இலங்கையில் விநியோகிப்பதற்காக சவுதி அரேபியா அரசாங்கம் 1000 அல்குர்ஆன் பிரதிகளை அனுப்பி வைக்க 03ம் பக்கம்பார்க்க...

# அரச பாடசாலைகளுக்கு இன்று முதல் விடுமுறை

நாடு முழுவதிலும் உள்ள அரச மற்றும் அரச அங்கிகாரம் பெற்ற பாடசாலைகளில் மூன்றாம் தவணையின் முதல் கட்டம் நாளை நிறைவடையவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. 02ம் பக்கம்பார்க்க...

# அடுத்த பத்தாண்டுக்கு ள் தொழுநோயை ஒழிக்கும் வரைபடம்

## ஜனாதிபதி தலைமையில் வெளியீடு



நாட்டிலிருந்து தொழுநோயை ஒழிப்பதற்கான பயணத்தில் ஒரு முக்கியமான மைல்கல்லைக் குறிக்கும் வகையில், தேசிய தொழுநோய் 02ம் பக்கம்பார்க்க...

# பங்களாதேஸுக்குள் நுழைய ஸாகிர் நாயக்குக்கு தற்காலிக தடை!



பிரபல இஸ்லாமிய மார்க்கப் பிரச்சாரகர் டாக்டர் ஸாகிர் நாயக் பங்களா தேசத்துக்குள் நுழையத் தற்காலிகமாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தற்போது மலேசியாவில் வசித்து வரும் டாக்டர் ஸாகிர் நாயக் அவர்கள் எதிர்வரும் 28, 29ம் திகதிகளில் 03ம் பக்கம்பார்க்க...

# மருந்து பற்றாக்குறை போக்க இந்திய ஆதரவைக் கோரும் சஜித்



"இலங்கையின் மருந்துகள் பற்றாக்குறையை போக்க இந்தியாவின் ஆதரவை வழங்குங்கள்"

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இந்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இலங்கை மருத்துவத் துறையில் நிலவும் அத்தியாவசிய 02ம் பக்கம்பார்க்க...

# காஸாவில் அமைதிக்கு சாத்தியமில்லை அடுத்த கட்ட சண்டைக்குத் தயார்

## ஹூதிகளின் தலைவர் அப்துல் மலிக்

இஸ்ரேலுடன் அடுத்த கட்ட சண்டைக்கு தாங்கள் தயாராகி வருவதாக யெமனின் ஹூத்திகள் தலைவர் அப்துல் மாலிக் 02ம் பக்கம்பார்க்க...

# வரலாறு படைத்த மம்தானி



(பாயிஸ்)

அமெரிக்க NewYork நகரின் புதிய மேயராக ZOHRAN MAMDANI தெரிவாகி உள்ளார்.

அமெரிக்காவில் உலக அரங்கில் இவரது அரசியல் விவகாரம் மிகவும் முக்கியத்துவமாக பேசப்பட்டது.

34 03ம் பக்கம்பார்க்க...

# ஒரு பெரிய கோட்டை அதன் சத்தம் கேட்காமலே இடிந்து வீழ்ந்தது

## நிவ்யோர்க் வெற்றி குறித்து இஸ்ரேல் பத்திரிகையாளர் ஆதங்கம்!

நிவ்யோர்க் நகரில் இஸ்லாம் வேகமாகத் தலை தூக்குகிறது.பள்ளிகளில் தெருக்களில் இஸ்லாம் வேகமாகப் பரவுகிறது என்றும் மம்தானியின் வெற்றி மூலம் அது மேலும் தீவிரம் பெறுமென்றும் இஸ்ரேல் பத்திரிகையாளர் சிபி கெஹெகிலா தெரிவித்துள்ளார். 02ம் பக்கம்பார்க்க...

# தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் - மீடியா போரம் சந்திப்பு



அரசாங்க தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் எச்.எஸ்.கே.ஜே. பண்டாரவிற்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியாபோரம் 02ம் பக்கம்பார்க்க...



## பாதுகாப்பு...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

அமைச்சின் முடிவுக்கு தாம் காத்திருப்பதாக பணிப்பாளர் நவாஸ் தெரிவித்தார்.

அல்குர்ஆன் பிரதிகளை இலங்கையில் பகிர்ந்தளிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க தவறியதனால் தான் இப்பிரதிகளை இந்தியா அல்லது கனடாவுக்கு அனுப்பி வைப்பதற்கு தீர்மானித்திருப்பதாக மக்கா முகர்ரமாவின் ஓய்வு பெற்ற பணிப்பாளர் அஷ்ஷெய்க் சாதிக் உதயத்துக்கு தெரிவித்தார். குர்ஆன் பிரதிகளை பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தான் பல முயற்சிகளை எடுத்ததாகவும், எனினும் நாட்டின் முஸ்லிம் அரசியல் தலைவர்கள், பிரமுகர்கள், உலமாக்கள், உலமா சபை பிரதிநிதிகள் மற்றும் அரசின் முக்கியஸ்தர்கள் அக்கறை காட்டாததன் விளைவே இவ் அல்குர்ஆன் பிரதிகளை தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்ற தமிழ்நாட்டுக்கு அல்லது கனடாவுக்கு அனுப்பி வைக்க தான் முடிவு செய்திருப்பதாக அல்ஹாஜ். சாதிக் மேலும் தெரிவித்தார்.

மக்காவில் வசித்து வரும் ஹரம் ஷரீபின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர் அல்ஹாஜ். சாதிக் இலங்கைக்கு விஜயம் செய்து இக்குர்ஆன் பிரதிகளை பகிர்ந்தளிப்பது குறித்து புத்த சாசன சமய விவகார கலாச்சார அமைச்சர் கலாநிதி சுனில் செனவி உட்பட அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் சந்திப்புகளை ஏற்படுத்தி பேச்சுவார்த்தை நடாத்தியமை குறிப்பிடத்தக்கது.

15,000 தமிழ் சிங்கள அல்குர்ஆன் பிரதிகள் துறைமுக சுங்க பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. நீண்ட காலமாக இக் குர்ஆன் பிரதிகள் துறைமுகத்தில் தடுத்துவைக்கப்பட்டு இருக்கின்ற நிலையில் அண்மையில் இது தொடர்பாக ஆராய்ந்த சமய விவகார அமைச்சு இவற்றை அனுப்பி வைத்தவரின் விருப்பத்தின் பேரில் இவற்றின் மீள அனுப்ப தீர்மானம் எடுத்துள்ளது. முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களம் இக் குர்ஆன் பிரதிகள் தொடர்பான ஆராய்தலுக்கு ஏழு பேர் கொண்ட குழு ஒன்றினை நியமித்திருந்தது. அவர்களில் ஐவர் இதற்கு அங்கீகாரம் அளித்த போதும் இருவர் இதில் இருக்கின்ற சில சர்ச்சைகள் மற்றும் சிக்கலான சரத்துக்களை நீக்க வேண்டும் என சுட்டிக் காட்டி இருந்தனர். இதன் காரணமாக இந்த விவகாரம் தொடராக இழுபறி நிலையில் இருந்து வந்திருக்கின்றது. இப்போது இந்த திருக்குர்ஆன் பிரதிகளை நாட்டில் பகிர்ந்தளிக்க அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் அவற்றை வெளிநாடு ஒன்றுக்கு அனுப்பி வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அல்ஹாஜ் சாதிக் இன் விருப்பப்படி இந்தியாவுக்கு அல்லது கனடாவுக்கு இவை அனுப்பி வைக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் தீர்மானத்தை காத்திருப்பதாக முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களம் தெரிவித்துள்ளது.

## அடுத்த...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

மாநாடு நேற்று (06) காலை கொழும்பு சினமன் கிரேண்ட் ஹோட்டலில் ஆரம்பமானதோடு அதன் ஆரம்ப நிகழ்வில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க கலந்து கொண்டார்.

அடுத்த 10 ஆண்டுகளில் இலங்கையில் இருந்து தொழுநோயை ஒழிப்பதற்கான வரைபடம் இதன்போது வெளியிடப்பட்டது.

உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) மற்றும் சசகாவா மன்றம் என்பவற்றின் ஒத்துழைப்புடன் சுகாதார அமைச்சின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய தொழுநோய் மாநாடு நேற்றும் (06) இன்றும் (07) கொழும்பில் நடைபெறும்.

நிகழ்வில் உரையாற்றிய சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ, பொது சுகாதாரத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் இலங்கை1995 ஆம் ஆண்டில் தொழுநோயை ஒழித்த போதிலும் அந்தப் பயணம் இன்னும் நிறைவடையவில்லை. தொடர்ந்தும் புதிய நோயாளிகள் அடையாளம் காணப்படுகின்றனர். அதன்படி, ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1500-2000 புதிய தொழுநோயாளிகள் அடையாளம் காணப்படுவதாகவும் அவர்களில் சுமார் 10% பேர் 10 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அதன்படி, 2035 ஆம் ஆண்டுக்குள் இலங்கையை தொழுநோய் அற்ற நாடாக மாற்ற தற்போதைய அரசாங்கம் திட்டமிட்ட வகையில் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. நோய் பரவுவதற்கு காரணமான நோயாளிகளை முன்கூட்டியே கண்டறிதல், வைத்தியசாலை கட்டமைப்பால் நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சை மற்றும் வசதிகளை மேம்படுத்துதல், அங்கவீனமுற்றவர்களுக்கான முறையான புனர்வாழ்வுத் திட்டங்களை செயல்படுத்துதல் போன்றவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொழுநோய் பரவலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முயற்சிகளை இந்த மாநாடு மேலும் வலுப்படுத்தும் என்று எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டிலிருந்து தொழுநோயை ஒழிப்பதில் பல ஆண்டுகளாக சுகாதார அமைச்சிற்கு தொடர்ந்து அளித்து வரும் ஆதரவிற்கு உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் சசகாவா மன்றம் என்பவற்றுக்கு அமைச்சர் தனது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

## காஸாவில்...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

தெரிவித்துள்ளார்.

பலஸ்தீனை இஸ்ரேல் தொடர்ந்து ஆக்கிரமித்துள்ள நிலையில் பிராந்தியத்தில் அமைதிக்கான சாத்தியமில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

தேசிய தியாகிகள் தினத்தை ஒட்டி தொலைக்காட்சியில் உரையாற்றிய அவர், இஸ்ரேலுடனான முந்தைய சண்டையை தொடர்ந்து யெமனிகள் வலிமை பெற்றுள்ளதாக கூறினார்.

பலஸ்தீனின் காஸா மீதான இஸ்ரேலின் இனப்படுகொலையை தடுத்து நிறுத்தும் வகையில் செங்கடல் பகுதியில் கப்பல் மீது ஹூதிகள் தொடர் தாக்குதல்களை நடத்தினர்.

## தகவல்...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

செயற்குழு உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு 06.11.2025 வியாழக்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் தலைவர் எம்.பீ.எம். பைறூஸ் தலைமையிலான செயற்குழு உறுப்பினர்கள் இதில் பங்கேற்றனர்.

இச் சந்திப்பில் நாடளாவிய ரீதியிலுள்ள மும்மொழி ஊடகவியலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அவர்களுக்கான பயிற்சி மற்றும் நலன்புரி திட்டங்கள், தகவல் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

குறிப்பாக தகவல் திணைக்களமும் முஸ்லிம் மீடியா போரமும் இணைந்து ஊடகவியலாளர்களுக்கான பல்வேறு பயிற்சிநெறிகளை முன்னெடுக்க உடன்பாடு காணப்பட்டதோடு தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் ஊடகக் கழகங்களை ஆரம்பித்து இளம் ஊடகவியலாளர்களை பயிற்றுவிக்கவும் இணக்கம் காணப்பட்டது.

ஊடக சட்டங்கள், ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரி, ஊடக அடையாள அட்டை விநியோக நடைமுறைகள், புலமைப்பரிசில் திட்டங்கள், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையை வலுப்படுத்துதல் உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டன.

அவற்றில் பெரும்பாலான விடயங்கள் தொடர்பில் பணிப்பாளர் நாயகம் சாதகமான பதிலை அளித்ததோடு எதிர்காலத்தில் ஊடகவியலாளர்களின் நலனுக்காக முன்னெடுக்கவிருக்கும் பல்வேறு செயற்பாடுகள் குறித்தும் தெளிவுபடுத்தினார்.

கலந்துரையாடலின் இறுதியில் பணிப்பாளருக்கு பெறுமதியான நூல் ஒன்றும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

இந்த சந்திப்பில் அமைப்பின் சார்பில் தலைவர் எம்.பீ.எம். பைரூஸ்,ஸ்தாபக போஷகர் என். எம்.அமீன்,செயலாளர் எம்.எஸ். பாஹிம், உபதலைவர் சிஹார் அனீஸ், தேசிய அமைப்பாளர் றிப்தி அலி, உப செயலாளர்களான றம்ஸி குத்தூஸ், சமீஹா ஷபீர், உப பொருளாளர் ஏ.எச்.எம். பௌசான், இணையத்தள ஆசிரியர் றிஸ்வான் சேகு முகைதீன், தகவல் திணைக்கள அதிகாரி எஸ்.ஏ.எம். பவாஸ் ஆகியோர் பங்கேற்றனர்.

## அரச...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

அத்துடன், டிசம்பர் மாதம் 7ஆம் திகதி மீண்டும் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் பாடசாலைகளுக்கான மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டம் நவம்பர் 24ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## மருந்து...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

மருந்துகளின் பற்றாக்குறைக்கு தீர்வு காண இந்திய அரசின் ஆதரவை வழங்குமாறு கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இந்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் ஜெகத் பிரகாஷ் நட்டாவை சந்தித்து, கோரிக்கை விடுத்தார்.

இது எதிர்க்கட்சித் தலைவர் கௌரவ சஜித் பிரேமதாச அவர்களின் உத்தியோகபூர்வ இந்திய விஜயத்தின் இன்னுமொரு நடவடிக்கையாகும்.

இலங்கையின் தேசிய சுகாதார கட்டமைப்பினூடாக பல தசாப்த காலமாக இலவச சுகாதார வசதிகள் வழங்கப்பட்ட போதிலும், தற்போது அத்தியாவசிய மற்றும் உயிர் காக்கும் பல மருந்துகளின் பற்றாக்குறை, அவற்றைப் பயன்படுத்தும் இலட்சக்கணக்கான மக்களை கடுமையாக பாதித்துள்ளதென கௌரவ சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டினார்.

ஒரு சில மருந்துகள் தனியார் துறையினூடாக மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியுமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய எதிர்க்கட்சித் தலைவர், அரச மருத்துவமனைகள் எதிர்கொள்ளும் அச்சவாலை வெற்றிகொள்வதற்காக இலங்கைக்கு அதிகபட்ச ஒத்துழைப்பை வழங்குமாறும், இந்தியா வழங்கும் அவ்வொத்துழைப்பை மரியாதையுடன் வரவேற்பதாகவும் தெரிவித்தார்.

அதேபோல் இலங்கையின் சுகாதாரத் துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக இந்திய அரசாங்கம் கடந்த காலத்தில் வழங்கிய பங்களிப்பையிட்டும் கௌரவ சஜித் பிரேமதாச அவர்கள் நன்றி தெரிவித்தார்.

## ஒரு...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

ஸஹ்ரான் மம்தானியின் வெற்றி குறித்து மேலும் கருத்துத் தெரிவித்த அவர் நிவ்யோர்க் எனும் பெரும் கோட்டை அதன் சத்தம் கேட்காமலேயே இடிந்து வீழ்ந்ததாக தனது ஆதங்கத்தை வெளியிட்டுள்ளார்.

## சவூதியிலிருந்து...
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

உள்ளது.

சவூதி அரேபியாவின் தூதுவர் தகவலை உதயத்துக்கு உர்ஜிதப்படுத்தினார். முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களத்தின் ஊடாக இந்த குர்ஆன் பிறவிகள் விநியோகம் நடைபெற உள்ளது என்றும் தூதுவர் மேலும் தெரிவித்தார்.




## அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதுடன் நாளை பகல் ஒரு மணிக்கு வரவுசெலவுத்திட்டம் தொடர்பான ஜனாதிபதியின் விளக்கவுரையும் இடம்பெறவுள்ளது.

எனவே, "இம்முறை அபிவிருத்தி சார்ந்த வரவு செலவுத் திட்டமே முன்வைக்கப்படும். இதுவரை காலமும் சலுகைகள் கிடைக்காத மக்களுக்கும் எதிர்பார்ப்புகளுடன் இருக்கும் வர்த்தக சமூகத்தினர், பல்கலைக்கழக மாணவர்கள் என சகலருக்கும் அவசியமான அபிவிருத்தி வரவுசெலவுத் திட்டத்தை அதாவது நாட்டை கட்டியெழுப்பும் வரவுசெலவுத்திட்டத்தை முன்வைக்க அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக" கொழும்பில் நேற்று (14) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் இரண்டாவது வரவுசெலவுத் திட்டமாக இது அமைவதுடன் மிகவும் முக்கியமான திருப்புமுனையாகவும் இது கருதப்படுகிறது. பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்ட கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கமைவாக இலங்கையின் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புகளை மீள செலுத்தும் பணிகள் எதிர்வரும் 2028ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பமாகின்றன.

எனவே, அதற்கு இடைப்பட்ட 2026 மற்றும் 2027ஆம் ஆண்டு ஆகிய இரு வருடங்கள் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியின் முக்கியமாக இரு வருடங்களாக கொள்ளப்படுகின்றன. 2028 ஆம் ஆண்டாகும் போது இலங்கை 05 பில்லியன் அமெரிக்க டொலரை கடனாக செலுத்த வேண்டி ஏற்படுமென்று நிபுணர்கள் எதிர்வு கூறியுள்ளார்கள்.

அண்மையில் கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் நடைபெற்ற "இலங்கையின் மீட்சிக்கான பாதை: கடன் மற்றும் நிர்வாகம்" (ளுசை டுயமெய'ள சுழயன வழ சுநஉழஎநசல: னுநடிவ யனெ புழஎநசயெஉந) என்ற கருத்தரங்கில் "2028 ஆம் ஆண்டளவில் நாம் செலுத்த வேண்டிய வெளிநாட்டுக் கடன்களை சொந்த முயற்சியின் மூலம் செலுத்தக் கூடிய பொருளாதார வளர்ச்சி மற்றும் ஸ்திரத்தன்மை நாட்டில் உருவாக்கப்படுமென" ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்திருந்தார். இந்த அறிவிப்புக்கு ஏதுவாக இம்முறை வரவுசெலவுத் திட்டம் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் பின்னணியில், வரவுசெலவுத் திட்டம் மீதான உரை நாளை இடம்பெறவுள்ளதுடன், அதனைத் தொடர்ந்து நவம்பர் 08ஆம் திகதி முதல் டிசம்பர் 05ஆம் திகதிவரை விவாதத்தை நடத்துவதற்கு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு தீர்மானித்துள்ளது.

நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதியினால் நாளை 07ஆம் திகதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் இரண்டாவது மதிப்பீட்டுக்காக (வரவுசெலவுத்திட்ட உரை) பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும். அதனைத் தொடர்ந்து நவம்பர் 08ஆம் திகதி முதல் நவம்பர் 14ஆம் திகதி வரை 06 நாட்கள் இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்தை நடத்துவதற்கு இங்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய நவம்பர் 14ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு இரண்டாவது மதிப்பீட்டுக்கான வாக்கெடுப்பு நடத்தப்படும்.

இதன் பின்னர் நவம்பர் 15ஆம் திகதி முதல் டிசம்பர் 05ஆம் திகதி வரை 17 நாட்கள் குழுநிலை விவாதம் நடத்தப்படவுள்ளதுடன், டிசம்பர் 05ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு மூன்றாவது மதிப்பீட்டுக்கான வாக்கெடுப்பை நடத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் அரசாங்க விடுமுறைகள் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள் தவிர சனிக்கிழமை உள்ளிட்ட ஏனைய அனைத்து நாட்களிலும் வரவுசெலவுத்திட்ட விவாதம் இடம்பெறும். குழுநிலை விவாதம் நடைபெறும் காலப்பகுதியில் திங்கட்கிழமைகளில் காலை 9.30 மணிக்கும் ஏனைய நாட்களில் காலை 9.00 மணிக்கும் பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய இக்காலப் பகுதியில் நிலையியற் கட்டளை 22இல் குறிப்பிடப்பட்டுள்ள 01 முதல் 06 வரையான பாராளுமன்ற அலுவல்களுக்கு மேலதிகமாக வாய்மூல விடைக்கான ஐந்து கேள்விகள் மற்றும் நிலையியற் கட்டளை 27(2) இன் கீழான கேள்வி ஒன்றுக்காகவும் நேரத்தை ஒதுக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக்காலப் பகுதியில் மாலை 6.00 மணிவரையும் வரவுசெலவுத்திட்ட விவாதத்தை நடத்துவதற்கும் வாக்கெடுப்பு நடத்தப்படும் தினங்கள் தவிர்ந்த ஏனைய தினங்களில் மாலை 6.00 மணி முதல் 6.30 மணிவரையான காலப்பகுதியை ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சிக்கு 50:50 என்ற அடிப்படையில் சபை ஒத்திவைப்பு நேரத்தின்

## மம்தானி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வயதுடைய Democratic party இன் வேட்பாளராக போட்டியிட்டு வெற்றியீட்டிய மம்தானி நேற்று நடைபெற்ற தேர்தலில் முன்னாள் ஆளுநர்களில் ஒருவரான அன்ட்ரு குமோம் உட்பட அனைத்து வேட்பாளர்களையும் தோற்கடித்து வெற்றியீட்டியுள்ளார்.

பாரிய வர்த்தக மற்றும் அரசியல் செல்வாக்கு பெற்ற நகரமான நியூயோர்க்கின் முதலாவது முஸ்லிம் மேயராக இவர் வரலாற்றில் இடம்பெறுகிறார்.

இந்தியா அமெரிக்க சந்ததியான மம்தானி இந்தியாவின் பிரபல திரைப்படத் தயாரிப்பாளரான திருமதி மீரா நாசரின் மகனாவார்.

மம்தானி தேர்தலில் வெற்றி பெற்றால் நியூயோர்க் நகரத்துக்கான அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீடுகளை குறைப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சவால் விடுத்து இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பங்களாதேஸ்க்கு...


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்களாதேஸ் தலைநகர் டாக்காவில் மாபெரும் இஸ்லாமிய விளக்க மாநாடு ஒன்றில் பங்கேற்க்க இருந்த நிலையிலேயே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசாங்கம், டாக்டர் ஸாகிர் நாயக் அவர்களுக்கு ஒரு மாத காலத்திற்கான வீஸா அனுமதி கொடுத்திருந்த நிலையிலேயே தற்போது இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.







www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

2025 NOVEMBER 07 - FRIDAY

WEB: www.uthayam.lk

E-mail: editor.uthayam@gmail.com

FB ID: உதயம்

## ரடம எகட வேலைத்திட்டம் வெற்றிபெற அர்ப்பணிப்புடன் உழைப்போம்

ஒரு காலத்தில் எனது தாய்நாடு தர்ம தீபமாக கருதப்பட்டது. இன்று பாதாள உலக செயற்பாடுகள் போதை வஸ்து பாவனை என்பவற்றில் பிரபலமான ஒரு நாடாக மாறியுள்ளது. சர்வதேச மட்டத்தில் இலங்கை தவறான ஒரு கண்ணோட்டத்தில் நோக்கப்படுவதை அவதானிக்கின்றோம். இந்த நிலை குறித்து இலங்கையர்கள் வெட்கித் தலைகுனிய வேண்டி ஏற்பட்டுள்ளது. ஒரு காலத்தில் தர்ம தீபமாக கருதப்பட்ட எமது நாடு இன்று குடு இராச்சியமாக ஏளனப்படுத்தப்படுகிறது. முன்பெல்லாம் சொற்ப அளவில் அருந்தப்படுவதாக கூறப்படும் போதைத்தூள்கள் இன்று கொள்கலன்களில் கண்டுபிடிக்கப்படுவதனை நாளாந்த செய்திகளில் அவதானிக்க கூடியதாகவுள்ளது. ஐஸ் என்ற போதைப்பொருள் நாட்டில் கட்டுப்பாடு இன்றி உற்பத்தி செய்யப்படுவதாக பொலீசார் தெரிவிக்கின்றனர். நாட்டின் நாளைய எதிர்காலம் இன்றைய நாளை விட மிக மோசமாக உள்ளது. ஒவ்வொரு பெற்றாரும் தன் பிள்ளையை இந்த ஆபத்தில் இருந்து பாதுகாப்பது எவ்வாறு என்பது தெரியாமல் தலையில் கையை வைத்து அங்கலாய்க்கின்றனர். இந்த அனர்த்தத்தில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கும் எதிர்கால பரம்பரையினரைப் பாதுகாப்பதற்கும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில் கடந்த வாரம் "ரடம எகட– முழு நாடும் ஒன்றாக" என்ற தொனிப்பொருளில் தேசிய நிகழ்ச்சி ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. நாடு இன்றுள்ள நிலையில் இந்த தேசிய நிகழ்ச்சி மிக முக்கியம் வாய்ந்தது. நச்சுப் போதை வஸ்துகளை இந்த நாட்டில் இருந்து முழுமையாக ஒழித்துக் கட்டுவதற்கான தேசிய நிகழ்ச்சியை வெற்றி பெற வைப்பது நாட்டு மக்களாகிய எம் எல்லோர் மீதும் உள்ள கடமையாகும். இந்த நிகழ்ச்சியை ஆரம்பித்து உரையாற்றிய ஜனாதிபதி, "நாட்டை நாசக்கார வழிக்கு விட்டு செல்லும் ஒரு சிறு குழுவுக்கு இடமளிப்பதாயின் நாம் யார்?" என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

இப் போதைவஸ்து ஆக்கிரமிப்பில் இருந்து இந்த நாட்டை மீட்டெடுப்பதற்கு அரசு ஆரம்பித்துள்ள இந்த வேலைத்திட்டத்திற்கு இன மத கட்சி பேதமின்றி ஆதரவு வழங்குவது சகல பிரஜைகளினதும் கடமையாகும்.

குடுவை விற்பனை செய்யும் சகலரும் உடனடியாக சரணடையுமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். குடு வியாபாரம் இவ்வளவு காலமும் அரசியல்வாதிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், மற்றும் அதிகாரிகளின் ஆசிர்வாதத்துடனேயே இயங்கி வந்திருக்கின்றது. போதைவஸ்து வியாபாரம் விரைவாக பணம் சம்பாதிக்க கூடியதொன்றாக உள்ளது. அனேகமானவர்கள் இதன் பாதிப்பை உணராது இந்த வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் உடனடியாக அதனை விட்டு வெளியேறுவதன் அவசியத்தினை ஜனாதிபதி தனது உரையில் வலியுறுத்தியுள்ளார். ஜனாதிபதி விடுத்துள்ள இந்த அழைப்பானது எமது எதிர்கால பரம்பரையினரை பாதுகாப்பதற்கு கிடைத்துள்ள ஒரு சிறந்த நடவடிக்கையாகும். அரசியல் கட்சி பேதமின்றி, மத பேதமின்றி இந்த தேசிய இயக்கத்தை வெற்றி பெற செய்வதன் மூலமே எமது நாட்டுக்கு விமோசனம் கிடைக்கும். எமது எதிர்கால பரம்பரையினர் இதனால் விமோசனம் பெறுவர். அரசியல் பேதங்களை மறந்து சகலரும் அரசு ஆரம்பித்துள்ள "முழு நாடும் ஒன்றாக" என்ற தேசிய திட்டத்தினை வெற்றி பெற செய்வதற்கு அர்ப்பணிப்புடன் உழைப்பது அவசியமாகும்.

# தேசிய அல்-குர்ஆன் போட்டி - 2025

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதரகத்தின் பூரண கண்காணிப்பின் கீழ், சவூதி அரேபிய இஸ்லாமிய விவகார அமைச்சின் பூரண அனுசரணையுடன், இலங்கை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்தும் அல்குர்ஆன் மனனப் போட்டியினை கடந்த இரண்டு ஆண்டுகள் (2023, 2024) சிறப்பாக நடாத்தியதைத் தொடர்ந்து இவ்வாண்டும் (2025) மூன்றாவது தடவையாக நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக திணைக்களப் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் போட்டி தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இப்போட்டியின் இறுதிப் போட்டியானது எதிர்வரும் 2025 டிசம்பர் மாதத்தின் ஆரம்பப் பகுதியில் கொழும்பில் நடாத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்போட்டிகள் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அரபுக் கல்லூரிகள், ஹிப்ழுல் குர்ஆன் மத்ரஸாக்கள் மற்றும் அரச பாடசாலைகள் அல்லது அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களை மையப்படுத்தி ஆண், பெண் இரு பாலாருக்கும் நான்கு பிரிவுகளாக நடாத்தப்படும். ஒவ்வொரு பிரிவிலும் வெற்றிபெறும் போட்டியாளர்கள் சவூதி அரசாங்கத்தினால் பெறுமதியான பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படுவர்.

மேற்படி போட்டியில் பங்குபற்றுவதற்கு தகுதியான போட்டியாளர்களைத் தெரிவு செய்யும் ஆரம்பகட்டப் போட்டி 2025 நவம்பர் மாதம் பிராந்திய ரீதியாக நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போட்டிகள் கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு, குருணாகல், வவுனியா போன்ற நிலைகளில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, போட்டிகள் கீழ்வரும் பிரிவுகளில் நடைபெறும்

பிரிவு –01, அல்குர்ஆன் முழுவதும், (சூரதுல் பகறா முதல் 1 30 வரையான ஜுஸ்உகள்), ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம், வயது 15–23 வரை.

பிரிவு –02, ஆரம்ப பத்து ஜுஸ்உகள், (சூரதுல் பகறா முதல் 1 –10 வரையான ஜ/ஸ்உகள்), ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம். வயது 12–20 வரை.

பிரிவு – 03, ஆரம்ப ஐந்து ஜுஸ்கள், (சூரதுல் பகறா முதல் 1 – 05 வரையான ஜ/ஸ்உகள்), ஆண் பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம். வயது10–15 வரை.

பிரிவு – 04, ஆரம்ப இரண்டு ஜுஸ்உகள், (அலிப் லாம் மீம் சயகூலு 1,2 ஆகிய ஜுஸ்உகள்) அல்லது (துபாரகல்லதிஅம்மா 29,30 ஆகிய ஜுஸ்உகள்), ஆண் பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம். வயது 07–12 வரை.

போட்டியின் நிபந்தனைகள்: இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட அரபுக் கல்லூரி, ஹிப்ழ் குர்ஆன் மத்ரஸா, அரச பாடசாலைகள் அல்லது அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் கல்வி கற்பவராக இருத்தல், ஒரு போட்டியாளர் ஒரு பிரிவில் மாத்திரமே கலந்துகொள்ள முடியும், போட்டியாளர்கள் ஏதாவது ஒரு சர்வதேச போட்டியில் ஏற்கனவே கலந்துகொள்ளாதவராகவும், கடந்த 2023,2024 ஆம் ஆண்டுகளில் சவூதி தூதரகத்தால் நடாத்தப்பட்ட போட்டியில் கலந்துகொண்டு பரிசு பெறாதவராகவும் இருத்தல் வேண்டும், அடையாள அட்டை / விண்ணப்பதாரிகளின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், செல்லுபடியாகும் கடவுச் சீட்டின் சான்றுப் பிரதிகள். மேலும், அடையாள அட்டை இல்லாதவர்கள் 2"X2" அளவிலான புகைப்படத்தின் பின்பக்கத்தில் பெயர், முகவரி என்பவற்றை குறிப்பிட்டு கல்லூரி அதிபர் மூலம் அத்தாட்சிப்படுத்தி போட்டியின் போது சமர்ப்பித்தல் வேண்டும், 2025.11.30 ஆம் திகதியில் போட்டிப்பிரிவுக்குரிய வயது கணிக்கப்படும், போட்டியில் கலந்து கொள்ளும் போட்டியாளர்களுக்கு எவ்வித கொடுப்பனவுகளும் வழங்கப்பட மாட்டாது,

போட்டி முடிவுகள் தொடர்பாக நடுவர்களின் தீர்மானமே இறுதியானதாகும், போட்டியாளர்கள் திணைக்களத்தின் விதிகளை மீறும் பட்சத்தில் போட்டியில் பங்குபற்றும் தகைமையை இழந்தவராக கருதப்படுவர், டிசம்பர் மாதம் நடைபெறும் இறுதிப் போட்டிக்கு பிராந்தியத்தில் இருந்து தெரிவு செய்யப்படும் போட்டியாளர்கள் மாத்திரமே அனுமதிக்கப்படுவர், பிராந்தியங்களில் இருந்து தெரிவுசெய்யப்படும் போட்டியாளர்களின் எண்ணிக்கையை இத்திணைக்களமே தீர்மானிக்கும்.

விண்ணப்பங்களை பழழபடந கழசஅ ஊடாக மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். Google link https://forms.gle/DunA6FwtrMs3eZ2j8

விண்ணப்பதாரிகள் இதன் (உயசன உழில) யை போட்டியில் கலந்து கொள்ளும் அன்றைய தினம் சமர்ப்பித்தல் வேண்டும்.

குறிப்பு: google form ஊடாக மாத்திரமே விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். அதை விடுத்து தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்ப முடிவுத் திகதி: 2025.11.09






# இலங்கையில் கூரை மேல் அமைக்கப்பட்ட பாரிய சூரிய சக்தி மின்சார உற்பத்தி திட்டம்

(எம்.எஸ்.எம்.முன்தஸிர்)

இலங்கையின் கூரைமேல் அமைக்கப்பட்ட பாரிய சூரிய சக்தி மின்சார உற்பத்தி திட்டம் தேசிய மக்கள் சக்தி அரசின் கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துநத்தி, தொழிலமைச்சரும் பிரதி நிதியமைச்சருமான அனில் ஜயந்த, மின்சக்தி பிரதி அமைச்சர் அர்கம் இல்யாஸ், களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நன்தன பத்மகுமார ஆகியோரின் பங்களிப்புடன் களுத்துறை மாவட்டத்தின் பண்டாரகம பிரதேச செயலகப் பிரிவில் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த கூரைமேல் பாரிய சூரிய மின் சக்தி மின் திட்டம் இலங்கையின் பிரபல டைல் உற்பத்தி நிறுவனமான மெக்டைல்ஸ் நிறுவன தொழிற்சாலையின் கூரைமேல் அமைக்கப்பட்டுள்ளது. இந்த சூரிய சக்தி மின் திட்டத்தின் மூலம் 10 மெகாவொட் சூரிய சக்தி மின் சக்தி திறன் கொண்டதாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் இந்த பிரபல டைல்ஸ் தொழிற்சாலையின் பல்வேறு பிரிவுகளையும் செயல்பாடுகளையும் அமைச்சர்கள் குழுவினர் சுற்றிப் பார்வையிட்டனர்.

இந்த Macktiles Solar Power Launch-2025 திட்ட ஆரம்ப நிகழ்வில் மெக்சன்ஸ் கூட்டு நிறுவனங்களின் தலைவர் மில்பர் மகீன், முகாமைத்துவ பணிப்பாளர் மிஸ்வர் மகீன் உள்ளிட்ட பல்வேறு பிரமுகர்களும் கலந்து



கொண்டனர்.

# அனுராதபுரத்தில் யோகா பயிற்சித் திட்டம் ஆரம்பம்

(எம்.ரீ. ஆரிப்)

அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களின் மன ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையில் வடமத்திய மாகாண விளையாட்டு வளாகத்தில் யோகா நிகழ்ச்சி திட்டம் மாகாண ஆளுநர் வசந்த ஜினதாசவின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அனுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 300 மாணவர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். களனி பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் பயிற்சி ஆலோகரினால் இந்த நிகழ்ச்சி மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இது வடமத்திய மாகாண ஆயுர்வேதத்துறையின் பிரஜா சுகாதார மருத்துவ பிரிவினால் ஏற்படு செய்யப்பட்டிருந்தது. இதன் நோக்கம் ஆரோக்கியமான மனம் , ஆரோக்கியமான உடல் நலம் கொண்ட ஆரோக்கியமான உடல் கட்டமைப்பை கொண்ட எதிர் கால தலைமுறை நிறைந்த





பிரஜைகளை உருவாக்குவதாகவும்

இந்நிகழ்வில் மாகாண ஆயுர்வேத ஆணையாளர் பிரியாணி மல்காந்தி, மாகாண விளையாட்டு பணிப்பாளர் கயான் இந்திக்க வன்னி நாயக்க , மாகாண பிரதி ஆயுர்வேத ஆணையாளர் நிலந்த கழு கரந்த , அனுராதபுரம் ஆயுர்வேத வைத்தியசாலையின் பணிப்பாளர் ஷிராணி குணவர்தன, ஆளுநரின் ஊடகச் செயளாளர் அதுல பீரிஸ் , களனி பல்கலைக் கழக விரிவுரையாளர் பிரியந்த ஹெட்டிகே ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மாணவர்களின் திறமைகளை வளர்க்க களம் அமைத்து கொடுக்க வேண்டும்

(உக்குவளை நிருபர்)

மாணவர்களிடமுள்ள திறமைகளை வளர்க்க ஆசிரியர்களும் பெற்றோர்களும் அவர்களுக்கு களம் அமைத்துக்கொடுக்க வேண்டும் என மாத்தளை உதவிக் கல்விப்பணிப்பாளரும் கவிஞருமான எம். ராசிக் தெரிவித்தார்.

உக்குவளை “இளைய நிலா” ஆசிரியை பஸ்மினாவின் ஏற்பாட்டில் உக்குவளை எழுத்தாளர்கள் கலைஞர்கள் கவிஞர்கள் இணைந்த ஸ்ரீ லங்கா இஸ்லாமிய எழுத்தாளர்கள் அமைப்பின் ஒன்றுகூடலொன்று அன்மையில் குரீவெல ஹமீதியா பாடசாலையில் நடைபெற்ற போது அவர் அங்கு தலைமை வகித்து கருத்துக்களை தெரிவித்தார்.

மறைந்த நாடறிந்த நாடக சித்திர கலைஞர் ரைத்தலாவெல அசீஸ் 2000 ம் ஆண்டில் உக்குவளையில் ஆரம்பித்த இவ்வமைப்பில் பலதுறை கலைஞர்கள் அங்கம் வகித்ததுடன் அவர்களின் கலைநிகழ்ச்சிகள் பல உக்குவளையில்



நடாத்தப்பட்டன. இதனையடுத்து இளம் தமிழ், சிங்கள கலைஞர்களும் இவ்வமைப்பில் இணைந்து கொண்டு அவர்களது திறமைகளை வெளிக்கொணர களமாக அமைந்தது. இன்றும் ஊடகங்களுக்கு கதை, கட்டுரை, கவிதைகள், ஆக்கங்கள் எழுதுபவர்களையும் காணமுடிகிறது. அதிலும் பெண்கள் நிறையவே எழுதுகின்றனர். இது வரவேற்கத்தக்கதாகும். அவர்கள் தொடர்ந்து எழுத வேண்டும் அத்துடன் பத்திரிகைகள் பயனுள்ள நூல்களையும் அவர்கள் வாசித்துப் பயனடையவேண்டும் இந் நிலையில் மாணவர்களது திறமைகளை வளர்க்க ஆசிரியர்களும் பெற்றோர்களும் அவர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

# கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் பத்தி எழுத்தாளர்களுக்கான செயலமர்வும், சஞ்சிகைகளுக்கான கௌரவிப்பும்

(நூருல் ஹுதா உமர்)

“அரச விருதுகளை நோக்கிய நூல்களை உருவாக்குவதில் உள்ள சவால்கள்” எனும் தலைப்பில் பத்தி எழுத்தாளர்கள் மற்றும் எழுத முனைவோருக்கான செயலமர்வும் சஞ்சிகைகளுக்கான கௌரவிப்பும் வியாழக்கிழமை (30)அம்பாறை மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் நிந்தவூர் பிரதேச பை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மாவட்ட கலாசார உத்தியோகத்தர் டீ.எம். ரிம்ஸானின் நெறிப்படுத்தலில் நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம். அப்துல் லத்தீப் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். ஜெகராஜன் பிரதம அதிதியாகவும், நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் ஏ. அஸ்பர் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் “பன்னிரெண்டு மாத விளக்கு” வேலைத்திட்டத்தின் கீழ் தேசிய வாசிப்பு மாதத்தினைச் சிறப்பிக்கு முகமாக நடந்தேறிய இந்த நிகழ்வில் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறை தலைவர் சிரேஷ்ட பேராசிரியர்









எம். றமீஸ் அப்துல்லாஹ் வளவாளராக கலந்து கொண்டு அரச விருதுகளை நோக்கிய நூல்களை உருவாக்குவதில் உள்ள சவால்கள் மற்றும் பத்தி எழுத்தாளர்கள் மற்றும் எழுத முனைவோருக்கான வழிகாட்டலை செய்திருந்தார்.

அம்பாறை மாவட்ட கரையோர பிரதேச செயலகங்களைச் சேர்ந்த கலாசார உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் என பலரும் இந்நிகழ்வில் பங்கேற்றதோடு தொடர்ச்சியாக சஞ்சிகைகள் வெளியிட்ட குழுவினருக்கான கௌரவிப்பும், பங்குபற்றியோருக்கான பாராட்டுப் பத்திரமும் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# சவாலுக்குள்ளாகியுள்ள உன்னிச்சை பூர்வீக கிராமம்

**எம்.ஐ.அப்துல் நஸார்**

காத்தன்குடி மீடியா போரம் பின்தங்கிய கிராமங்களை எழுச்சியுறச் செய்தல் என்ற எண்ணக்கருவின் அடிப்படையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (26) உன்னிச்சை இருநூறுவில் கிராமத்திற்கு கள விஜயமொன்றை மேற்கொண்டு அங்குள்ள குறைபாடுகளை நேடியாக கண்டறித்து அது தொடர்பான தகவல்களை ஊடகமயப்படுத்தி தீர்வுகளை பெற்றுக் கொடுக்கத் முயற்சிக்கின்றது.

### அறிமுகம்

மட்டக்களப்பு மாவட்டம், வவுணதீவு பிரதேச செயலகத்திற்குட்பட்ட உன்னைிச்சை இருநூறுவில் கிராமம் பரந்து விரிந்த இயற்கை அழகு நிறைந்த பசுமையான வயல்வெளிகளைக் கொண்ட முஸ்லிம் பூர்வீக கிராமமாகும். இப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்களின் பிரதான ஜீவனோபாயமாக விவசாயமும் காலநடை வளர்ப்புமே காணப்பட்டன.

பல்வேறு சவால்களைக் கடந்து சொற்ப எண்ணிக்கையான மக்களே இக் கிராமத்தில் நிரந்தரமாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களும் தற்போது காணப்படுகின்ற நெருக்கடிகளை எதிர்கொள்ள முடியாத நிலையில் தமது இருப்பிடங்களை விற்றுவிட்டு வேறு இடங்களுக்கு புலம்பெயர்வதற்கு தயாராகி வருகின்றனர்.

விட்டுவிட்டு அல்லது விற்றுவிட்டு வேறு இடங்களுக்கு குடிபெயர்வது தொடர்பில் கவனம் செலுத்தி வருகின்றன. அவ்வாறு இடம் பெயர்தல் இடம்பெறுமானால் முஸ்லிம்களின் பூர்வீகக் கிராமமான உன்னிச்சை இருநூறுவில் என்ற கிராமம் இல்லாமல் போவதற்கான அபாயம் காணப்படுகின்றது.

சமூகத் தலைவர்கள், தொண்டு நிறுவனங்கள், அரசியல் தலைமைத்துவங்கள் இது தொடர்பில் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும். அப் பிரதேச மக்களின் வாழ்வாதரத்தினையும், பாதுகாப்பினையும், அவர்களது இருப்பினையும் உறுதிப்படுத்த முன்வர வேண்டும்.

பிரதேச மக்களின் கருத்துக்கள்

உன்னிச்சை இருநூறுவில் கிராமத்திற்கு மேற்கொண்ட களப் பயணத்தின்போது பிரதேச மக்களும், அப்பிரதேசத்தில் அமைந்துள்ள முஹைதீன் ஜ/ம்ஆப் பள்ளிவாயலின் நிருவாகிகளும் தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

குறித்த பிரதேசத்தில் வசித்துவரும் சபீனா உம்மா, மக்கியா உன்னிச்சை இறுநூறுவில் கிராமத்தில் அமைந்துள்ள முஹைதீன் ஜ/ம்ஆப் பள்ளிவாயலின் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் கே.எல்.எம்.பரீட், பள்ளிவாயலின் நம்பிக்கையாளர் சபை உபதலைவர் எம்.எஸ்.எம்.நாஸர் மற்றும் பள்ளிவாயலின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர் எம்.எஸ்.

பயிர்களை நட்டாலும் குரங்கு மற்றும் யானைகளின் தொல்லைகள் காரணமாக அறுவடை செய்ய முடியாமலுள்ளது. மாங்காய், பலாக்காய், மரவள்ளி மற்றும் தென்னை போன்றவற்றை எம்மால் அறுவடை செய்ய முடியாமலுள்ளது. இரவு வேளைகளில் யானை வரும் என்ற பயத்தினால் சரியாகத் தூங்கக் கூட முடிவதிலை. நாம் கஷ்டப்பட்டு உழைப்பதைக் கூட எம்மால் நிம்மதியாக சாப்பிட முடியாமலுள்ளது.

இந்தக் கஷ்ட நிலை காரணமாகவே இங்கு வசித்த பலர் வெளியேறினர். இங்கு வீதிப் பிரச்சனையும் போக்குவரத்துப் பிரச்சினையும் காணப்படுகின்றன. இந்த வீதி பஸ் செல்லுகின்ற பிரபலமான வீதியாகும். அதிகாரிகள் இந்த வீதிக்கு வருவார்கள், அளவீடு செய்வார்கள், வீதியைப் போடுவோம் என்று சொல்வார்கள் ஆனால் எதுவும் இடம்பெறுவதில்லை. மழை காலத்தில் இந்த வீதியில் நடக்க முடியாது ஏனென்றால் இந்த வீதி கடுமையாக வழுக்கும், இந்தக் காலப் பகுதியில் சோளன், கச்சான் விதைப்பதற்காக மூடைகளில் கட்டிக்கொண்டு செல்வோர் வழுக்கி விழுகின்ற சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அதனை வெறுமனே சொன்னால் புரியாது, அவற்றை நேரில் பார்ப்பவர்களுக்குத்தான் அதன் வலி புரியும். இப்படி ஒரு கிராமம் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை கண் விழித்தப் பாருங்கள். இரண்டு நாட்களுக்கு

இருப்பதற்கு இடம் கொடுத்தனர். தற்போது உங்களுக்குத் தெரியும் இலங்கையில் மூன்றாம் பரம்பரைக்கு காணிகள் கணங்கப்படுகின்ற காலகட்டத்தில் முதலாவது பரம்பரைக்கு காணி இல்லாமல் இருந்து கொண்டிருக்கின்றோம். முதலாம் பரம்பரைக்கே இங்கு காணி இல்லை மூன்றாம் பரம்பரைக்கு அரச காணிகளை வழங்குகின்றனர். ஏற்கனவே அகதிகளாக உன்னிச்சையிலிருந்து சென்ற மக்கள் காத்தான்குடியில் காணியினைப் பெற்று அதில் வாழ்ந்து தற்போது அவர்களது பிள்ளைகளுக்கு அக் காணியினைக் கொடுத்துவிட்டனர். அந்தத் தாய் தகப்பன் இருப்பதற்கு இடமில்லாமல் அவஸ்தைப்படுவதை நினைத்து நாம் மிகவும் கவலையடைகின்றோம். இங்கு வருவதற்கு விரும்புபவர்களை நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம். யாராவது காணி இல்லை என்று வந்தால் அவ்வாறானவர்களுக்கு குடியிருப்பதற்கு பள்ளிவாயல் ஊடாக காணிகளை வழங்க தயாராக இருக்கின்றோம்.

தற்போது இங்கிருக்கின்ற 12 குடும்பங்களுக்கு குடிப்பதற்கு சுத்தமான குடிநீர் இல்லை, கழிவறை வசதி இல்லை, யானைகளைத் தடுப்பதற்கு யானை வேலி இல்லை. இவற்றை நிறைவேற்றுவது யார்? இங்குள்ள மக்களுக்கு ஒரு சோற்றுப் பார்சலையாவது கொடுப்பது என்பது மிகவும் நன்மை தரக்கூடிய விடயமாக அமையும். 12 குடும்பங்கள் இக் கிராமத்தைப் பாதுகாத்து

இங்கு உருவாக்கவுள்ளோம். காத்தன்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம், காத்தான்குடி ஜம்இய்யதுல் உலமா ஆகியவற்றை நாம் இங்கு அழைத்து வரவுள்ளோம். பல பிரமுகர்களையும் நாம் சந்திக்கவுள்ளோம். இங்குள்ள தமிழ் மக்கள் மிகவும் இரக்கமுள்ளவர்கள், அன்புடன் பழகக்கூடிய நல்ல மக்கள். அவர்களுடன் நாமும் நல்லிணக்கத்துடன் வாழ விரும்புகின்றோம்.

இந்த மக்களின் வாக்குகளைப் பெற்றவர்கள் இவர்களுக்கான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். ஏராளமான மக்கள் மீளத் திரும்ப முடியாமல் இருக்கிறார்கள், அவர்கள் மீளத் திரும்ப வேண்டுமென்றால் அவர்களுக்கான வசதிகள் இங்கு செய்து கொடுக்கப்பட வேண்டும். ஊடகங்கள் இதற்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்க வேண்டும்.


### முஹைதீன் ஜும்ஆப் பள்ளிவாயலின் நம்பிக்கையாளர் சபை உப தலைவர் எம்.எஸ்.எம். நாஸர் :

இந்தக் கிராமம் எமது மூதாதையர்கள் வாழ்ந்த இடமாகும். இங்கு முஸ்லிம்கள், தமிழர்கள் மற்றும் சிங்களவர்கள் என மூவினத்தையும் சேர்ந்த மக்கள் இன மத வேறுபாடுகளின்றி வாழ்ந்தனர். இங்கு வாழ்ந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் அரசாங்கத்தினால் எட்டு ஏக்கர் காணி வழங்கப்பட்டது. இதில் விவசாய நடவடிக்கைகளுக்கு ஐந்து ஏக்கர் காணியும், குடியிருப்புக்கென மூன்று ஏக்கர் காணியும் வழங்கப்பட்டது. இனக் கலவரம் ஏற்படுவதற்கு முன்னர் வரை 100 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இங்கு வாழ்ந்து வந்தன. அனைவரும் ஒற்றுமையாக வாழ்ந்தாலும் 1985 ஆம் ஆண்டு தீய எண்ணம் கொண்ட சிலரால் பெரும் தீங்கு இழைக்கப்பட்டது. இந்தப் பிரதேசத்தில் ஒவ்வொரு போடிமார்களுக்கு 30 மற்றும் 40 ஏக்கர் அளவில் காணிகள் சொந்தமாக இருந்தன. வன் செயல் காலத்தில் இக் காணிகள் அனைத்தும் அபகரிக்கப்பட்டன அக் காலப் பகுதியில் முஸ்லிம்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் தொடர்பில் எந்தத் தகவலும் வெளியில் வரவில்லை. இங்கு அழகிய பள்ளவாயல் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு விவசாய நடவடிக்கையில் ஈடுபடும்போது ஒரு வருட காலத்திற்குள் பயனைப் பெற்றுக்கொள்ள முடியும். காத்தான்குடி பிரதேசத்தில் இருந்து 30 கிலோமீற்றர் தொலைவிலேயே இக் கிராமம் அமைந்துள்ளது. அதிகம்பேர் இங்கு வர வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். இதற்கு வீதிகள் சீரமைக்கப்பட வேண்டும், நீர்வசதி ஏற்படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

முஹைதீன் ஜும்ஆப் பள்ளிவாயலின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர் எம்.எஸ்.எம் றாசிக் : கடந்த காலங்களில் வன்செயல்களினால் இக் கிராமம் பாதிக்கப்பட்டிருந்தாலும் பிற்பட்ட காலத்தில் முறையான வகையில் மீள்குடியேற்றம் இடம்பெற வேண்டும் என்பதற்காக முனைப்புடன் செயற்பட்டு வருகின்றோம்.

பள்ளிவாயலின் புதிய நிருவாகமும் இந்தக் கிராமத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு முயற்சித்து வருகின்றது. இது அப்படையில் ஒரு விவசாயக் கிராமம். இங்கு வாழும் மக்களுக்கு குடியிருப்பு வசதிகளையும்






இருப்பும் இடம்பெயர்வும்

1952 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில் இருந்து இந்தப் பிரதேசத்தில் முஸ்லிம்கள் ஏனைய தமிழ் மற்றும் சிங்கள மக்களுடன் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். எனினும் இலங்கையில் குறிப்பாக வடக்கு கிழக்கை மையமாகக் கொண்டு இடம்பெற்ற பிரிவினைவாத யுத்த காலத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட இனவன்முறைகள் காரணமாக 1985 ஆண்டு உன்னைிச்சை இருநூறுவில் கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் காத்தான்குடியில் குடியேறினர்.

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் அடிப்டை வசதிகளற்ற நிலையிலும் இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது வாழிடங்களில் குடியேறினார். புடிப்படியாக அங்கு உட்கட்டமைப்புகள் அங்கு இடம்பெற்ற போதிலும் அங்கிருந்த மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய அவை போதுமானதாக இருக்கவில்லை.

இலங்கையில் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி பயங்கரவாத தற்கொலை குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து இடம்பெற்ற நெருக்கடி நிலை காரணமாக மீண்டும் அப் பிரதேச மக்கள் இடம்பெயர்ந்தனர்.

### கிராம மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள்

நிலைமை சீரடைந்ததன் பின்னர் மக்கள் மீண்டும் குடியமர்ந்த போதிலும் பல்வேறுபட்ட சவால்களை எதிகொள்ள வேண்டியிருந்தது. யானை மற்றும் குரங்குகாளால் ஏற்படும் பிரச்சனைகள், வாழ்வாதாரப் பிரச்சினை, போக்குவரத்துக்கான சீரான பாதைகள் மற்றும் போதிய பஸ் போக்குவரத்தின்மை மற்றும் பிரதேச மக்களின் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்துவதற்கான வைத்தியசாலையின்மை போன்ற பிரச்சினைகள் தொடர்வது அவர்களது இருப்பினையும் பாதுகாப்பினையும் சவாலுக்குட்படுத்தியுள்ளன.

### சமூகக் கடமை

இதன் காரணமாக இங்குள்ள குடும்பங்கள் தமது காணிகளையும் வாழிடங்களையும்





எம் றாசிக் ஆகியோர் தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

சபீனா உம்மா "நான் இந்தப் பிரதேசத்தில் 19 வருடங்களாக வசித்து வருகின்றேன். தொடர்ச்சியாக கஷ்டங்களையே எதிர் கொண்டு வருகின்றேன். தண்ணீர் பிச்சினை, வீதிப் பிரச்சினை, யானை மற்றும் குரங்குகளின் தொல்லை, மா மரங்களில் உள்ள அனைத்து மாங்காய்களையும் குரங்குகள் விடுவதில்லை, பயிர்கள் எவற்றையும் நடுகை செய்ய முடியவில்லை, அனைத்தையும் அழித்து அவை விடுகின்றன. நான் தனியாகவே வசித்து வருகின்றேன், இரவு வேளைகளில் மிகவும் பயங்கரமாக இருக்கின்றது. இங்குள்ள மக்கள் மிகவும் சிரமங்களோடு வாழ்ந்து வருகின்றனர். வீதி அரைவாசி போடப்பட்டுள்ளது, மீதி அரைவாசி போடப்படவில்லை. இந்த வீதியூடாக ஒரு தடவை மாத்திரமே பஸ் வரும், சில நேரங்களில் ஒரு நாள்விட்டு மறுநாள் பஸ் சேவை இடம்பெறும், மழைக் காலங்களில் முழுமையான பஸ் போக்குவரத்து நிறுத்தப்பட்டுவிடும். அவ்வாறான காலப் பகுதியில் நாம் தாண்டியடி வரை நடந்து சென்று அங்கிருந்துதான் பஸ்ஸில் செல்ல வேண்டும். இங்கு வாழ்ந்து வருகின்ற அனைவரது நிலையும் இதுதான் அதனால் தால் இங்கிருக்கின்ற பலர் வெளியேற முயற்சி செய்கின்றனர். இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்து இந்தக் குறைபாடுகளை பூர்த்தி செய்ய வேண்டும் எனத் தெரிவித்தார்.

மக்கியா : நீண்ட காலமாக நான் இங்கு வசித்து வருகின்றேன். எவ்வளவு கஷ்டப்பட்டு இங்குவந்து நின்று பார்த்தால் இந்த மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைப் புரிந்து கொள்ள முடியும். உங்கள் சந்ததிகள் நன்றாக இருப்பார்கள்.

யாராவது சமைத்துக் கேட்டால் சமைத்துக் கொடுக்கின்ற சிறிய கடையொன்றினை நான் நடத்தி வருகின்றேன். இடியப்பம் அவித்துக் கொடுத்தும் வருகின்றேன். இடியப்பம் சுடுவதற்கு மாவு இடிப்பதற்கு சென்று வருவதற்கு தலா நூறு ரூபா வீதம் இருநூறு ரூபாய் செலவாகின்றது, எனக்கு மாவு இடிக்கக் கூடிய இயந்திரம் ஒன்றைப் பெற்றுத் தந்தால் பெரும் உதவியாக இருக்கும்.

உன்னிச்சை இறுநூறுவில் கிராமத்தில் அமைந்துள்ள முஹைதீன் ஜ/ம்ஆப் பள்ளிவாயலின் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் கே.எல்.எம்.பரீட் :

"1985 ஆம் ஆண்டு இப் பிரதேச மக்கள் வெளியேற்றப்பட்டார்கள். அந்தக் காலகட்டத்தில் 101 குடும்பங்கள் இந்தப் பகுதியில் வாழ்திருக்கின்றார்கள். அந்த வரலாறு எங்களிடம் இருக்கின்றது. யுத்த நிறுத்தத்தின் பின்னர் மக்கள் மீளக் குடியேறினார்கள். காணி ஆணையாளரின் உதவியுடன் அவர்களது காணிகள் மீட்டுக் கொடுக்கப்பட்டன. அவர்களுக்ான குடியிருப்பு வசதிகள் மற்றும் குடிநீர் வசதிகள் அவர்களுக்கு செய்து கொடுக்கப்பட்டன. அப்போதிருந்த அரசியல்வாதிகளிடம் நாம் கோரிக்கைகளை முன்வைத்த போதிலும் பெரிதாக அவர்களாலும் எதையும் செய்ய முடியாமல் போய்விட்டது. காத்தான்குடி என்பது ஒரு சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டது என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும் அந்தப் பகுதிக்குள் தான் உன்னிச்சை, உறுகாமம், நொச்சிமுனை, களளியங்காடு இப்படி பல பிரதேசங்களிலிருந்தும் இடம்பெயர்ந்த மக்கள் குடியேறினர். வருகின்ற மக்களை வரவேற்கின்ற ஊர் என்ற வகையில் காத்தான்குடி மக்கள் அவர்களை வரவேற்றனர். அவர்கள்

வருகின்றார்கள். இங்கிருந்து இடம்பெயர்ந்து சென்றவர்கள் சென்ற இடங்களில் நிரந்தரமாக வசிக்க ஆரம்பித்துவிட்டனர், அவர்களது பிள்ளைகள் அங்கு பாடசாலைகளுக்கு செல்கின்றனர், அதனால் அவர்களுக்கு மீள இந்த இடங்களுக்கு வர முடியாமல் இருக்கின்றது. தற்போது முதலாம் தலைமுறையினர் இங்கு வருவதற்கு விரும்புகின்றார்கள், ஆனால் அவர்களது காணிகள் பறிபோயிருக்கின்றன. நாங்கள் அரச அதிகாரிகளை மிகவும் மதிக்கின்றோம். அவர்கள் ஊடாக அந்தக் காணிகளை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.



இந்தப் பள்ளிவாயல் நிருவாகம் எதிர்காலத்தில் அனைத்துத் தரப்பினரையும் அழைத்து இந்த மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய தயாராக இருக்கின்றோம். நீங்கள் அனைவரும் இதற்கு ஒத்துழைப்பாக இருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொளள்கின்றோம்.

எவரும் எந்நேரத்திலும் இங்கு வரலாம். இந் ஊரை வந்து பாருங்கள், இதுபோன்ற சூழல் வேறு எங்கும் கிடையாது. இந்தப் பள்ளிவாயலைச் சுற்றி தோட்டங்கள் காணப்படுகின்றன. மிகச் சுவாத்தியமான இடமாக இது காணப்படுகின்றது. நீங்கள் உங்கள் குடும்பத்தினருடன் இங்கு வாருங்கள், சமைத்து சாப்பிட்டுவிட்டு மகிழ்ச்சியாக பொழுதைக் கழித்துவிட்டு போகலாம். இந்தப் பகுதியில் பல்வேறு வளங்களை நாம்

அதற்கேதுவான உட்டகட்டமைப்பு வசதிகளையும் விரைவாக செய்து கொடுக்க முடியும் என நம்புகின்றேன். இங்குள்ள மக்களின் காணி தொடர்பான ஆவணங்களை பெற்றுக் கொள்வதில் பெரும் சிக்கல்கள் காணப்படுகின்றன. அரச அதிகாரிகாரிகள் இவ் விடயத்தில் தலையிட்டு 1985 ஆண்டிற்கு முன்னரான காணி தொடர்பான இப் பிரச்சினைக்கு சுமூகமான தீர்வை பெற்றுத்தர வேண்டும். எமது பள்ளிவாயலும் இதற்கு பூரணமான ஒத்துழைப்பினை வழங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, ஊடகவியலாளர்களும் முடியுமான உதவிகளை வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன் எனத் தெரிவித்தார்.

# இலங்கை - சவூதி அரேபியா இடையே கடல்சார் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் கலந்துரையாடல்




கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் பின் ஹமூத் அல்-கஹ்தானி ஆகியோருக்கிடையில், கடற்றொழில் அமைச்சில் நட்பு மற்றும் பணி சார்ந்த கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்த சந்திப்பின் போது, இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து கடற்றொழில் மற்றும் மீன்வளத் துறைகளை நவீனமயப்படுத்தும் நோக்கில், தொழில்நுட்ப ஒத்துழைப்பு, முதலீட்டு விரிவாக்கம் மற்றும் அறிவு பரிமாற்றம் போன்ற துறைகளில் உறவுகளை வலுப்படுத்த சவூதி அரேபியா முனைந்துள்ளது.

சவூதி அரேபியாவின் "Vision 2030" தொலைநோக்கு திட்டத்தின் கீழ், மீன்வளர்ப்பு, மீன்வள மேலாண்மை, கடல் ஆராய்ச்சி மற்றும் நீரியல் வள மேம்பாட்டுத் துறைகளில் பெற்றுள்ள முன்னேற்றத்தை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் பாராட்டியதுடன், இலங்கையும் தனது வளமான கடல் பல்லுயிர் வளங்களையும், மூலோபாயமான இந்தியப் பெருங்கடல் இருப்பிடத்தையும் பயன்படுத்தி கடல்சார் பொருளாதார வளர்ச்சியை முன்னெடுக்க உறுதிபூண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இரு தரப்பினருக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடல்களில், மீன்வளர்ப்பு மேம்பாடு, நவீன தொழில்நுட்ப பரிமாற்றம், இறால் வளர்ப்பு தொழில்நுட்பங்களில் இருதரப்பு ஒத்துழைப்பு, மீன்வள உயிரியல் பாதுகாப்பு, மேலும் தீவன உற்பத்தி மற்றும் வடிவமைப்பில் தொழில்நுட்ப உதவி உள்ளிட்ட பல முக்கிய அம்சங்கள் விரிவாக ஆராயப்பட்டன.

அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், இலங்கையின் கடற்றொழில் மற்றும் நீரியல் துறைகளில் சவூதி முதலீட்டாளர்கள் ஈடுபடுவதற்கான சிறப்பு வாய்ப்புகள் மற்றும் முதலீட்டை ஊக்குவிக்கும் அரசாங்க ஆதரவு நடவடிக்கைகள் குறித்து தூதுவரிடம் விளக்கமளித்தார்.

மேலும், தொழில்நுட்ப மற்றும் கல்வி பரிமாற்றம், கடல்சார் ஆராய்ச்சி ஒத்துழைப்பு, இளம் தொழில்நுட்ப நிபுணர்களுக்கான பயிற்சி வாய்ப்புகள் ஆகியவையும் கலந்துரையாடப்பட்டன.

இந்த சந்திப்பில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் பி.கே. கோலித்த கமல் ஜினதாச, சவூதி தூதரகத்தின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், இத்தகைய இருதரப்பு ஒத்துழைப்புகள் இலங்கையின் கடல்சார் பொருளாதார முன்னேற்றத்திற்கும் நீடித்த கடல்வள மேலாண்மைக்கும் புதிய வழிவகை உருவாக்கும் என நம்பிக்கை தெரிவித்தார்.

# செலான் வங்கி மற்றும் கெபிடல் FM & TV இணைந்து நடாத்திய சிறுவர் தின நிகழ்வு..!





உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு செலான் வங்கி மற்றும் கெபிடல் FM & TV இணைந்து நடாத்திய சிறுவர் தின நிகழ்வு மட்ஃமமஃபூநொச்சிமுனை இக்றஃ வித்தியாலத்தில் அதிபர் தலைமையில் மிகச் சிறப்பாக (03) நடைபெற்றது. இதில் செலான் வங்கியின் கிழக்கு மாகாண முகாமையாளர் ருஸ்தி ஹூசைன், மட்டக்களப்பு மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் சட்டத்தரணி பிரபாகரன், கெபிடல் நிறுவன உத்தியோகத்தர்கள், காத்தான்குடி செலான் வங்கியின் முகாமையாளர் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டதுடன் கதிரவன் நாடகக்குழு மூலமாக விழிப்புணர்வு நாடகம் நிகழ்த்தப்பட்டதோடு மாணவர்களுக்கு விளையாட்டு மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்று மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டது.

# போதை வஸ்து ஒழிப்புக்கு மாளிகாவத்தையில் அமோக ஆதரவு

## வாகனங்களில் ஸ்டிக்கர்களை ஒட்டி ஒன்று திரண்ட இளைஞர் யுவதிகள்

அரசாங்கம் ஆரம்பித்திருக்கின்ற "ரடம எகட" என்ற போதை வஸ்து ஒழிப்புக்கான போராட்டத்திற்கு மாளிகாவத்தையில் அமோக ஆதரவு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க இத் திட்டத்தினை ஆரம்பித்து வைத்த அதே தினத்தில் முன்னாள் மாநகர சபை உறுப்பினர் நிஜாமுதீன் தலைமையில் நூற்றுக்கணக்கான இளைஞர் யுவதிகள் இன மத பேதமின்றி ஒன்று சேர்ந்து வாகனங்களுக்கு ஸ்டிக்கர்களை இட்டு தமது ஆதரவை தெரிவித்தனர்.

மாளிகாவத்தையில் போதை வஸ்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முகமாக, இந்த போதை வஸ்துக்கு எதிரான போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து இங்கு உரையாற்றிய முன்னாள் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் நிஜாமுதீன், எதிர்காலத்தில் இப் பிரதேசம் மாளிகாவை தோட்டம் என்று தான் அழைக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

போதையை எதிர்த்து பெரும் மாற்றம் உண்டாவதற்கு இன்றைய இந்த நிகழ்வு முன்னுதாரணமாக திகழ்கின்றது. இங்கு அணிதிரண்டு இருந்த இளைஞர் யுவதிகள் மாளிகாவத்தை பிரதேசத்தை இந்நிலையில் இருந்து மீட்பதற்கு முன்வந்துள்ளனர்.

அவர்களுடன் இணைந்து அரசின் இந்த திட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்க நடவடிக்கை எடுத்து வருவதாக நிஜாமுதீன் மேலும் தெரிவித்தார்.

# ஏட்டுலா கனவாக்கம் அமைப்பின் இரட்டை நூல் வெளியீடு



மட்டக்களப்பு மாவட்டம் ஓட்டமாவடி பிரதேசத்தை சேர்ந்த இளம் எழுத்தாளர்களான பாத்திமா ஹகீமா அமீனுதீன் எழுதிய "என்னைத் தேடாதீர்கள்" மற்றும் அதீனா அபூ உபைதா எழுதிய "நிசப்த வியாக்கியானம்" எனும் இரு கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை (02) ஓட்டமாவடி மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் ஏட்டுலா கனவாக்கம் அமைப்பின் நிர்வாக குழு உறுப்பினரும், ஜே.எம்.ஐ நிருவனத்தின் பணிப்பாளருமான ஜே.எம்.ஐ இஹ்சான் தலைமையில் நடைபெற்றது.

ஹெம்மாதகமை பிரதேசத்தை சேர்ந்தவரும் தற்போது ஐக்கிய அமீரகத்தில் பணிபுரிந்துவருபவருமான இலக்கிய செயற்பாட்டாளர் ஆஷிக் /ஹசைன் பணிப்பாளரை கொண்டு இலைமறை காய்களாய் இருக்கும் சிந்தனைத்திறன் மிக்க எழுத்தாளர்களின் புத்தகக் கனவை நனவாக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட "ஏட்டுலா கனவாக்கம்" அமைப்பின் இரட்டை நூலாக இது வெளியீடு செய்யப்பட்டது.

"இலக்கிய உலகில் உலா வரக் காத்துநிற்கும் படைப்புகளை கோர்த்து புத்தகமாக்கும் ஓர் முயற்சி" என்ற தொனிப்பொருள் தாங்கிய இன் நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் முகாமைத்துவ பீடம், கணக்கியல் பேராசிரியர் கலாநிதி. எம்.சி.ஏ. நாஸர்,

சிறப்பு அதிதியாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் சிரேஷ்ட விரிவுரையாளர், கலாநிதி. எப்.எச்.ஏ. ஷிப்லி ஹஸன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இன் நிகழ்வின் முதல் நூல் பிரதிகளை சமூக செயற்பாட்டாளர் வாழைச்சேனை,

வு.டு. அப்துல் ஸலாம் ரூ சன்ஸ் -உரிமையாளர் - வு.டு. அப்துல் ஸலாம் அப்துல் வாசு (ஹாஜியார்),

சமூக செயற்பாட்டாளர் தேசிய மக்கள் சக்தி நிறைவேற்றுக் குழு உறுப்பினர், எம்.ஏ.சீ.நியாஸ்தீன் (ஹாஜியார்) ஆகியோர் நூலாசிரியைகளின் கரங்களால் பெற்றுக்கொண்டனர்.

எண்ணங்களை வரிகளாக்கி இலட்சியங்களை நூலாக்கி தடம்பதிக்கும் இளம் எழுத்தாளர்கள் இருவருக்குமான ஏட்டுலா கனவாக்கத்தின் "கவி முகில்" விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் சிந்தனை திறன் மிக்க இளம் எழுத்தாளர்களின் கனவுகளை தன் கனவு போல் நினைத்து இப் பாரிய சமூக சேவை அமைப்பினை ஆரம்பித்து மிகச்சிறப்பான முறையில் நூல் வெளியீடுகளை செய்து வருகின்ற ஏட்டுலா கனவாக்கத்தின் பணிப்பாளர் ஆஷிக் /ஹசைனை கௌரவித்து நினைவுச்சின்னம் நூலாசிரியைகளால் ஏட்டுலா கனவாக்கம் நிர்வாக குழு உறுப்பினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி விழாவில் பலதரப்பட்ட ஆளுமைகள், கல்விமான்கள், உலமாக்கள், எழுத்தாளர்கள், ஊர் மக்கள் உற்பட நூலாசிரியர்களின் குடும்பத்தினர்கள் என பெருந்திறலானோர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# ஹஜ் பயிற்சி கருத்தரங்கு தொடர்பாக கல்முனை பிரதேச செயலகத்தில் நிகழ்வு

**(பாறுக் ஷிஹான்)**

2026 ஆம் ஆண்டுக்கான ஹஜ் பயிற்சி கருத்தரங்கு கல்முனை பிரதேச செயலகத்தில் ஞாயிற்றுக் கிழமை (2) அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.எம்.அஸ்ரப் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடை-பெற்றது.

முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் மற்றும் ஹஜ் உம்றா கமிட்டி இணைந்து 2026 ஆம் ஆண்டில் ஹஜ் புனித யாத்திரையை மேற் கொள்ள திணைக்களத்தில் பதிவு செய்து ரூ.5000 பணம் செலுத்தி தமது பயணத்தைஉறுதிப்படுத்திய யாத்திரிகர்களுக்காக ஹஜ் கடமைகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான இக்கருத்தரங்கில் தெளிவு படுத்தப்பட்டன.

இக் கருத்தரங்கின் நோக்கம் யாத்திரிகர்கள் ஹஜ் கடமைகளை முறையாக நிறைவேற்றுவதற்கான முன்னேற்பாடுகளை மேற் கொள்வதற்கான வழிகாட்டுதல்களை வழங்குவதுடன் சவூதி அரேபியாவில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் மருத்துவ ஆலோசனைகள் மற்றும் பயணத்துடன் தொடர்புடைய தேவையான அறிவுரைகளை வழங்குவதாகும் என முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள பிரதி பணிப்பாளர் எம்.ஐ. பிர்னாஸ் குறிப்பிட்டார்.

மேலும் இந்த ஹஜ் பயிற்சி கருத்தரங்கு அக்கரைப்பற்று சம்மாந்துறை உள்ளிட்ட பிரதேச செயலகத்தில் முன்னெடுக்கப் பட்டிருந்ததோடு இறுதியாக கல்முனை பிரதேச செயலகத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தககது.

இந்நிகழ்வில் கல்முனை பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சி.எம் .பளீல் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள கணக்காளர் எஸ்.எல்.எம் நிப்ராஸ் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள உத்தியோகத்தர்கள் கல்முனை ஜம்மியதுல் உலமா சபையின் பொருளாலர் மருதமுனை கல்முனை சாய்ந்தமருது மாளிகைக்காடு நிந்தவூர் பகுதிகளை சேர்ந்த 2026 ஆம் ஆண்டுக்கான ஹஜ் செய்வதற்காக நிய்யத்து வைத்த யாத்திரிகர்கள் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.









மாவனல்லை ஆதார வைத்தியசாலைக்கு வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் தங்குவதற்கு 14 கோடி ஷரூபா செலவில் 5 மாடுகளை கொண்ட கட்டடத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு வைத்தியர் சமீரா தலைமையில் (04) இடம்பெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர் தம்மிக்க பட்டாந்தி அதிதியாக கலந்து அடிக்கல் நட்டு வைப்பதை படத்தில் காணலாம்.

**(படம்.பாரா தாஹீர்)**

# மாணவர் படையணிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



**(எம்.கே.எம்.நியார்)**

மாணவர் படையணிக்கான பயிற்சிகளை முடித்துக் கொண்ட மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அதான் ம.வித்தியால பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம். சறூக் தலைமையில் இந்நிகழ்வு ஆரம்பமாகியது. பதுளை பொலிஸ் நிலையத்தில் இப்படையணிக்கு பொறுப்பான உதவி பொலிஸ் பரிசோதகர் ஆர்.டீ.எம்.ரத்நாயக்க, இப்படை யணியை ஆரம்பிக்க உதவி புரிந்த பவுமி,படையணிக்கு பொறுப்பான ஏ.எச்.எம். அனீஸ் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக் கான சான்றிதழ்களை வழங்கி வைத்தனர்.

# சம்மாந்துறை இ.போ.ச [CTB] டிப்போ மீண்டும் மக்களுக்கு கையளிப்பு




**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

கடந்த தேர்தல் காலங்களில் தேசிய மக்கள் சக்தியின் பிரசார மேடைகளில் முதன்மையாகப் பேசப்பட்ட சம்மாந்துறை ஊவுடீ பஸ் டிப்போ பிரச்சினை யானது அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களின் அபிவிருத்தி குழு தலைவரும், இலங்கை அரசியலமைப்பு பேர-வையின் உறுப்பினரும், பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா அவர்களின் தொடர்ச்சியான முயற்சியின் காரணமாக சம்மாந்துறை மக்களிடம் (03) உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டு, அதன் முதற்கட்டமாக பாராளுமன்ற உறுப்பினரின் பங்குபற்றலுடன் ஊர் பொதுமக்களும் சேர்ந்து அதனை எதிர்கால நடவடிக்கைக் காக தயார் நிலைக்குக் கொண்டு வந்தனர்.

இதற்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கிய போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர்ப்புற மேம்பாடு அமைச்சர் விமல் ரத்னாயக்க, அபிவிருத்தி கிராமியப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதியமைச்சர் வசந்த பியதிஸ்ஸ மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் கிழக்குப் பிராந்திய பிரதான முகாமையாளர் ஆகியோருக்கு பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா விசேட நன்றிகளைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனீபா, தேசிய மக்கள் சக்தியின் சம்மாந்துறை தொகுதி அமைப்பாளரும் பிரதேச சபை உறுப்பினர்களான ஏ.பி. நவாஸ் உட்பட தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளர் கள், போக்குவரத்து சபையின் அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# புரையோடியிருக்கும் போதைத் “ரடம எகட” சாத்தியமா?



எம்.எஸ். அமீர் ஹுசைன்

நாட்டில் பாரிய அச்சுறுத்தலாக இருந்து வருவது இரண்டு பிரதான விடயங்கள் ஆகும். முதலாவது ஆபத்தானது பாதாள உலக கோஷ்டியால் இருந்து வருகின்ற அச்சுறுத்தல் ஆகும். இரண்டாவது போதைப் பொருள் வியாபாரத்தினால் இருந்து வருகின்ற அச்சுறுத்தல் ஆகும். இன்று நாட்டில் எந்த மூலை முடுக்கை எடுத்துக் கொண்டாலும் போதைப்பொருள் ஊடுருவி மிக மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றது. இத்தகைய போதைப் பொருட்களின் ஆதிக்கம் இந்த நாட்டில் எப்போது திறந்த பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்டதோ அன்றில் இருந்து ஏற்பட்டதாகும். தங்குதடையின்றி நாட்டிற்குள் கடல் மார்க்கமாகவும் தரை வழியாகவும் போதைப் பொருட்கள் டன் கணக்கில் வந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் மிகவும் சிறிய தொகையே சுங்க பிரிவாலும் போதைப் பொருள் தடுப்பு சுற்றி வளைப்புக்களாலும் தேடப்பட்டு கண்டு பிடிக்கப்படுகின்றன. பாதாள உலக கோஷ்டியின் பிரதான வருமான வழிகளில் ஒன்றும் போதைப் பொருள் வியாபாரமாகும்.

ஏற்கனவே 10 இற்கும் மேற்பட்ட சர்வதேச பலம்வாய்ந்த வலைப்பின்னலை கொண்ட போதைப் பொருள் விற்பனை கும்பல்களை கைது செய்வதில் இலங்கை புலனாய்வு துறையினர் வெற்றி கண்டுள்ளனர். வெளிநாடுகளில் இருந்து இயங்கிய ஐந்து பேரை கைது செய்து நாட்டிற்கு அழைத்து வந்த அதே நேரம் தேடப்பட்டு வந்த செவ்வந்தியுடன் நேபாளத்தில் இருந்தும் ஐந்து பேரை கைது செய்து அழைத்து வந்ததிலும் பல புதிய திருப்பங்கள் ஏற்பட்டுள்ளன. இந்நிலையில் போதைப் பொருளுக்கும் பாதாள உலகத்திற்கும் எதிரான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா கடந்த 2025.10.30 ஆம் திகதி கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடை பெற்ற வைபவம் மூலம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இந்த வைபவத்தின்போது பாதாள உலக கோஷ்டிகளுக்கும் போதைப் பொருள் வியாபாரிகளுக்கும் கடைசி எச்சரிக்கை விடுப்பதாக ஜனாதிபதி எச்சரிக்கை விடுத்தார். அத்துடன் இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் நின்று அனைத்து தரப்பினரும் இந்த வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைக்க முன்வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். ஒத்துழைக்காத பொலீஸ் அதிகாரிகள் உட்பட யாராக இருந்தாலும் வெளியேறுங்கள். அல்லது கண்டுபிடிக்கப்பட்டால் வெளியேற்றப் படுவார்கள் என்றும் தெரிவித்தார். இதேபோன்றதொரு அறிவித்தலை 2025.09.03 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற பொலீஸ் சேவையின் 159 ஆண்டு நிறைவு வைபவத்திலும் குறிப்பிட்டிருந்தார். அதன்படி சில விரைவான நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

போதைப் பொருள் எல்லா சமூகங்களுக்குள்ளும் ஊடுருவி மிக மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. பாடசாலை மாணவர்கள் முதல் இளம் தலைமுறையினர் வரையில் நாளுக்கு நாள் அடிமையாகும் வீதம் உயர்வடைந்துகொண்டே போகின்றது. அதிகமான பாடசாலைகளில் அண்மைக்காலமாக மாணவிகளும் இத்தகைய போதைப் பொருளுக்கு அடிமையாகும் வேகம் உயர் வடைந்திருக்கின்றன. எதிர்காலத்தில் எமது இளம் சந்ததியினருக்கு ஏற்படப் போகின்ற மோசமான விளைவுகள் குறித்து சிந்திக்கையில் மிகவும் கவலையாக இருக்கின்றது. அண்மைக்காலமாக ஐஸ் என்ற புதிய வகை போதைப் பொருளால் மேலும் புதிய பாதிப்புக்கள் உருவாகி வருகின்றன. ஒவ்வொரு ஊரிலும் சந்தி சந்தியாக குறிப்பிட்ட ஒருசில இளைஞர்களால் ஐஸ் போதைப் பொருள் வியாபாரம் இளம் தலைமுறையினரை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக போதைப் பொருள் காரணமாக மூவினத்தை சேர்ந்த சமூகங்களும் வெகுவாகப் பாதிக்கப் பட்டிருக்கின்றது. மொத்த சனத்தொகையில் 100,000 பேருக்கு 2000 பேர் என்ற அடிப்படையில் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களது விகிதம் இருப்பதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. உத்தியோக பூர்வமான அறிக்கைகள் இவ்வாறு இருந்தாலும் இந்த தொகை மேலும் அதிகமாக இருக்கும் என்றே கருத முடிகின்றது. போதைப் பொருளுக்கு அடிமையானவர்களின் வயதுப் பருவத்தை அவதானிக்கையில் 18 வயதுக்கும் 35 வயதுக்கும் உள்ள முதுகெலும்பாகக் கருதப்படக் கூடிய இளம் தலைமுறையினர் மிக மோசமான முறையில் இந்தப் போதைப் பொருளால் சீரழிந்து கொண்டிருக்கின்றனர். ஒருவர் போதைப் பொருளுக்கு அடிமையாகிவிட்டால் அவருக்கு புனர் வாழ்வளித்தாலும் அவரை சமூக நீரோட்டத்திற்குள் இணைப்பதென்பது மிகவும் கடினமான செயலாகும்.

போதையூட்டப்பட்ட பாக்குத்தூள் வகைள், பீடா, இனிப்பு வகைகள், சுவிங்கம் வகைகள், மென்பான வகைகள் உட்பட இவற்றோடு ஹெரோய்ன், கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் மற்றும் போதைப் பொருளுக்கு நிகரான போதை ஊட்டும் மாத்திரைகள், இனிப்பு வகைகள் உள்ளிட்ட தயாரிப்புக்க்ள் பாடசாலைகளுக்கு அருகாமையிலும் விற்கப்பட்டு வருவது நாட்டில் பரவலாக கண்டு பிடிக்கப்பட் டிருக்கின்றது. இத்தகைய வியாபாரங்களில் ஈடுபடுபவர்கள் பாடசாலை மாணவர்களை கவரும் வகையில் பணம் போன்றவற்றை வழங்கி ஆசை காட்டி இத்தகைய பொருட்களின் விற்பனைக்கு பழக்கி வருகின்றனர். அவர்கள் ஊடாக ஏனைய மாணவர்கள் இலக்கு வைக்கப்பட்டு இவற்றுக்கு அடிமையாக்கப்பட்டு வருகின்றனர். பாடசாலை மாணவர்களுக்கு சம்பந்தமில்லாதவர்கள் ஒரு சில பாடசாலை மாணவர்களை அணுகி சுற்றுலாக்களை ஏற்பாடு செய்தும் களியாட்ட நிகழ்வுகளை ஏற்பாடு செய்தும் அல்லது தந்திரோபாயமான முறையில் சந்திப்புக்களை கூடியவர்களை ஆரம்பம் முதலே பாதுகாக்க அவசரமான நடவடிக்கைகள் தேவை. பெற்றோர் தம் பிள்ளைகள் குறித்து எந்த நேரமும் மிகவும் கண்காணிப்புடன் நடந்துகொள்ள வேண்டும். ஒவ்வொரு ஊரிலும் போதைப் பொருள் பாவனையை தடுக்க நடவடிக்கைகள் திட்டமிடப்பட்ட அடிப்படையில் முன்னெடுக்கப்பட வேண்டும். ஊர் மஸ்ஜித்கள், சமூக நலன்புரி அமைப்புக்கள், தொண்டு நிறுவனங்கள் என்பன இவ்விடயத்தில் கூடுதலாக செயலாற்ற வேண்டி இருக்கின்றது. ஒருபுரம் போதைப் பொருளில் இருந்து பிள்ளைகளை பாதுகாக்க கவனம் செலுத்தி பிள்ளைகளை பாதுகாப்பதற்காக திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்த வேண்டும். ஒவ்வொரு ஊரிலும் எல்லா மட்டங்களிலும் போதைப் பொருள் ஒழிப்பு தொடர்பாக தொடர்ச்சியாக கவனம் செலுத்தும் வகையில் செயலாற்ற செயலணியொன்றை ஏற்படுத்த வேண்டியதும் அவசிய மாகின்றது. முன்னர் ஒவ்வொரு ஊரிலும் இயங்கி வந்த சிவில் பாதுகாப்பு குழுக்களை பொது மக்கள் பாதுகாப்பு குழுக்களாக மாற்றி இந்த விடயத்தில் பொலீசாருடன் ஒத்துழைக்க வேலைத் திட்டங்களை ஆரம்பித்திருக்கின்றது. வயது



இடைப்பட்டவர்களே அதிகம் உள்ளனர். அண்மைக்காலங்களில் ஏற்பட்டுள்ள நிலைமைகளை அவதானிக்கையில் ஐஸ் என்ற போதைப் பொருளால் பாடசாலை மாணவர்கள் அடிமையாகும் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே போகின்றது. கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் இவ்வாறு போதைப்பொருளுக்கு அடிமையாகி இருக்கும் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை 2 இலட்சத்து 30,982 என சிறைச்சாலை ஆணையாளர் ஜகத் வீரசிங்க அண்மையில் தெரிவித்தார். நிலைமை இவ்வாறு போனால் 10 வருடங்களில் இந்த சமுதாயம் எப்படியான ஒரு நிலையில் இருக்கும், என்று சிந்தித்தால் மிக மோசமான ஒரு பிரதிபலனே கிடைக்கக்கூடியதாக இருக்கின்றது.

போதைப் பொருள் விற்பனை செய்பவர்கள் இளம் தலைமுறையினரை அதிலும் அதிகமாக பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்தே பரிமாற்றத்தை மேற்கொண்டு வருகின்றனர். இந்த பருவத்தினரை போதைப் பொருளுக்கு அடிமையாக்கி விட்டால் அதனால் போதைப் பொருள் வியாபாரிகளுக்கு நீண்ட கால அடிப்படையில் நன்மையடைய முடிகின்றது. மறுபுரமாக போதைப் பொருள் பாவனைக்கு அடிமையான குடும்பஸ்தர்களால் மேலும் மோசமாக சமூக பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. குடும்ப கட்டமைப்புக்கள் சீர்குழைந்து கொண்டிருக் கின்றன. குறுகிய வழியில் சுலபமான முறையில் விரைவில் செல்வந்தராக மாறுவ தற்கான ஒரே வழியாக போதைப் பொருள் வியாபாரம் அமைந்திருக்கின்றது. ஒரு சமூகத்தில் ஏற்பாடு செய்தும் பாடசாலைப் பருவத்தினர்களை போதைப் பொருளுடன் தொடர்புபடுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். சமூக ஊடகங்கள் மூலமும் சூட்சுமமான முறைகளில் போதைப் பொருள் விற்பனைகள் முன்னெடுக்கப் படுகின்றன.

இவ்வாறான செயல்களில் ஈடுபடும் மாணவர்கள் எப்போதும் பெற்றோருக்கு கட்டுப் படாதவர்களாகவும், மோசமான நடத்தைகளுக்கு அடிமையானவர்களாகவும், சமூகத்தில் அல்லது பாடசாலையில் ஒழுக்க மாண்புகளை மீறக் கூடியவர்களாகவும் ஆசிரியர்கள் அல்லது வழிகாட்டக் கூடியவர்களது அறிவுரை களை பின்பற்றாதவர் களாகவும் இருப்பார்கள். இவர்களே அதிகமான பாடசாலைகளில் கற்கக் கூடிய ஏனைய மாணவர்களுக்கு இடையூறாக செயற்படக் கூடியவர்களாவர். போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் எப்போதும் நல்ல விடயங்களில் நாட்டம் இல்லாதவர்களாகவும் , மன உழைச்சலுக்கு உள்ளாகியவர்களாகவும், எந்த நேரமும் தீய எண்ணங்களில் மூழ்கியவர்களாகவும், சமூக விரோத செயல்களில் ஈடுபடக்கூடிய உணர்வுடைய வர்களாகவும் இருக்கின்றனர். அத்துடன் இத்தகையவர்களின் ஆரோக்கியம் படிப்படியாக மோசமடைந்து பல்வேறுபட்ட நோய்களுக்கும் உபாதைகளுக்கும் உள்ளாகி காலப்போக்கில் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் பலன் இல்லாத வர்களாக மாறுகின்றனர். இவர்களை குணப்படுத்த முடியாது.

அதனால் போதைப் பொருள் பாவனையில் இருந்து அடிமையாகக் நடவடிக்கை எடுப்பதோடு போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகவும் கடுமையான எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். போதைப் பொருளை சமூகத்தில் அறிமுகம் செய்து விற்பனை செய்வதன் மூலம் எமது எதிர்கால சந்ததியினரை உயிரோடு அழித்துக் கொண்டிருக்கின்றனர். இவர்களே மிக மோசமான சமூக விரோதிகளாவர். இத்தகைய நிலைமைகளின் விபரீதம் பற்றி அண்மையில் மாவனல்லையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் மாவனல்லை பொலீஸ் பொறுப்பதிகாரி எச்.எம். பி.பி ஹேரத் குறிப்பிடுகையில் கூறியதாவது

ஊரில் இருக்கக்கூடிய 10 பேரின் மோசமான செயலை கண்டிக்கும் திராணி இல்லாதவர்களாக அந்த ஊாரில் வாழும் ஏனைய ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கின்றனர். இந்த நிலை தொடருமானால் எதிர்காலத்தில் ஊரில் தலைமைத்துவம் வழங்க ஆள் இருக்காது. அதிகமான இளைஞர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகி எதிர்காலத்தை இழந்தவர்களாகவே இருப்பார்கள். அதனால் சமூகத்தை எதிர்கால சந்ததியினரை பாதுகாக்க அச்சப்படாமல் எல்லா தரப்பினரும் முன்வாருங்கள், ஜனாதிபதியின் வேலைத்திட்டம் புதிய உற்சாகமளிக்கின்றது என்றார்.

இது தொடர்பான அறிவூட்டல்கள் பாடசாலை மட்டத்தில் அதிகமாக திட்டமிட்ட அடிப்படையில் நடைபெற வேண்டும். அத்துடன் பள்ளிவாசல் நிர்வாக சபைகள் மதஸ்தலங்கள், சிவில் சமூக செயற்பாட்டு அமைப்புக்கள் இவ்விடயம் தொடர்பாக அதிக வந்த குழந்தைகளை கண்காணிப்பது தொடர்பாக பெற்றோருக்கான விஷேட அறிவூட்டல்கள் நடத்தப்பட இருக்கின்றன.

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் பல இடங்களில் பள்ளிவாசல்கள் முன்வந்து போதைப் பொருளுக்கு எதிராக பல நடவடிக்கைகளை எடுத்திருப்பது பாராட்டத்தக்கது. பலாங்கொடையில் முஸ்லிம் பள்ளிவாசல் ஒன்றில் போதைப் பொருளுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையை ஜனாதிபதி பாராட்டினார். ஆனாலும் போதைப் பொருளுக்கு எதிராக நடவடிக்கைகளில் இறங்கும் போது அதில் ஈடுபடுபவர்களும் பல சவால்களை எதிர்நோக்குகின்றனர். கொலை அச்சுறுத்தல், தாக்குதல்களுக்கு முகம் கொடுத்தல், பெண்களை சம்பந்தப்படுத்தி பாலியல் குற்றச்சாட்டுக்களை பரப்புதல், குடும்பங்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தல், என்றெல்லாம் அச்சுறுத்தல்கள் வந்து கொண்டிருக்கின்றன. இதில் சில சந்தர்ப்பங்களில் சட்டத்தை அமுல்படுத்தக் கூடிய சில பொலீஸ் அதிகாரிகளும் போதைப் பொருள் வியாபாரிகளின் வலையில் விழுந்து அவர்களிடம் இருந்து பணம் பெற்றுக்கொண்டு அவர்களுக்கு உடந்தையாக இருந்து செயற்படுகின்ற தகவல்களும் வெளியாகி உள்ளன. ஆனாலும் இத்தகையவர்கள் தொடர்பாக மேலதிக கவனம் செலுத்தப்பட இருப்பதோடு அதற்கான செயலணி கூடுதல் அவதானத்தை செலுத்த வேண்டி இருக்கின்றது. ஒத்துழைப்பு வழங்கும் பொதுமக்களுக்கும் அதிகாரிகளுக்கும் கூடுதலான பாதுகாப்பு அவசியமாகின்றது.

## மனநலமும் ஆலோசனையும் 91

# “அறிவு உயர்த்தும், ஒழுக்கம் நிலைநிறுத்தும்”

இன்றைய உலகில் அறிவு பெருகிக் கொண்டே வருகிறது. அதற்கான வாய்ப்புகளும் புதிது புதிதாக வந்துகொண்டே இருக்கின்றன.

ஆனால் ஒழுக்கம் குறைந்து கொண்டே வருகிறது என்று சொல்லக் கேட்கிறோம். அறிவும் ஒழுக்கமும் சேர்ந்ததாக எமது வாழ்வு பயணிக்க வேண்டும். அதனால் போலும்,

அறிவில்லாதவன் தவறுவான்,

ஒழுக்கமில்லாதவன் அழிவான்!” என்று சொல்லப்படுகிறது.

“கல்வி நமக்கு வாழ்க்கையை நடத்தக் கற்றுக் கொடுக்கிறது.

ஆனால் ஒழுக்கம் நமக்கு மனிதராக வாழக் கற்றுக் கொடுக்கிறது.”

அழகான, வளமான, ஆரோக்கியமான வாழ்க்கை பயனுள்ள அறிவில் இருந்து ஆரம்பிக்கிறது.

பயனும் பிரயோசனம் உள்ள அறிவில் இருந்து தான் ஒழுக்கமுள்ள தனிமனிதன் உருவாகிறான்.

ஒழுக்கத்தால் ஓங்கிய சமூகத்தின் அடிப்படையே பயனுள்ள அறிவாகும்.

“ஒழுக்கம் தராத கல்வியும் விளைச்சல் தராத பயிரும் வீணாகிவிடும்“ என்று நாம் கற்று இருக்கிறோம். தனிமனித முன்னேற்றமும் சமூக முன்னேற்றமும் ஒழுக்கத்தை வைத்தே அளவிடப்படுகிறது.

அறிவுடன் சேர்ந்ததாக ஒழுக்கம் கிடைக்கும் போதே மனிதனும் அவன் வாழும் சமூகமும் வளம் பெற்றதாக இருக்கும்.

அறிவு எமக்கு கட்டாயம் தேவை. அதில் கடுகளவும் சந்தேகம் இல்லை. ஆனால் ஒழுக்கம் இல்லாத அறிவு எவ்வளவு இருந்தும் என்ன பயன்.

வீட்டிலும் பாடசாலையிலும்

அறிவுடன் சேர்ந்ததாக ஒழுக்கமும் பிள்ளைகளுக்கு கிடைக்குமானால் அவர்கள் வாழ்வில் எப்பவும் வெற்றிக்கான வாய்ப்புகளை அதிகம் பெறுவார்கள்.

சாட்சிகள் இல்லாத இடங்களில் தவறுகள் செய்யாமல் நேர்மையாகவும் உண்மையாகவும் நடந்து கொள்ளும் அழகான வாழ்வியலை அறிவு சேர்ந்த ஒழுக்கம் மட்டுமே பிள்ளைகளுக்கு பெற்றுக் கொடுக்கும் என்பதை பெரியவர்கள் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அறிவோடு சேர்ந்ததாக ஒழுக்கத்தை கற்றுக் கொள்ளாத பிள்ளைகள் அறிவில் மேலோங்கி விளங்கினாலும் சுய வாழ்விலும் சமூக வாழ்விலும் மன உளைச்சலுக்கு ஆளாகி வாழ்வில் எந்த ஒன்றிலும் இன்பத்தை அனுபவிக்க முடியாதவர்களாக ஆகிவிட அதிக வாய்ப்பு உண்டு.

மனிதனிடம் சுலபமாக ஒழுக்கத்தைப் புகுத்த வேண்டுமானால், பள்ளிப் பருவத்தில் அல்லது மாணவப் பருவத்தில் தான் அதை புகுத்த முடியும். ஒழுக்கமுள்ள சமூக உருவாக்கத்தில் பாடசாலைகளின் பங்கு அளப்பரியது.

அதனால் எமது வீடுகளும் கல்விக் கூடங்களும் அறிவுடன் சேர்ந்த ஒழுக்கத்தை வழங்கும் இடங்களாக இருக்க வேண்டும் என்பதை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்வோம்.

நாம் பிள்ளைகளுக்கு கல்வியை மட்டும் அல்ல,

மனிதத்தையும் கற்பிக்க வேண்டும்.

அப்போதுதான் புத்தக அறிவு புண்ணியமாகும், சமூக வாழ்வு வளமாகும்!”



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**




நாச்சியாதீவு பர்வீன்

# லறீனா அப்துல் ஹக்கின் ‘தஞ்ஜாலின் சொர்க்கம்’

*எஸ். ஃபாயிஸா அலி*

**கடந்தவார தொடர்....**

*என்றாலும், அந்தப் பெண் கொண்ட ஈமானிய உறுதி அவளை வாழவைக்கும் என்ற பெரும் நம்பிக்கை கதைசொல்லிக்குப் போன்றே எனக்கும்.*

*அடுத்து ‘கறுப்பி’. அவள் ஓர் ஏழை கறுப்பி. பாடசாலைச் சமூகத்தாலும் சுற்றுச்சூழலாலும் ஏன், தன் பெற்ற தாயாலுமே புறக்கணிக்கப்பட்டு ஒதுக்கப்படும் ஏழைக் கறுப்புச் சிறுமி ஒருத்தியின் கண்ணீரும் குருதியும் இணைந்த இன்னொரு சோகக் காவியம், கறுப்பி. ‘கொடிது கொடிது இளமையில் வறுமை’ என்பது எவ்வளவு பெரிய உண்மை! அத்துணை புறக்கணிப்புக்கு மத்தியிலும் புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெறுகிறாள் அவள். அதுவரை வன்சொற்களாலும் சரீரத் தண்டனையாலும் துன்புறுத்திய ஆசிரியைகூட பாராட்டிப் பேச முற்படுகிறார். இறுதியில் கன்னங்கரேலென்ற அவளது புறங்கை அந்த வீதி விபத்தில் குருதியில் குளித்துச் செக்கச்செவேலென்றாகிறது. ஐசியூவில் அனுமதிக்கப்பட்டிருக்கும் அந்த ஏழைச் சிறுமிக்கு உயிராபத்து ஏதும் வந்து விடக் கூடாதே என்ற பதைப்போடும் பிரார்த்தனையோடும் தான் அடுத்த கதைக்குள் நுழைய முடிகிறது.*

*நான்காவது கதை, ‘எனக்கான வெளி’. நான் நினைக்கின்றேன், ஏதோ ஓர் இணையப் பக்கத்தில் இந்தக் கதையை வாசித்த போதுதான் லறீனாவை சந்திக்க வேண்டும் அவரோடு பேச வேண்டும் என்ற ஓர் உந்துதலும் அவாவும் என்னுள் ஏற்பட்டிருக்க வேண்டும். கணவனின் காதலையும் கனிவான அரவணைப்பையும் எதிர்பார்த்து, அது கிடைக்காத ஏக்கமும் வெறுமையும் நிறைந்திருந்த இன்னொரு பெண்ணின் கேவல் தான் ‘எனக்கான வெளி’ சிறுகதை. கனவும் நிகழ்கால நனவுமாய் அவளின் எதிர்பார்ப்புகளும் நிஜத்தில் எதிர்கொள்பவையுமாய் என ஒரு வினா விடைக் குறிப்பொழுங்கில் மாறி மாறி நனவோடை கதை சொல்லல் முறையில் சொல்லப்பட்டுக் கொண்டே நகரும் இக்கதையில் அவளின் உடல் உள நிலையை, உணர்வுகளை அதன் கெஞ்சல்களைச் சிறிதும் கணக்கில் கொள்ளாமல் தனது கட்டளைகளுக்கு அடிபணிந்து ஒரு ‘ரோபோ’ போன்று தனக்குப் பணிவிடை செய்ய வேண்டும் என்று ஆணையிடும் கணவனும் கண்ணீரோடு காலம் தள்ளும் அவளும் - இருந்தும் அந்தக் கண்ணீரைத் துடைக்க வரும் பிஞ்சுக் கரங்களோடும் நெஞ்சு நிறைந்த பரிவோடும் அவள் பெற்ற பெண் பிள்ளை. அவளின் எதிர்காலம் தொடர்பான கைப்பிடியளவு நம்பிக்கையோடு அடுத்த கதைக்குள் நுழைகிறேன்.*

*ஐந்தாவது கதை, ‘எழுதப்படாத கவிதை’. கதை சொல்லல் முறையில் இருந்து சற்றே விலகி ஓர் ஆண் குரலில் நகர்கிறது. ஆனால், மீண்டும் அதே பெண் வலிதான் பேசப்படுகிறது. அவள் தனக்குப் பொருத்தமான துணை என நம்பியிருந்த அவளது பள்ளித் தோழனான முறைமச்சான் பெற்றவளின் பேச்சுக்கும் சொத்தாசைக்கும் அடங்கிப்போய் இன்னொருத்தியைத் துணையாக்கி கொள்கின்றான். அந்த ஏமாற்றத்தில் சிதைந்த தன் மென்மனதைத் திடப்படுத்திக்கொண்டு, தனக்கென அமைத்துக் கொடுக்கப்பட்ட வாழ்க்கைக்குள் நுழைகிறாள், ‘எழுதப்படாத கவிதை’ கமருன்னிஸா -நிலாப்பெண் -. மனசு நிறைந்த எதிர்பார்ப்புகளோடு புகுந்த வீடு வரும் அறிவார்ந்த அப்பெண்ணின் கலகலவென்ற பேச்சும் சிரிப்பும் கவிதை மொழியும் கணவனுக்கு எரிச்சல் நிறைந்த ஒன்றாக மாறிப் போகிறது. குடும்பப் பெண் என்றால் அதிகம் பேசாமல், வாய்விட்டுச் சிரிக்காமல் அடங்கியொடுங்கித்தான் இருந்தாக வேண்டும் எனக் காலங்காலமாக இறுக்கமாகக் கட்டி எழுப்பப்பட்டு இருக்கும் பெண்ணுக்கான சட்டகத்தையே சரியானது என நம்பும் பலரில் அவனும் ஒருவனாயிருந்தான். ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் அந்தச் சின்னப் பெண்ணின் காதல் மனதை கண்டுணர மறுக்கும் அவன், இறுதியில் அவளைக் கைகழுவியும் விடுகிறான்.*

*அவள் மகிழ்வாக வாழ்வதாய் நம்பிக்கொண்டிருந்த அந்த முறைமச்சான் தன்னை விரும்பியவளின் வாழ்க்கை செழிக்கவில்லை என்பதை அறிந்து துடிதுடித்துப் போகின்றான். காலம் கடந்த ஞானம்! அவளை மறுபடியும் கரம்பற்றி அவள் வாழ விரும்பிய வாழ்க்கையை அவளுக்குப் பரிசளிக்க வேண்டும் என்று ஆவலோடு அவளைத் தேடி வருகிறான். ஆனாலும் அவளோ அவனை விட்டும் அவளை வஞ்சித்த இவ்வுலகைவிட்டும் மொத்தமாய் விடை பெற்றிருப்பாள். கவிதை வரிகளால் ஓர் அழகிய சித்திரமாய் விரித்துச் சொல்லப்படும் இக்கதையின் கோர முடிவை என்னால் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை.*

*அடுத்து ‘’மனச்சிறகு’’. அட, இதுவும் ஓர் இளம்பெண்ணின் மனசு நிறைய சேமித்து வைத்த ஆசைகள், கனவுகள் சருகான கதைதான். வாழ்நாள் முழுதும் சேமித்த தன் கனவுகள், உணர்வுகள், கற்பனைகளோடு எதிர்பார்ப்புகளோடு கட்டார் வந்து சேர்கிறாள், நிஸா. வேலைப்பளுவும் அவளில் பெரிய அளவான விருப்பும் இல்லாத அவளின் கணவனும் தெரிந்தோ தெரியாமலோ அவளை அவள் ஆசைக் கனவுகளை, உணர்வுகளைப் புறக்கணிக்கத் தொடங்குகிறான். அந்தப் புறக்கணிப்புகளின் பெருவெக்கையில் அவள் கனவுகள் சருகாய் உதிரத் தொடங்குகின்றன.*

*இருவேறு மன உலகங்களுக்குள் வாழ்ந்து கொண்டு ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள முடியாமல் திணறித் தவிக்கும் வாழ்வைச் சூனியம் என்று நினைத்த அந்தத் தம்பதியருக்கு இடையில் அவன் பள்ளித்தோழி பானு வந்து சமரசம் செய்ய முனைகிறாள். தன் தோழியின் அழகழகான அறிவுரைகளால் நிஸாவின் கணவனின் வரண்ட சிந்தனை தெளிவாக புதுப்பிறவி காண்கிறான். ஆர்வம் பொங்க தன் மனைவியைக் காண வருகிறான் அவ்வாறு வீடு வரும் நிஸாவின் கணவன் எதிர்கொள்ளப் போவது அவள் இல்லாமல் வெறுமையாய் வெறிச்சோடிக் கிடக்கும் வீட்டைக் காணத்தானா? இந்த இடத்தில் ஓர் இனம்புரியாத தவிப்பும் முதன்முதலாய் நிஸா மீதான மெல்லிய கோபமும் முளைவிடத் தொடங்குகிறது, எனக்குள். இன்னும் ஒரு தரம் பேசிப் பார்த்து இருக்கலாம் என்ற அங்கலாய்ப்பு எழுகிறது. அட! எவ்வளவுதான் விரக்தி தரும் வாழ்வாக இருந்தாலும், அதைக் கடைசிவரை பொறுத்துக் கொண்டு அவள் வாழ்ந்தாக வேண்டும் என்று அடிமனசு எப்படி நினைக்கலாம்? இனியும் சகித்து வாழ இயலாது என்று நம்பிக்கையிழந்த நிலையில்*




**அடுத்தவாரம் தொடரும்...**

# அல் மார்ஜன் பாடசாலைக்கு அமான வங்கியின் அன்பளிப்பு







சம்மாந்துறை அல்மார்ஜன் பாடசாலைக்கு Traffic safety cone, No Parking Board ஆகியன அமானா வங்கி சம்மாந்துறைக் கிளையினால் அண்மையில் வழங்கப்பட்டது.

பாடசாலைக்கு நீண்ட நாள் தேவையாக இருந்த குறித்த உபகரணங்கள் அதிபர் எம்.ஐ. மாஹிரின் வேண்டுகோளுக்கிணங்க வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வங்கி முகாமையாளர் ஆ.லு. சிராஜ் முகம்மட், நிறைவேற்று உறுப்பினர் மு.டு. மனாஸ் ஆகியோர் வருகை தந்து பொருட்களை அதிபரிடம் ஒப்படைத்தனர்.

மேலும் இதன்போது அதிபருடன் உதவி அதிபர் ஜவாஹிர், சம்மாந்துறை போக்குவரத்துப் பொலிஸ் பிரிவினர், பாடசாலையின் போக்குவரத்துப் பிரிவு ஆசிரியர்கள் மற்றும் மாணவிகள் கலந்து சிறப்பித்தனர்.

# சர்வதேச மனித உரிமைகள் குளோபல் மிஷனினால் சிரேஷ்ட ஊடகவியலாளர் முத்தார் கௌரவிப்பு



சர்வதேச மனித உரிமைகள் குளோபல் மிஷன் அமைப்பினால் நாடாளவிய ரீதியில் இணைந்து சேவையாற்றுவதற்கான அங்கத்தவர்களுக்கு அடையாள அட்டை மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (01) நடைபெற்றது.

மேற்படி அமைப்பின் இலங்கை பிராந்தியத் தலைவர் ஏ.ஆர். என் அமீர்கான் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சர்வ மத தலைவர்கள், அமைப்பின் தலைமை நிர்வாகி டாக்டர் எம்.ஏ.சி மக்சூம் ஜே.பி, பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனுக்கான துணைத் தலைவர் திருமதி எப். ஷரீன், முஹப்பத் ஊடகத்தின் முகாமைத்துவ தலைவர் கவிப்புயல் சாம் எம். ஐ. எம். நிஸாம் ஹாஜியார், டாக்டர் புளத்கே உட்பட அமைப்பின் பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, லண்டன், ஸ்வீடன் உட்பட பல நாடுகளிலிருந்தும் அங்கத்தவர்கள் பங்கேற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சமூக நலத்திட்டங்கள், சமாதான கருத்தரங்கு இடம் பெற்றதோடு, ஊடகவியலாளர்கள் அமைப்பின் முன்னேற்றத்துக்கு பல வகையிலும் உதவி செய்த பிரமுகர்கள் கௌரவிப்பு என்பனவும் இங்கு இடம் பெற்றது.

ஊடகத்துறையில் 43 வருட காலம் தொடர்ந்தும் பணியாற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் அல்ஹாஜ் பி.எம். முக்தார் பொன்னாடை போர்த்தி சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு, மேற்படி அமைப்பின் ஊடாக இணைப்பாளர் பதவிக்கான அடையாள அட்டை சான்றிதழும் வழங்கி வைக்கப்பட்டது.

பேருவளையில் இலவச மருத்துவ முகாமை வெற்றிகரமாக நடத்தி முடிக்க ஒத்துழைத்த பேருவளை அணித் தலைவர் பஸ்லா பகீர் உட்பட உறுப்பினர்கள். தொண்டுப் பணி செய்த ஜாமியா நளீமியா கலா பீடம் மற்றும் இக்ரா தொழிற் பயிற்சி நிறுவன மாணவர்களுக்கும் இதன் போது சான்றிதழ் வழங்கப்பட்டமை விசேட அம்சமாகும்.






# நட்புகளைப் பலப்படுத்த....!

பயாஸா பாஸில்

உங்கள் வாழ்க்கையில் எந்த சந்தர்ப்பத்திலும்... ஒரு நட்பு துணையாக கைகோர்த்து இருக்கும். எந்த வயதிலும் சரி.. எந்த வகுப்பிலும் சரி.. படிக்கும் போது, தொழில் செய்யும் போது என பலதரப்பட்ட சமூக செயற்பாடுகளின் போது மனிதர்களை சந்திக்க நேரிடும்.

அவ்வாறு சந்தித்த மனிதர்களின் பழக்கங்கள் நினைவுகள் எம்மைவிட்டு எப்போதும் அகலாது. ஏதோவொரு விடயத்தில் எம் இதயத்தில் அவர்கள் இடம்பிடித்திருப்பார்கள்.

அவ்வாறானவர்களை எம்மை விட்டும், எமது வாழ்க்கையை விட்டும் தூரமாக்கி விடாது அருகாமையிலேயே வைத்துக் கொள்வது எவ்வாறு...? அவர்களுடனான நட்பை பலப்படுத்துவது எப்படி...?

### 1. நேரம் ஒதுக்குங்கள்:

உண்மையான நட்பு வளர சிறிது நேரம் தேவைப்படும். உங்கள் நண்பர்களுடன் அடிக்கடி பேசவும், சந்திக்கவும் முயற்சியுங்கள். வாரம் ஒரு முறை அல்லது மாதம் ஒரு முறை என்றவாறு திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

### 2. கவனமாகக் கேளுங்கள்:

அவர்கள் பேசும்போது அக்கறையுடன் கேட்பது, அவர்களுக்கு மதிப்பு தரும் உணர்வை ஏற்படுத்தும். அவர்கள் தங்கள் நண்ப அல்லது நண்பியிடம் ஏதோ ஒரு விடயத்தை பற்றி பேச வருகிறார் என்றால்.. உங்களை மதிப்பளித்து உங்களிடம் சொல்ல வேண்டுமென்ற நோக்குடன் தானே.. அதனால் அவர்கள் சொல்ல வருவதை கவனமாக கேளுங்கள்.

### 3. நம்பிக்கையுடன் இருங்கள்:

ஒரு நல்ல நட்பின் அடித்தளம் நம்பிக்கையே. ரகசியங்களை காக்கவும், பொய்யை தவிர்க்கவும். நட்பில் புரிதல் இல்லாதவர்கள் தான் அடிக்கடி சண்டை சச்சரவு என இருப்பார்கள். நம்பிக்கை வைத்து நட்பின் உண்மையோடு பயணித்துப் பாருங்கள். நீங்கள் வியந்து போகும் அளவிற்கு உங்கள் நட்பு ஜொலிக்கும்.

### 4. உதவி செய்யுங்கள்:

நண்பர் சிரமத்தில் இருக்கும்போது ஆதரவு அளிப்பது நட்பை வலுப்படுத்தும். நண்பர் ஒரு பிரச்சினையில் இருப்பார். உங்களிடம் கேட்க முடியாத சங்கடத்தில் இருப்பார். அவ்வாறான சந்தர்ப்பத்தை அவருக்கு உதவும் தருணமாக மாற்றிக் கொள்ளுங்கள். அல்லது வார்த்தைகளால் ஆதரவாக இருங்கள்.

### 5. தவறுகளை மன்னிக்கவும்:

எவரும் பூரணமானவர் அல்ல. சிறிய தவறுகளை மன்னித்து உறவைப் பாதுகாப்பது முக்கியம். யாரும் பூரணம் பெற்ற மனிதர்கள் அல்ல. ஒரு சிறிய தவறுக்காக ஒருவரை வெறுப்பது நல்லதல்ல.. அதனால் தவறுகளை மன்னிக்கப் பழகிக் கொள்ளுங்கள்.

### 6. பொறாமை அல்லது ஒப்பீடு வேண்டாம்:

ஒவ்வொருவருக்கும் தனித்தன்மை உண்டு. நண்பர்களின் வெற்றியை கொண்டாடுங்கள். நண்பர்களது சாதனையை பாராட்டுங்கள். உங்களுக்கு இருக்கும் திறமை அவருக்கு இல்லாமல் இருக்கலாம். அல்லது அவரிடம் இருக்கும் திறமை உங்களிடம் இல்லாது இருக்கலாம். அதனால் ஒப்பிட்டு கவலைப் படுவதை விடுத்து சின்ன சின்ன வெற்றிகளையும் கொண்டாடுங்கள்.

### 7. உண்மையான அன்பும் அக்கறையும் காட்டுங்கள்:

நட்பு வெளிப்படையான, அன்பான, நேர்மையான உறவாக இருக்க வேண்டும்.

உங்களது உண்மையான அன்பை நண்பருக்கு செயலால் பிரதிபலியுங்கள்.

### 8. சிறிய செயல்களால் மகிழ்விக்கவும்:

ஒரு இனிய செய்தி, பிறந்தநாள் வாழ்த்து, அல்லது சிறிய பரிசு கூட நட்பை நெருக்கமாக்கும். சின்ன சின்ன சந்தோஷங்களையும் அனுபவியுங்கள்.

நண்பருக்கு பிடித்தமான பொருட்களுடன் அவரை சந்தியுங்கள். அளவில் சிறிது என்றாலும் பரவாயில்லை. அன்பளிப்புக்களை வழங்குங்கள்.

பிறரை மகிழ்வித்து தானும் மகிழ்வது எவ்வளவு பெரும் திருப்தியை தரும் தெரியுமா..?!

சின்ன விடயம் என்றாலும் நட்புக்களின் செயல்களால், நண்பர்கள் வாழ்வில் நிறைய நினைவுகளைக் கொண்டுவரக்கூடியவர்கள். அவை பசுமையானவைகளாக எப்போதுமே நெஞ்சில் நிழலாடும்.

உங்கள் நட்புகளை பலப்படுத்தி நீங்களும் சந்தோஷமாய் நட்பைக் கொண்டாடுங்கள்.

# ஹாஜிகளுக்கு விரைவான சொகுசான வசதிகள்

## அமானா வங்கியில் வைப்புச் செய்வோருக்கே முன்னுரிமை




■ ஏ.எஸ்.எம்.ஜாவித்

2026 ஆம் ஆண்டுக்கான ஹஜ் சம்பந்தமாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை நடைபெற்றது.

இலங்கை ஹஜ் குழுத் தலைவர் றியாஸ் மிஹ்லார், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ், ஹஜ் குழு உறுப்பினர், பிரதியமைச்சர் முனீர் முழப்பரின் இணைப்பாளர் எல்.ஐ.ஏ.எம். சாஜஹான் ஆகியோர்களும் இதில் கலந்து கொண்டனர்.

இலங்கை ஹஜ் குழுத் தலைவர் றியாஸ் மிஹ்லார் கருத்துத் தெரிவிக்கையில்:-

அமானா வங்கியில் ஏழரை இலட்சம் பணம் வைப்பிலிடுபவர்களுக்கு 2026 ஹஜ் கடமைக்கு முன்னுரிமை

2026 ஆம் ஆண்டின் ஹஜ் ஏற்பாடுகள் தொடர்பான தகவல்களை ஹாஜிமார்களுக்கு வழங்குவதற்கான ஊடகவியலாளர் மாநாட்டை இன்று ஏற்பாடு செய்துள்ளோம்.

கடந்த வருடத்தில் ஹஜ் ஏற்பாடுகளை நாங்கள் பெப்ரவரி, மார்ச்சில்தான் மேற்கொண்டிருந்தோம். கடந்த வருட ஹஜ் ஜூன் மாத்தில்தான் வந்தது. அதனால் கடந்த மார்ச்சில் தான் அதிகமான வேலைகளைச் செய்தோம். காரணம் ஹஜ் கொமிட்டியை பெப்ரவரியில்தான் நியமனம் செய்தார்கள் அதனால் நாங்கள் சில வேலைகளை விரைவாக செய்ய வேண்டி ஏற்பட்டது.

இந்த வருடம் சவுதி ஹஜ் அமைச்சு எல்லாவற்றையும் முன்கூட்டியே செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு அறிவுறுத்தியுள்ளது.

இந்த வருடம் அவர்களின் முன் ஏற்பாடுகளின்படி சவுதியில் மினா மற்றும் அறபாவில் இடங்களைப் பெறுவதற்கான முற்பதிவை மேற்கொள்வதற்கு முன் பதிவுக்கான திகதியை ஆகஸ்ட் 23ஆம் திகதி தந்திருந்தார்கள் இருந்தாலும் இன்னும் அவர்கள் அவர்களின் சிஸ்டத்தை திறக்கவில்லை. இருந்தாலும் அவர்கள் எந்த நேரத்திலும் அதனை அவர்கள் திறப்பார்கள். அதற்கு முன்னர் ஆறு முனாசிம்களின் கணக்குகளில் பணத்தை வைப்பில் இட வேண்டும்.

அடுத்த வருடம் ஹஜ் ஜூன் மாதம் வருகின்றது. அதனால் இடங்களை பெற்றுக் கொள்வதற்கு அவர்களின் கணக்குகளில் பணத்தை வைப்பில் இட வேண்டும். அவர்கள் ஒரு நாள் அல்லது இரண்டு நாள் காலம் தருவார்கள். அந்த நேரம் அவர்களின் சிஸ்டத்தை திறப்பார்கள். அதனால் பணத்தை செலுத்தி இடத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். இதுவே முக்கியமான விடயமாகும். இந்த சோன் முற்பதிவு இல்லாவிட்டால் எங்களுக்கு ஹஜ் இல்லை என்றார் ஹஜ் குழுத் தலைவர்.

எனவே இந்த விடயங்களை கவனத்திற் கொண்டு முன் கூட்டியே மேற்படி விடயங்களை நாங்கள் செய்து கொள்ள வேண்டும். அத்தோடு ஹோட்டல்கள், போக்குவரத்து உள்ளிட்ட ஏனைய விடயங்களை எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் வாரத்தில் செய்து முடிக்க வேண்டும்.

சவுதி ஹஜ் அமைச்சின் ஒழுங்கு முறைப்படி சகல விடயங்களையும் ஐந்து மாதங்களுக்குள் செய்து முடிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சிலர் அடுத்தவருட ஹஜ்ஜுக்கு ஏன் இப்ப கட்ட வேண்டும் எனக் கேட்கின்றனர். மேற்கூறிய விடயங்கள்தான் காரணம். எதிர் காலத்தில் இதைவிட இன்னும் முன்கூட்டியே செய்து முடிப்பதற்கு அவர்கள் நடவடிக்கைளை எடுப்பார்கள்.

இதனால்தான் நாங்கள் ஹஜ் குழு மேற்படி விடயங்களை முன்கூட்டியே செய்கின்றோம்.

இந்த வகையில் ஹஜ் முகவர்களுக்கு நாங்கள் ஒரு விதிமுறையை ஏற்படுத்தி அதனை அவர்களின் ஹஜ் முகவர் சங்கங்களுக்கு கொடுத்து அதன்படி அதனை அமைச்சுக்கு அனுப்பி அவர்களின் அனுமதியையும் எடுத்து சுயாதீனமான ஒரு நேர்முகப் பரீட்சைன் குழுவை ஏற்படுத்தி அவர்கள் மூலம் ஹஜ் முகவர்களுக்கு நேர்முகப் பரீட்சைகளை நடாத்தினார்கள். நாங்கள் முன்பே வெட்டுப்புள்ளியை 70 ஆக தீர்மானித்திருந்தோம்.

இந்த முறை சவுதி ஹஜ் அமைச்சில் இருந்து எங்களுக்கு வழிகாட்டல் தந்திருக்கிறார்கள். அதில் ஹஜ் முகவர்கள் பணத்தை சரியான முறையில் வைத்திருக்க வேண்டும் என்று அதனையும் நாங்கள் கடந்த நேர்முகப் பரீட்சையில் நடைமுறைக்கு கொண்டு வந்தோம். அந்த வகையில் நேர்முகப் பரீட்சையில் 70 புள்ளிகளைப் பெற்றவர்களை நாங்கள் தெரிவு செய்தோம்.

அதில் 52 ஹஜ் முகவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அதன் பின்னர் ஏனைய ஹஜ் முகவர்கள் எங்களுக்கு விண்ணப்பித்திருந்தார்கள். நாங்கள் முதல் முறை இந்த நடைமுறையை மேற்கொண்டிருந்தோம். ஹஜ் முகவர்களின் பதிவு, அவர்களின் கூட்டு விபரங்கள் அவர்களின் குறைந்தளவு பண வைப்பு, உள்ளிட்ட பல விடயங்களை தந்திருந்தார்கள். அதன்படி அந்த 70 புள்ளிகளை சொஞ்சம் குறைத்து பார்க்கச் சொல்லி இருந்தார்கள். பிறகு ஹஜ் குழு அதனை கலந்தாலோசித்து அந்த வெட்டுப்புள்ளியை 60 ஆக குறைத்து மேலும் 41 முகவர்களை நாங்கள் சேர்த்துக் கொண்டோம். அதன்படி எல்லாமாக 93 ஹஜ் முகவர்களை நாங்கள் தெரிவு செய்துள்ளோம்.

முக்கியமாக அதில் ஒரு மாற்றம் செய்தோம். அதாவது கடந்த வருடம் எங்களுக்கு ஒரு பிரச்சினை வந்தது ஹஜ் பக்கேஜ் ஐப் பொருத்தவரை ஒவ்வொருவரு முகவர்களும் 25 இலட்சம் 27 இலட்சம் என்றும் சிலர் 30 இலட்சம் இவ்வாறு அதிகமான தொகையை கேட்டுள்ளனர். இதிலும் பல பிரச்சினைகள் இருந்தது. சிலர் கோட்டாவை பெற்று விற்பதும் நடந்தேறியுள்ளது.

இந்த வகையில் ஹஜ் குழு இம்முறை தீர்மானித்துள்ளது. குறைந்தளவு கோட்டா வழங்குவதில்லை என்றும் ஹாஜிமார்கள் தங்களுக்கான முகவர்களை தெரிவு செய்யுமாறும் நாங்கள் சொல்கிறோம். நாங்கள் ஹஜ் முகவர்களை அவர்களின் வெட்டுப்புள்ளிகளுக்கு அமைவாக அவர்களின் பெயர் விபரங்களை நாங்கள் வெளியிட்டுளோம்.

எனவே ஹாஜிகள் தமக்கான முகவர்களை உரிய முறையில் தெரிவு செய்யலாம். நாங்கள் ஹாஜிகளிடம் அவரை தெரிவு செய்யுங்கள் இவரை தெரிவு செய்யுங்கள் என்று சொல்ல மாட்டோம். முகவர்கள் ஹாஜிமாரை எடுப்பதாக இருந்தால் நல்ல சேவையையும், நல்ல கட்டணத்தையும் அவர்களுக்கு வழங்க வேண்டும். இந்த விடயம் முக்கியமானதாகும்.

அடுத்த வருடம் புள்ளி வழங்குவதில் மேலும் மாற்றத்தை கொண்டு வரவுள்ளோம்.

நல்ல சேவையை வழங்கும் முகவர்களுடன் ஹாஜிமார் செல்லலாம். அந்த நல்ல சேவையை நாங்கள் கொடுக்க வேண்டும் என்பதே ஹஜ் குழுவின் முக்கியமான முடிவு.

நாங்கள் நல்ல சேவையை வழங்க வேண்டும் என்று அறிவித்த பிறகு விளம்பரங்களைப் பார்க்கும் போது பல முகவர்கள் குறைந்த கட்டணத்தை அதாவது 20 இலட்சத்திற்கு குறைவான கட்டணத்தை அறிவித்துள்ளமை தெரிகிறது. சிலர் குறைந்த கட்டணத்தால் சேவைத் தரம் குறையுமா என்று கேட்கின்றனர்.

அதற்கு நாங்கள் சில முடிவுகளை எடுத்துள்ளோம். அதாவது சோன் 2 பி இல்தான் எல்லோருக்கும் இடம் ஒரே இடம்தான் வேறு இடம் இல்லை. மக்கா மதீனாவிலும் ஹாஜிகளுக்கு தங்குமிட வசதி ஒரு கிலோ மீட்டருக்குள்தான் இடம் கொடுக்க வேண்டும் என்று சொல்லி இருக்கின்றோம். அதேபோல் அஸீசியாவிலும் நல்ல ஹோட்டல் கொடுக்க வேண்டும். அதிலும் 6 இரவுகள் 7 நாட்கள்தான் காலம் கொடுக்க வேண்டும். அதனைவிட கூடுதலாக கொடுக்க இயலாது. அத்தோடு பஸ் புக் செய்யும் போது பழைய பஸ்சை முன்பதிவு செய்ய முடியாது. குறைந்தது 2 வருடம் பாவனையில் உள்ள பஸ்களையே முன்பதிவு செய்ய வேண்டும் என்று கூறியுள்ளோம்.

இவ்வாறான முறைக்குள்தான் முகவர்கள் ஹஜ் தொகையை நிர்ணயிக்க வேண்டும். இந்த விடயங்கள் உட்பட சகல விடயங்களையும் கடந்த வருடம்போல் இம்முறையும் நாங்கள் முகவர்களை கண்காணிப்போம்.

எனவே எமது முதலாவது கோரிக்கை மக்கா, மதீனா, மினா, அறபா போன்ற இடங்களில் நல்ல சேவையை வழங்க வேண்டும். இரண்டாவது இன்று வரைக்கும் சுமார் ஐயாயிரம் பேர் பதிவு செய்துள்ளனர். எமது இலங்கையின் கோட்டா 3500 தான். ஐயாயிரம் பேரில் பதிவுக் கட்டணம் 3600 பேர்தான் கட்டியிருக்கிறார்கள். அத்தோடு தங்கள் சொந்த பெயரில் அமானா வங்கயில் கணக்குத் திறந்து ஏழரை (750000.00) இலட்சம் பணம் கட்டச் சொல்லி இருக்கிறோம். கடந்த முறைகளில் இடம்பெற்ற முறைகேடுகளை தவிர்ப்பதற்கும் நியாயமான முறையில் ஹாஜிகள் ஹஜ் செல்வதற்குமே இந்த பொறி முறையை நாங்கள் செய்துள்ளோம். குறிப்பாக ஏழரை இலட்சம் கட்டிய ஹாஜிகளுக்கு ஹஜ் செல்வதற்கான சந்தர்ப்பம் முன்னுரிமை அடிப்படையில் உறுதியாகி உள்ளது. இன்று வரை 1700 வரையானவர்கள் வங்கியில் கணக்குத் திறந்து பணத்தை வைப்பிட்டுள்ளனர். அவர்களுக்கு பயணம் உறுதியாகவுள்ளது.

அந்த வகையில் 3500 வரையானவர்கள் வங்கியில் வைப்பில் இடுபவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

மினா அறா இடங்களுக்கு சுமார் 2 பில்லியன் ஷரூபா பணம் கட்ட வேண்டும். இதற்கு கட்டுவதற்காக திணைக்களத்தில் பணம் இல்லை ஏழரை இலட்சம் பணத்தில் இருந்துதான் அதற்கு பணம் செலுத்த வேண்டும்.

மூன்றாவது விடயம் ஹாஜிமார் தமது கடவுச்சீட்டுக்களை எந்த தரகர்களிடமும் அவதிப்பட்டு கொடுக்க வேண்டாம். அதற்கு ஹஜ் முகவர்கள்தான் பொறுப்பு. தடுப்பூசிக்கு பொய்யான மருத்துவ சான்றிதழ் வழங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அடுத்தது ஹஜ் அமைச்சால் ஹாஜிமாரின் உடல் நிலை சரியான முறையில் பரிசீலிக்கப்பட வேண்டும். அதற்கு ஒரு வைத்தியர் தேவை என்றும் கூறியுள்ளார்கள். அவரை டெலிகேசன் வரும் போது அழைத்து வருமாறும் அவருக்கான ஆலோசனைகளை வழங்குவதாகவும் தெரிவித்துள்ளனர்.

எனவே ஹஜ் செல்பவர்கள் வைத்தியரின் சரியான வைத்திய பரிசீலனைக்குப் பிறகுதான் விசா வழங்கப்படும் என்றும் சிறுநீரக நோய் உள்ளவர்களுக்கு வீசா வழங்கப்படாது என ஹஜ் அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த முறையும் நாங்கள் மினா மற்றும் அறபாவில் ஒரே இடத்தில் தருமாறும் கோரியுள்ளோம். குறிப்பாக சோன் 2 கேட்டுள்ளோம் காரணம் கல் எறியும் இடமும் கிட்ட இருப்பதால் ஹாஜிகளின் நலன் கருதி அதனை நாங்கள் தெரிவு செய்துள்ளோம். அத்தோடு இம்முறை ஹஜ் (2026) மே மாதம் வருவதால் வெப்பம் கூடிய காலமாகும். சென்ற ஹஜ்ஜின் போதும் சரியான வெப்பம் அதனால் அறபாவில் ஹாஜிகளை காலை 10 மணியில் இருந்து பிற்பகல் 4 மணிவரை வெளியில் செல்ல வேண்டாம் என அறிவித்திருந்தார்கள். இந்த வகையில்தான் நாங்கள் சோன் 2 கேட்டுள்ளோம்.

எனவே ஹஜ் குழுவின் முதலாவது நோக்கம் ஹாஜிகளின் நலன் பேணுதலாகும்.

அதனால்தான் எகமன்டேசன், ரான்ஸ்போர்ட் சேவைகள் வசதியாகவும் இலகுவாகவும் வழங்கும்போது ஹாஜிகள் தமது ஹஜ் கடமையை நிம்மதியாக செய்வதற்கே நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என்றார் ஹஜ் குழுத் தலைவர்.

# அல் அஸ்லாப் முன்னோர் நினைவு பேருரைகள்

**அல் - அஸ்லாப் முன்னோர் நினைவு மன்றம் ஏற்பாடு செய்த மூன்றாவது நினைவுப் பேருரைகள் வைபவம் கடந்த 25.10.2025ம்திகதி கொழும்பு 10 பீ.ஆர் விஜயவர்தனா மாவத்தையிலுள்ள தபாலக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.**
**மன்றத்தின் தலைவர் எம்.எச்.எம். நியாஸ் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்துத்துக்கு முன்னால் உயர் நீதிமன்ற நீதிபதி கலாநிதி ஸலீம் மர்சூப் பிரதம அதிதியாகவும், டொமினிகன் குடியரசின் கவுண்சலர் பீ. ஹபீபுள்ளாஹ், அஸீஸ் மன்றத்தலைவர் அலி அஸீஸ் மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஆர். எம். சல்மான் ஆகியோர் அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர். மர்ஹூம்களான முதலாவது முஸ்லிம் சிவில் சேவை உயர் அதிகாரி ஏ.எம்.ஏ. அஸீஸ்(C.C.S), முன்னால் ஜம்மியத்துல் உலமாவின் பொதுச் செயலாளர் எம். ஜே.எம். ரியாழ் (கபூரி) BA மற்றும் முன்னால், டொமினிகன் குடியரசின் கவுன்ஸல் ஜெனரல் சேர் அப்துல் டப்ளியு எம். அமீர் ஆகியோர் தொடர்பான பேருரைகள் இடம்பெற்றன.**

■ தொகுப்பு ஹில்மி முஹம்மத்

## மௌலவி எம்.ஜே.எம். றியாழ் அவர்கள்



**இளமையும் கல்வியும்**
மௌலவி எம்.ஜே.எம். றியாழ் அவர்கள் 1933ம் ஆண்டு ஜனவரி மாதம் 25 திகதி நீர்கொழும்பில் கம்மல்துறை எனும் ஊரில் பிறந்தார். இவரது தந்தை முஹம்மது ஜமாலுத்தீன். இவர் ஒரு பிரபல்யமான துணி வியாபாரியாக காணப்பட்டார். இவரது தாயார் ஜவாகிதா உம்மா. மௌலவி எம்.ஜே.எம். றியாழ் அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை கம்மல்துறை அல் பலாஹ் வித்தியாலயத்தில் கற்றார். பின்னர் மஹரகமை கபூரிய்யா அரபுக்கல்லூரியில் இணைந்து ஷரீஆ கல்வியைக் கற்று 1951ம் ஆண்டு வெளியாகினார்.
பின்னர் 1957 - 1958 வரை அட்டாளைச் சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயின்றார். அதனைத் தொடர்ந்து பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் பீ.ஏ. சிறப்புப் பட்டம் பெற்றார், பின்னர் கொழும்பு பல்கலைக் கழகத்தில் பட்டப்பின் படிப்பு கல்வியியல் டிப்லோமாவை நிறைவு செய்தார்.
**சேவைகள்**
1951ம் ஆண்டு கபூரிய்யாவில் பட்டம் பெற்று வெளியேறியதைத் தொடர்ந்து அங்கே ஒரு வருடம் ஆசிரியராக கடமையாற்றினார்.
பின்னர் 1952ம் ஆண்டு கொழும்பு ஸ ஹிறாக் கல்லூரியில் தற்காலிக ஆசிரியராக கடமையாற்றினார். அதனைத் தொடர்ந்து 1953 ஜனவரி தொடக்கம் 1955 டிஸம்பர் வரை புத்தளம் ஸாஹிறாக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றினார்.
பின்னர் 1956ம் ஆண்டு கற்பிட்டி அல் அக்ஸா பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றினார், இவ்வாறாக அரச பாடசாலைகளில் 20 வருடங்கள் ஆசிரியராக பணிபுரிந்துள்ளார்.
இவை தவிர 17 வருடங்கள் கல்வி அதிகாரியாவும் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றினார்.
மேலும் 16 வருடங்கள் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தில் பிரதம பரீட்சகராகக் கடமையாற்றினார்.
அதேவேளை 1954ல் மௌலவி தாஸீம் நத்வி மற்றும் அவரது சகோதரர் அப்துர் றஹ்மான் போன்றோருடன் இணைந்து 'இஹ்வதுல் இஸ்லாம்' என்ற அமைப்பை உருவாக்கி நீர்கொழும்பு பிரதேசத்தை மையப்படுத்தி பல வேலைகளை மேற்கொண்டார்.
'இஹ்வதுல் இஸ்லாம்' அமைப்பானது 1980ம் ஆண்டுவரை இயங்கியது, குறித்த அமைப்பின் செயலாளரக 07 வருடங்கள் கடமையாற்றினார்.
இலங்கை ஜமாஅதே இஸ்லாமி அமைப்புடன் நெருங்கிய உறவைப் பேணிவந்த மௌலவி றியாழ் அவர்கள் 1956ம் ஆண்டு கம்பஹ மாவட்டத்திலேயே முதலாவது தப்லீக் இஜ்திமாவை நடாத்தி கம்பஹ மாவட்டத்தில் தப்லீக் ஜமாஅத்தை அறிமுகம் செய்து வைத்தார்.

**கௌரவ சேவைகள்**





1. அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் தேசிய பொதுச் செயலாளராக 25 வருடங்கள் கடமையாற்றினார்.
முஸ்லிம் தனியார் சட்டங்களில் திருத்தங்களைச் செய்வதற்காக 1986ல் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழுவில் முஸ்லிம் அல்லாதோரும் இடம்பெற்றிருந்ததால், தேசிய முஸ்லிம் அமைப்புகளை ஒன்றிணைத்து அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் தலைமையின் கீழ் ஷரீஆ பாதுகாப்பு முன்னணியை உருவாக்கி அதன் மூலம் போராடி முஸ்லிம்களை மாத்திரம் கொண்ட குழுவை அரசாங்கம் நியமிக்கும்படி வைத்தமை குறிப்பிடத்தக்கது.
அதே போன்று ஜம்இய்யதுல் உலமாவின் கீழ் ஹிலால் குழுவை உருவாக்கி கொழும்பு பெரிய பள்ளிவாசலுடன் இணைந்து பிறை தீர்மானங்களை எடுக்கும் முறைமையை உருவாக்கி அச் சேவையை சிறப்பாக மேற்கொள்ள வழி செய்தார்.
இலங்கை தேசிய கல்வித்திட்டங்களில் மாற்றங்கள் ஏற்பட்ட வேளைகளில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா மூலம் நடவடிக்கைகளை மேற்கொண்டார். இக்காலப்பகுதியில் இவரது முயற்சியால் 1996ம் ஆண்டு ராபிததுல் ஆலமில் இஸ்லாமியின் நிதியுதவியுடன் ஜம்இய்யதுல் உலமாவிற்கு 4 மாடிகளைக் கொண்ட தலைமைக் காரியாலயம்







அமைக்கப்பட்டது. ஜம்இய்யதுல் உலமாவின் ஹலால் கமிட்டியை உருவாக்குவதிலும் முக்கிய பங்குவகித்தார்.
ஜம்இய்யதுல் உலமாவின் 'ஸவ்துல் உலமா' சஞ்சிகை சிறப்பிதழ்களில் 10 வருடமாக ஆசிரியராகக் கடமையாற்றினார். ஜம்இய்யதுல் உலமாவின் உயர்விற்கும், அதன் வளர்ச்சி, அதனூடாக சமூக உயர்விற்கும் கடுமையாகப் பாடுபட்டார், ஜம்இய்யதுல் உலமா வரலாற்றில் தவிர்க்க முடியாத, முக்கியமான ஒருவராக றியாழ் மௌலவி காணப்படுகிறார் என்றால் அது மிகையாகாது.
2. இஸ்லாமிய ஆராய்ச்சிக் கழகத்தின் செயலாளராக 12 வருடங்கள் பணியாற்றிய காலப் பகுதியில் மார்க்கம் சம்பந்தமாக எழுந்த பல்வேறு பிரச்சினைகளையும் பல தரப்பட்ட மார்க்க அறிஞர்களின் ஒத்துழைப்புடன் கையாண்டு இஸ்லாமிய நோக்கில் உரிய விளக்கத்தை வழங்கினார். அத்துடன் கழகத்தை நேரடி செயற்பாட்டு அமைப்பாகவும் ஆக்கினார். உதாரணமாக,
இஸ்லாமிய ஆராய்ச்சிக் கழகத்தின் செயலாளராக கடமையாற்றும் காலப் பகுதியில், கொழும்பு மாநகர சபையினால் ஆடு மாடுகளை அறுக்கும்போது அவற்றை மயக்கமடையச் செய்து அறுக்க வேண்டும் என்று சட்டம் கொண்டுவரப்பட்டபோது 1964-5-15 ம் திகதி உலமாக்கள் மாநாட்டை நடாத்தி அச் சட்டத்தை வாபஸ் வாங்கச் செய்தார்.
3. அகில இலங்கை அரபு ஆசிரியர் சங்கத்தின் தலைவராக 06 வருடங்கள் பணியாற்றினார்.
4. கல்வி அமைச்சின் கீழ் இயங்கிய அரபு மொழி அபிவிருத்திக் கழகத்தின் செயலாளராக 04 வருடங்கள் பணிபுரிந்தார்.
5. இலங்கை ஷருபவாஹினி கூட்டுத் தாபனத்தின் முஸ்லிம் நிகழ்ச்சிகளின் ஆலோசனை சபை அங்கத்தவராக 03 வருடங்கள் கடமையாற்றினார்.
6. இலங்கை வக்பு சபை உறுப்பினராக 03 வருடங்கள் பணிபுரிந்தார்.
7. கல்வி அமைச்சு மற்றும் இலங்கை தேசிய கல்வி நிறுவகம் ஆகியவற்றின் இஸ்லாம் அரபு மதியுரை சபை அங்கத்தவராக 07 வருடங்கள் வேலை செய்தார்.
8. கபூரிய்யா அரபுக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கச் செயலாளராகவும் பிரசுரக் கழகச் செயலாளராகவும் 16 வருடங்கள் பணியாற்றினார்.
9. நீர்கொழும்பு காமச்சோடை முஸ்லிம் பாடசாலை ஸ்தாபகர் குழு, அபிவிருத்திக் குழு அங்கத்தவராக பணிபுரிந்தார்.
10. நீர்கொழும்பு ஆமிலுல் இஸ்லாம் சமூக நல இயக்கத்தின் ஸ்தாபக அங்கத்தவர்களுள்

**இந்த வாரம் மௌலவி எம்.ஜே.எம்.றியாழ் அவர்களின் வரலாற்றுத் தகவல் வெளியாகிறது.**

ஒருவர்.
11. நீர்கொழும்பு 'மத்ரஸதுல் ஹிலால் லிதர்பிய்யதில் அத்பால்' குர்ஆன் பாடசாலைப் பணிப்பாளர்.
12. பலஹத்துறை மத்ரஸது ஹுதைபதுல் யமான் பாதுகாவலர்.
13. குருநாகல் மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் ஸ்தாபகர்.
14. புத்தளம் மாவட்ட அரபு ஆசிரியர்கள் சங்க ஸ்தாபகர்.
15. கபூரிய்யா அரபுக்கல்லூரியிலும், கல் எலிய பெண்கள் அரபுக்கல்லூரியிலும் ஊதியம் பெறாது வருகை தரு விரிவுரையாளராகக் கடமை யாற்றினார்.
16. அரசாங்கப் பாடசாலைகளின் பாடவிதான அபிவிருத்தி நிலையத்தின் இஸ்லாம், அரபுப்பாடக் குழு அங்கத்தவராக 02 வருடங்கள் பணியாற்றினார்.
17. பரீட்சைத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட அல் ஆலிம் பாடத்திட்டக் குழுச் செயலாளராகச் செயற்பட்டதுடன். அல் ஆலிம் பரீட்சை அங்கத்தவராகவும் செயற்பட்டார்.
18. பரீட்சைத் திணைக்களத்தினால் இஸ்லாம், அரபுப் பாடங்கள் சம்பந்தமாக நடாத்தப்படும் பரீட்சைகள் சிலவற்றின் பிரதம கட்டுப்பாட்டுப் பரீட்சகராகக் கடமை புரிந்தார்.
19. முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட அரபுக்





கல்லூரிகளின் பொதுப் பாடத்திட்டம் வகுக்கும் குழு அங்கத்தவராகச் செயற்பட்டார்.
20. முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட அல் குர்ஆன் பாடசாலை, அஹதிய்யா பாடசாலை பொதுப் பாடத்திட்டம் வகுக்கும் குழு அங்கத்தவராக செயற்பட்டார்.
21. நீர்கொழும்பு ஸைலான் சர்வதேசப் பாடசாலைப் பணிப்பாளர் சபை அங்கத்தவராக இருந்தார்.
22. ஹிஜ்ரி 15ம் நூற்றாண்டு ஆரம்ப விழாவிற்கான தேசிய ஏற்பாட்டுக் குழு அங்கத்தவராக இருந்தார்.
23. இலங்கை அரசாங்க, தனியார் பாடசாலைகளிலும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளிலும் அமுல் நடாத்தப்படும், இஸ்லாம், அரபு பாடத்திட்டங்கள், பாட நூல்கள் பற்றி தமிழ் நாட்டில் உள்ள அரபிக் கல்லூரிகள் சிலவற்றில் விளக்கவுரை நிகழ்த்தினார், உதாரணமாக சென்னை ஜமாலிய்யா அரபிக் கல்லூரியைக் குறிப்பிடலாம்.
24. இலங்கையில் யுத்தம் நிகழும் காலத்தில் 2003ம் ஆண்டளவில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிகாலத்தில் தற்காலிக யுத்த நிறுத்தத்தின் போது சர்வ மத தலைவர்கள் குழு ஒன்று குடா நாட்டுக்கு சென்று நாட்டின் சமாதானம் பற்றி விடுதலைப்புலி இயக்கத் தலைவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன் அக்குழுவிலும் அங்கம் வகித்தார்.
25. 1978 ஏப்ரல் 22ம் திகதி நீர்கொழும்பில் நடந்த காதியானிகளுக்கு எதிரான அனைத்து இலங்கை முஸ்லிம்களின் மாபெரும் மாநாட்டின் பிரதம அமைப்பாளராகச் செயற்பட்டார்.
சேவைகள், அவர்கள் பெற்றுக் கொண்ட சில விருதுகள்.

**பங்குபற்றிய மாநாடுகளும் கருத்தரங்குகளும்**

1. 1974ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற அனைத்துலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் 'ஈழத்தில் அரபு மொழியும், அரபுக் கலாசாலைகளும்' எனும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தார்.
2. 1980ம் ஆண்டு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச நினைவு மண்டபத்தில் நடந்த ஹிஜ்ரி 15ம் நூற்றாண்டு தொடக்க விழாவில் அவரால் எழுதப்பட்ட 'மதீனாவை நோக்கி' என்ற புத்தகம் விழாவின் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட ராபிததுல் ஆலமில் இஸ்லாமியின் அப்போதைய செயலாளர் மர்ஹூம் அஷ்ஷெய்க் முஹம்மது அலி அல் ஹரகான் மூலம் வெளியிடப்பட்டமை.
3. 1982ல் கொழும்பில் நடைபெற்ற அனைத்துலக உலமாக்கள் மாநாட்டில் இலங்கை சார்பாகப் பங்குபற்றியமை.
4. மர்ஹூம் பாக்கிர் மாக்கார் அவர்களது தலைமையில் நடந்த அனைத்துலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் உலமாக்கள் சார்பாகப் பங்குபற்றி மார்க்கம் சம்பந்தமான கருத்தரங்கை தலைமை தாங்கி நடாத்தியமை.
5. 1982ல் லாஹூரில் நடைபெற்ற உலமாக்களுக்கான மாநாட்டில் இலங்கை சார்பாகப் பங்குபற்றியமை.
6. 2000ம் ஆண்டு எகிப்து சென்றபோது அப்போதைய அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத் தலைவராக இருந்த மர்ஹூம் செய்யித் அலி தந்தாவி அவர்களுடனான நேர்காணல் மேற்கொண்டமை.
7. 2000ம் ஆண்டு லிபியாவில் நடைபெற்ற சர்வதேச உலமாக்கள் மாநாட்டில் பங்குபற்றியமை.
8. 2007ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற அனைத்துலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்வு மாநாட்டில் பங்குபற்றி 'இலங்கையில் இஸ்லாம் அரபு போதனை – ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்' என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரையை முன்வைத்தமை.
9. 2008ம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற 'சமூகங்களுக்கிடையிலான நல்லுறவை வளர்ப்பதற்கான வழிகளும் செயற்பாடுகளும்' எனும் கருத்தரங்கில் 'இத்திஹாதுல் முஸ்லிமீன்' சார்பாக பங்குபற்றி கருத்துரை வழங்கியமை.
10. 2009ம் ஆண்டு கொழும்பில் நடந்த கருத்தரங்கொன்றில் 'பல்லின சமூகங்கள் வாழும் ஒரு நாட்டில் முஸ்லிம்கள் தமது கலாசாரங்களையும் தனித்துவங்களையும் பேணிப் பாதுகாப்பதில் ஏற்படும் பிரச்சனைகளும் அவற்றைத் தீர்ப்பதற்கான ஆலோசனை களும்' எனும் தலைப்பில் உரை நிகழ்த்தியமை.

**இலக்கியப் பணிகள்**
1. இலங்கையின் தினசரிப் பத்திரிகைகள், இஸ்லாமிய சஞ்சிகைகள், மற்றும் தமிழகத்தின் 'மணி விளக்கு, முஸ்லிம் முரசு, பிறை, ரஹ்மத், ஜமாஅதுல் உலமா, மறுமலர்ச்சி' போன்ற சஞ்சிகைகளிலும் இயற் பெயரிலும், 'முஅல்லிம்' என்ற புனை பெயரிலும் கட்டுரைகள் எழுதியுள்ளார்.
2. மதீனாவை நோக்கி – இவரால் எழுதப்பட்ட இப்புத்தகமானது உயர்தர மாணவர்களுக்கான இஸ்லாம், இஸ்லாமிய நாகரீக பாடங்களுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கான இஸ்லாம் பாட வழிகாட்டலுக்கும் துணையாக அமைந்தது. இது துணைநூலக கல்வி அமைச்சின் நூல் பிரசுர ஆலோசனை குழுவினதும் மற்றும் தேசிய கல்வி நிறுவனத்தினதும் சிபாரிசு பெற்றமை குறிப்பிடத்தக்கது.
3. காதியானிகளின் வழிகேடு.
4. இஸ்லாமும் சூதாட்டமும்.
5. காதியானிகள் காபிர்களே (சிறு பிரசுரம்).
6. அல்லாமா இக்பால் அவர்களும் அஹமதிகளும் (சிறு பிரசுரம்).
7. நீர்கொழும்பில் நடைபெற்ற இறுதி நபித்துவ விளக்க மாநாடு (சிறு பிரசுரம்).
8. அரசாங்க பாடசலைகளின் இஸ்லாம், அரபு பாட நூலாக்கக் குழு அங்கத்தவர் மற்றும் ஆலோசகர்.

**கௌரவ விருதுகள்**
1. அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் விருதும், நினைவுச் சின்னமும்.
2. அம்பாரை மாவட்ட ஜம்இய்யதுல் உலமாவின் 'ஷைஹுல் உலமா' விருதும் நினைவுச் சின்னமும்
3. கம்பஹ மாவட்ட ஜம்இய்யதுல் உலமாவின் 'ஷம்சுல் உலமா' விருதும் நினைவுச் சின்னமும்.
4. கொழும்பு இஹ்ஸானிய்யா அரபுக் கல்லூரியினால் 'காதிமுல் உம்மா' (சமூகத் தொண்டன்) விருதும் நினைவுச் சின்னமும்.
5. முல்லைத்தீவு ஜம்இய்யதுல் உலமாவின் 'சிராஜுல் உலமா' விருதும் நினைவுச் சின்னமும்.
6. அகில இலங்கை கதீப்மார் சம்மேளனத்தின் சார்பாக பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டமை.
7. இலங்கை இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் 'அல் வஹ்தா' நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை.
8. சஊதி அரேபியா இஸ்லாமிய விவகாரங்கள் மற்றும் அவ்காப் அமைச்சின் சார்பாக விஷேட நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை.
9. அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் சார்பில் அதன் ஸ்தாபக அங்கத்தவருக்கான நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை.
10. சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக அதன் சிரேஷ்ட அங்கத்தவர்களுக்கான நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக் கப்பட்டமை.
11. காயல்பட்டணம் தீவுத்திடலில் நடந்த விஷேட பொதுக் கூட்டமொன்றில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டமை.
12. நீதி அமைச்சின் சார்பாக அகில இலங்கை சமாதான நீதிவான் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை.
13.கலாசார அமைச்சு சார்பாக 'கலாபூஷணம்' விருது வழங்கிக் கௌரவிக்கப்படமை.
இத்தகைய பல சேவைகள் செய்த மாபெரும் ஆளுமையான மௌலவி எம்.ஜே. எம். றியாழ் அவர்கள் 2013ம் ஆண்டு டிஸம்பர் 10ம் திகதி வபாத்தானார்கள். அன்னாரது ஜனாஸா 11.12.2013 அன்று காமச்சோடை பள்ளிவாசலில் ஜனாஸாத் தொழுகை நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மாலை 4.00 மணி அளவில் பெரியமுல்லை மையவாடியில் ஜனாஸா நல்லடக்கம் இடம்பெற்றது.

# தமிழ், முஸ்லிம் மாணவ, மாணவிகளை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு





**(றிபாஸ்)**

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கல்விப்பிரிவின் ஏற்பாட்டில் 2024ம் ஆண்டு க.பொ.த சாதாரண மற்றும் உயர்தரத்தில் ஏ தர சித்திகளைப் பெற்று பாடசாலைக்கும் பிரதேசத்திற்கும் பெருமை சேர்த்த மாணவ,மாணவிகளை கௌரவிக்கும் “ASSAD INSPIRE AWARDS-2025” மாபெரும் கௌரவிப்பு நிகழ்வு செவ்வாய்க் கிழமை அக்கரைப்பற்று பிரதேச சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர் எஸ்.எம். சபீஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான றிஷாத் பதியுதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார் .

அக்கரைப்பற்று மற்றும் திருக் கோவில் வலயக்கல்வி அலுவலக அதிகாரிகள், அட்டாளைச்சேனை பிரதேசசபையின் முன்னாள் உதவித் தவிசாளர் எம்.எஸ்.எம். ஜஃகுபர் உட்பட மாநகர சபை, பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

அக்கரைப்பற்று, திருக்கோவில் கல்வி வலயங்களைச் சேர்ந்த சுமார் 158 மாணவ, மாணவிகளுக்கு, நினைவுச் சின்னம், பணப்பரிசு என்பன வழங்கி வைக்கப்பட்டதுடன் தமிழ், முஸ்லிம் மாணவர்களின் கலை கலாசார நிழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## கறுப்பு அக்டோபர் 2025 -புத்தளத்தில் நினைவேந்தல் ஒன்று கூடல்




**(எம்.எச்.எம்.சியாஜ்)**

1990 ஆம் ஆண்டில் பலவந்தமாக வெளியேற்றப்பட்டோரின் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கருப்பு அக்டோபர் நினைவேந்தல் நிகழ்வு புத்தளத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வை 1990 ஆம் ஆண்டில் பலவந்தமாக வெளியேற்றப் பட்டோரின் சங்கம் ஏற்பாடு செய்தது. பலவந்தமாக வெளியேற்றப்பட்டு 35 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

நிகழ்வில் வெளியேற்றப்பட்ட குடும்பங்கள், சமூகத் தலைவர்கள் மற்றும் இளைஞர்கள் பங்கேற்று, தங்களது நில உரிமைகள், மீள்குடியேற்றம் மற்றும் வாழ்வாதார உரிமைகளுக்கான கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

பேச்சாளர்கள் பல தசாப்தங்களாக நீடித்து வரும் இந்த அநீதிக்கு விரைவான தீர்வை அரசிடம் கோரினர்.

இந்நிகழ்வில் “எங்கள் வீடுகள், எங்கள் நிலங்கள், எங்கள் உரிமைகள்” என்ற வாசகம் ஒலித்தது. நிகழ்வின் முடிவில் அமைதி, நீதி மற்றும் நல்லிணக்கத்திற்காக பிரார்த்தனையும் ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கற்பிட்டி பள்ளியாவத்தை மக்களின் வாழ்வாதார மேம்பாடு தொடர்பான விஷேட கலந்துரையாடல்



**(எம்.எச்.எம். சியாஜ்)**

கற்பிட்டி பிரதேசத்தின் பள்ளியாவத்தை வட்டாரத்தில் ஏழ்மை நிலையில் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற் கான செயல் திட்டங்களை சமூக அபிவிருத்தி அமைப்பின் ஊடாக செயற்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் முகத்துவாரம் மற்றும் புதுக்குடியிருப்பு பகுதிகளில் பள்ளியாவத்தை வட்டாரத்தின் கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர் ஏ.ஆர்.எம் முஸ ம்மில் தலைமையில் ஞாயிற்றுக் கிழமை (02) இடம்பெற்றது.

மேற்படி கலந்துரையாடலில் சமூக அபிவிருத்தி அமைப்பின் பணிப்பாளர் கே.எம் அஸ்ஹர், சமூக அபிவிருத்தி அமைப்பின் ஆலோசகரும் ஒய்வு பெற்ற மாவட்ட செயலாளருமான டப்யூ. பிரேமதாச, கற்பிட்டி பிரதேச கிராமிய அபிவிருத்தி குழுத் தலைவர் எம்.எஸ் ரனீஸ் மற்றும் சமூக அபிவிருத்தி அமைப்பின் கணினி பிரிவு பொறுப்பாளர் எம். எச்.எம் நப்ரிஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஸாஹிராக் கல்லூரியில் முஸ்லிம் கலாசாரப் போட்டி நிகழ்வுகள்





**( ஐ. ஏ. காதிர் கான் )**

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திக் கிளை அனுசரணையில் “அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான முஸ்லிம் கலாசாரப் போட்டி - 2025” தேசிய மட்டப் போட்டிகள், கொழும்பு - மருதானை, ஸாஹிராக் கல்லூரியில், சனிக்கிழமை (01) ஆரம்பமானது.

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இக்கலாசாரப் போட்டி நிகழ்வுகளில், மாணவ மாணவிகள் கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவுகளாகக் கலந்து கொண்டு, தனித்தனியாகவும் குழுவினராகவும் தமது திறமைகளை வெளிப்படுத்தினர்.

கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திக் கிளையின் பணிப்பாளர் என்.ரீ. நஜிமுதீன் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கல்வி அமைச்சின் பாடசாலை விவகார மேலதிக செயலாளர் பீ.ஆர். காரியவசம் மற்றும் சிரேஷ்ட உதவிச் செயலாளர் எம்.எப். கமருன் நிஸ ா, ஸாஹிராக் கல்லூரி அதிபர் றிஸ்வி மரிக்கார் உள்ளிட்ட கல்வி அமைச்சு மற்றும் கல்வி சார் உயர் அதிகாரிகள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

## பேருவளை சிரேஷ்ட ஊடகவியலாளர் முக்தார் கௌரவிப்பு




**(பேருவளை நிருபர்)**

பேருவளை பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த சாஹித்திய விழா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் ஜானக பெரேராவின் தலைமையில் இடம்பெற்றது.

எழுத்தாளர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கௌரவிக்கப்பட்டனர். சிரேஷ்ட ஊடகவியலாளர் (லேக் ஹவுஸ்) பீ.எம் முக்தாரின் 43 வருட ஊடகப் பணிகளை பாராட்டி இவருக்கு விருது வழங்கி கௌரவிக்கப் பட்டது.

மேலும் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக ஊடக பணி மேற்கொண்டு வரும் ஊடகவியலாளர்களான துஸித குமார டி .ஸில்வா,சுமித் கருணா ரத்ன ஆகியோரும் இங்கு கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஜேர்மன் பாடசாலை மாணவர்கள் பேருவளை விஸ்டம் சர்வதேச கல்லூரிக்கு விஜயம்





**( பீ.எம்.முக்தார்)**

இலங்கையில் முன்னணி சர்வதேச பாடசாலைகளுல் ஒன்றாக திகழும் பேருவளை விஸ்டம் சர்வதேச பாடசாலைக்கும் ஜேர்மனிலுள்ள எல்பர்ட் ஏன்ஸ்டையன் பாடசாலைக்குமிடையில் டைபெரும் மாணவர் பரிமாற்ற வேலைத்திட்டம் கடந்த பத்து வருடங்களாக வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் பேருவளை விஸ்டம் சர்வதேச கல்லூரி மாணவர்கள் 15 பேர் வருடாந்தம் பாடசாலையின் முகாமைத்துவத் தலைவர் பவ்ஸர் ஹூஸைன் தலைமையில் ஜேர்மனிலுள்ள எல்பர்ட் ஏன்ஸ்டையன் பாடசாலைக்கு செல்வதோடு ஜேர்மனிய பாடசாலை மாணவர்கள் 15 பேர் விஸ்டம் சர்வதேச கல்லூரிக்கும் விஜயம் செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனிய பாடசாலை மாணவர்கள் இரு வார கால விஜயமொன்றை மேற்கொண்டு விஸ்டம் சர்வதேச பாடசாலைக்கு வருகை தந்தனர். இந்த இரண்டு வார கால பயணம் கற்றல், கலாசார,நட்புறவு மற்றும் மறக்க முடியாத நினைவுகளை கொண்டதாக அமைகிறது.

இலங்கையில் தங்கியிருக்கும் மாணவர்கள் பல்வேறு கல்வி நடவடிக்கைகள் உட்பட விளையாட்டு மற்றும் இன்னோரன்ன நடவடிக்கைகளில் ஈடுபடுவதோடு விஸ்டம் சர்வதேச கல்லூரி மாணவர்களுடன் தமது கல்வி அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர்.மேலும் இவர்கள் இங்கு தங்கியிருக்கும் போது பேருவளையிலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் தர்சிப்பதோடு சுற்று தளங்களுக்கு சென்று பார்வையிடுவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அகில இலங்கை ஆற்றல் உள்ள பெண் எழுத்தாளர்கள் வருடாந்த மாநாடு





**(பாரா தாஹீர்)**

அகில இலங்கை ஆற்றல் உள்ள பெண் எழுத்தாளர்களின் அமைப்பான ஸ்ரீலங்கா பென் கிளப்பின் "திமிலம் " சிறப்பு மலர் வெளியீடும் ,ஐந்தாவது தேசிய மாநாடும் "குடும்ப கட்டமைப்பில் முதலும் பெண்ணே முடிவும் பெண்ணே " என்ற தொனிப் பொருளில் அதன் தலைவி மசூரா சுகுர்தீன் தலைமையில் காத்தான்குடி மெரேன் மஹால் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது .

இந்த நிகழ்வில் நாடளாவிய ரீதியில் இதன் அங்கத்தவர்களாக உள்ள பல ஆற்றல்கள் உள்ள பெ-ண்கள் கலந்து கொண்டனர். இங்கு கவிதாயிணிகளைக் கொண்ட சிறப்பு கவியரங்கு ஒன்று நடைபெற்றதோடு,ஏற்கனவே நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பும், விருது வழங்களும் இடம் பெற்றன.

இவ் நிகழ்வில் விசேட அதிதிகளாக ஓய்வு பெற்ற பிரதி கல்விப் பணிப்பாளர் கலாபூஷணம் ஏ பீர்முகம்மது,மட்டக்களப்பு பட்டிப்பளை பிரதேச உதவி செயலாளர் எஸ். பார்த்தீபன், சட்டத்தரணி நதீஹா அப்பாஸ், மட்டக்களப்பு மாவட்ட தமிழ்ச்சங்க தலைவர் சைவப்புரவலர் விநாயகமூர்த்தி ரஞ்சித் மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர். கௌரவ அதிதிகளாக இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எம். ஏ .ரஸ்ஸாக் , அம்பாறை மாவட்ட கலாச்சார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ. எல். தௌபீக், கீறல் சஞ்சிகை ஆசிரியர் அஸீஸ் எம். பாயிஸ், மகுடம் சஞ்சிகை ஆசிரியர் மைக்கல் கொலின், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# சீனடிக் கலைப் போட்டியில் புத்தளம் ஸாஹிராவுக்கு தேசிய மட்டத்தில் முதலிடம்



**(எம்.எச்.எம்.சியாஜ்)**

புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையின் உயர்தர மாணவர்கள் அகில இலங்கை தேசிய மட்ட இஸ்லாமிய கலாசார போட்டியான சீனடிக் கலை போட்டியில் முதலாம் இடத்தை பிடித்து தேசிய மட்டத்தில் சாதனையை நிலைநாட்டி பாடசாலைக்கும் புத்தளத்திற்கும் பெருமை சேர்த்துள்ளதாக அதிபர் ஐ.ஏ நஜீம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சீனடிக் கலையின் தேசிய மட்ட போட்டிகள் சனிக்கிழமை (01) கொழும்பு சாஹிரா தேசிய கல்லூரியில் இடம்பெற்றது.

சீனடிக் கலையில் ஸாஹிரா தேசிய பாடசாலை சார்பில் உயர்தர மாணவர் குழுவினரகளான ஜே.சாஜித் (தலைவர்) எம்.ஏ.எம் ஆதில், எம்.கே கைஸ், எம்.எச் ஹைதம் காசிம், எம் ஏ எம் அஸ்மத். எஸ்.எம் அர்ஷத், எம் எம் எம் முன்தீர், எம் ஆர் எம் றஹீக் ஆகிய மாணவர்களையும் பயிற்றுவித்து வெற்றி பாதைக்கு வழிகாட்டிய ஆசிரியர் எம்.ஏ.எம். சுபியான் ஆகியோருக்கும் பாடசாலை நிர்வாகம் சார்பாக தனது வாழ்த்துக்களையும் பாராட்டுக் களையும் பாடசாலையின் அதிபர் தெரிவித்துள்ளார்.

# றிஷாட் பதியுதீனால், மேல்மாகாணம் மற்றும் தென் மாகாண மாணவர்கள் கௌரவிப்பு!





அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசியத் தலைவரும், பாராளு மன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீனின் நெறிப்படுத்தலின் கீழ், கட்சியின் கல்விப்பிரிவின் ஏற்பாட்டில் நாடாளவிய ரீதியில் நடைபெற்றுவரும் கௌரவிப்பு நிகழ்வின் அடுத்த கட்டமாக மேல்மாகாணம் மற்றும் தென் மாகாண மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு ஞாயிற்றுக் கிழமை (02) கொழும்பு மருதானை ஸாஹிரா கல்லூரி கபூர் மண்டபத்தில் கட்சியின் சட்ட விவகாரங்களுக்கான ஆலோசகரும், கொழும்பு மாவட்ட அமைப்பாளரு மான சிரேஷ்ட சட்டத்தரணியுமான ருஸ்தி ஹபீப் தலைமையில் இடம்பெற்றது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந் தோட்டை போன்ற மாவட்டங்களில் உயர்தரப் பரீட்சையில் 3ஏ சித்திகளைப் பெற்ற மாணவர்களும், சாதாரண தரப் பரீட்சையில் 9ஏ சித்திகளைப்பெற்ற மாணவர்களும் இதன் போது கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வுக்கு, பிரதம அதிதியாக மேல் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் பதில் தலைவர் நீதிபதி லபர் தாஹிர் கலந்து கொண்டதுடன், அதிதிகளாக ஸ ாஹிரா கல்லூரி அதிபர் றிஸ்வி மரைக்கார், தென் மாகாண கல்விப் திணைக்களத்தின் பிரதி கல்வி பணிப்பாளர் அஷெய்க் மசாஹிம், மேல்மகாண பிரதி கல்விப்பணிப்பாளர் மஹ்சூர், கொழும்பு வலைய பிரதி பண்ணிப்பாளர் மும்தாஸ் பேகம், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபான முஸ்லிம் சேவை



முன்னாள் பணிப்பாளர் அஹமத் முனவ்வர், கட்சியின் களுத்துறை மற்றும் கொழும்பு மாவட்ட உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# கனடா சர்வதேச கல்வி மாநாட்டில் இல்ஹாம் மரைக்கார் பங்கேற்பு



சர்வதேச கல்வி மாநாடு கடந்த 02 ஆம் திகதி ஆரம்பமாகி 14 நாட்கள் இடம் பெற்று வருகின்றது. கல்வி,சுற்றுலாத்துறை, ஏற்றுமதி இறக்குமதி, விவசாயம் உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்தவர்கள் Chamber of commerce அமைப்பின் கீழ் இயங்கும் இலங்கை கனடா வர்த்தக கவுன்சிலினால் தெரிவு செய்யப்பட்டு மேற்படி மாநாட்டுக்கு அனுப்பப்பட்டனர்.

இதன் மூலம் இலங்கைக்கும் கனடாவுக்கும் இடையிலான பல்வேறு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளதாகவும், இதனால் இலங்கை பல்வேறு நன்மைகளை அடையும் என இக் குழுவில் பயணித்துள்ள அமேசான் கல்வி நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரும், உளவியல் விரிவுரையாளரும், கல்வியளருமான இல்ஹாம் மரைக்கார் தெரிவித்தார்.

மாநாட்டின் முக்கிய அம்சங்களாக, பன்னாட்டு கல்வி மற்றும் மாணவர் ஆதரவு, புதிய கூட்டாண்மைகள் மற்றும் நெட்வொர்க்கிங் வாய்ப்புகள், உலகளாவிய கல்வி மாற்றங்கள் குறித்த விவாதங்கள் என்பன அமையும் என்றும் மேலும் சுட்டிக்காட்டினார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டுள்ள கல்வியளாலர் இல்ஹாம் மரைக்கார் புத்தளத்தை பிறப்பிடமாக கொண்டவரும்,புத்தளம் மற்றும் கொழும்பு சாஹிரா கல்லூரிகளின் பழைய மாணவர் என்பதுடன் பேராதனை பல்கலைக்கழகத்தின் உளவியல் பீடத்தின் பகுதி நேர விரிவுரையாளராகவும் பணியாற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய மட்டத்திற்கு முன்னேறி சாதனை நிலைநாட்டிய சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய மாணவர்கள்

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

கலாசார அலுவல்கள் அமைச்சினால் வருடந்தோறும் நடாத்தப்பட்டு வரும் பிரதீபா - 2025 மாகாண மட்டப் போட்டியில், சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய மாணவர்கள் தேசிய மட்டத்திற்கு முன்னேறி சாதனை நிலை நாட்டியுள்ளனர்.

இம்முறை மருதமுனை ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற இந்த போட்டிகளில் சுமார் 15 க்கு மேற்பட்ட மத்திய நிலையங்கள் பங்குபற்றியிருந்தன. அதில் முஸ்லிம் பிரிவில் சுமார் 07 மத்திய நிலையங்கள் கலந்து கொண்டன.

இந்த கிழக்கு மாகாண மட்டப் போட்டிகளில் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் கலந்து கொண்ட கோலாட்டம் கனிஷ்ட நிகழ்ச்சியில் 90 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டு சாய்ந்த மருதுக்கு பெருமை சேர்க்கும் வகையில் வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

இது சாய்ந்தமருது வரலாற்றில் எழுதப்பட வேண்டிய பாரிய தொரு வெற்றியாகும். ஏனெனில், சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையம் திறந்து குறுகிய காலப்பகுதியில் மிக நீண்ட காலமாக செயற்பட்டு வந்த மத்திய நிலையங்களை வீழ்த்தி இவ்வெற்றிச் சாதனையை நிலை நாட்டியுள்ளனர்.

இந்த வெற்றியில் பங்கு கொண்ட கோலாட்டப் பிரிவின் சாய்ந்த மருது அல்ஹிலால் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களான எம்.எம்.எம். சல்பி, என்.எம். நப்லான், எம்.எம்.றினாஸ், என்.எம்.அப்றி, எம்.ஏ. ஆபித், ஆர். கம்ரான் அஹ்மத், எம்.என்.எம். மாயிஸ், ஏ.எம்.அஹ்திர் ஆகியோரும் கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் மாணவர்களான ஆர்.எம். றிவி, எஸ்.எம். ஸராப், எஸ்.எல்.எம். ஹாதீம் மற்றும் இவ்வெற்றிக்கு பின்புலமாய் இருந்து செயற்பட்ட சாய்ந்த மருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் மற்றும் கலாசார மத்திய நிலையத்தில் இம் மாணவர்களைப் பயிற்றுவித்த வளவாளர்களான, சிரேஷ்ட அண்ணாவியார் ஏ. இஸ்ஸதீன், எம்.ஐ.எம். அமீர் (ஆசிரியர்), பொல்லடி பயிற்றுவிப்பாளர் ஊடகவியலாளர் கலைச்சுடர் எம்.எஸ்.எம்.ஸாகிர் உட்பட வெற்றிக்காகப்பங்கு பற்றி பாடுபட்ட அனைவருக்கும் கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி ஏ. பி. நௌசாத், வாழ்த்துக்களோடு பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

இதேவேளை, இக்காலாசார மத்திய நிலையத்தின் மூலம் கலந்து கொண்ட ஏனைய போட்டிகளான கிராமிய பாடல் தனி நிகழ்ச்சியில் முதலாமிடத்தையும் மற்றும் கிராமிய பாடல் குழுப் போட்டியில் இரண்டாமிடத்தையும் சாய்ந்தமருது எம்.எஸ். காரியப்பர் வித்தியாலய மாணவர்கள் பெற்றுக் கொண்டதோடு, ரபான் போட்டியில் இரண்டாமிடத்தை கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் மாணவர்கள் பெற்றுக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.



உக்குவளை ரைத்தலாவெல செய்னூன் மத்ரஸா மாணவர்கள் “திறமையின் களம்” எனும் நிகழ்ச்சியில் பங்குபற்றி தமது திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்கு உக்குவளை பிரதேசசபை உதவி தவிசாளர் எஸ். எம். ராபி வழங்கிய ஊக்குவிப்பு பரிசினை இம்மத்ரஸா அதிபர் பர்சானா வழங்கிவைப்பதையும் நிகழ்ச்சியையொட்டி மாணவர்கள் இணைந்து இம்மத்ரஸா அருகில் மரம் நடுவதையும் படத்தில் காணலாம்.

**(உக்குவளை நிருபர்)**

# கடந்த அரசாங்கத்தினால் புறக்கணிக்கப்பட்ட வீதிகள் புனரமைப்பு



**(இரத்தினபுரி நிருபர்)**

கடந்த அரசாங்கத்தினால் புறக்கணிக்கப்பட்ட பலாங் கொடை முஸ் லிம் பிரதேசங்களின் வீதிகள் (முஸ்தபா மாவத்தை வீதி) படிப் படியாக புனரமைக்கப்பட்டு வருவதாகவும் தேசிய மக்கள் சக்தி நகரசபை வேட்பாளர் ஏ.எம்.எம். சாதிக்கின் வேண்டுகோளுக்கமைய நகர சபையின் ஒத்துழைப்புடன் இப்பணிகள் இடம் பெறுவதாகவும் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வசந்த புஷ்பகுமார தெரிவித்தார்.

இதற்கிணங்க பலாங்கொடை நகர சபை பிரிவின் மிரிஸ்வத்த பகுதியின் ஒரு பகுதி வீதியின் புனரமைப்பு பணிகள் 10 இலட்சம் ரூபா செலவில் ஆரம்பிக்கப் பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

# அஷ்ரப் சிஹாப்தீனின் ஒரு குடம் கண்ணீர் நூல் வெளியீடு



இலங்கை நெய்னார் சமூகநலக் காப்பகத்தின் ஏற்பாட்டில் பன்னூல் ஆசிரியரும் சிரேஷ்ட ஒலி, ஒளிபரப்பாளருமான அஷ்ரஃப் சிஹாப்தீன் எழுதிய “ஒரு குடம் கண்ணீர்” நூல் வாசிப்பனுவ நிகழ்வு கொழும்பு - 12, பாத்திமா மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வுக்குத் னுஓடே டுயமெய டாக்டர் முனீர் அபூபக்கர் தலைமை தாங்கினார் .

இளைஞர் பயிற்றுவிப்பாளர் ஹுஸ்னி ஜாபிர், இலங்கை திறந்த பல்கலைக் கழக விரிவுரையாளரும் ஊடகவியலாளருமான தேவகௌரி மகாலிங்கசிவம் ஆகியோர் நூல் வாசிப்பனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்கள்.

அக்பர் பிரதர்ஸ் சந்தைப்படுத்தல் முகாமையாளர் இன்ஷாப்டீன் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

அதனைத்தொடர்ந்து பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கொலன்னாவைப் பிரதேச பள்ளிவாசல் சம்மேளனத் தலைவர் பெரோஸ் முகம்மத் உரை நிகழ்த்தினார். அவருக்கு நூலாசிரியர் சார்பில் பொன்னாடை போர்த்திக் கௌரவம் வழங்கப் பட்டது. இலங்கை நெய்னார் சமூகநலக் காப்பகத் தலைவர் இம்ரான் நெய்னார் மற்றும் 4S அமைப்பினர் நூலாசிரியருக்குப் பொன்னைடைபோர்த்திக் கௌரவம் வழங்கினார்.

வரவேற்புரையை ஆஷிகா பர்ஷான் வழங்கியதோடு நிகழ்வுகளை ஷிமாரா அலி தொகுத்து வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாணந்துறை பிரதேச செயலகப் பிரிவில் முஸ்லிம் பயனாளிக்கான வீடு குடிபுக நிகழ்வு



**(எம்.எஸ்.எம்.முன்தஸிர்)**

அனைவருக்கும் வீடு வீடமைப்புத் திட்டத்தின் கீழ் பாணந்துறை பிரதேச செயலகப் பிரிவில் முஸ்லிம் கிராமத்தில் அமைக்கப்பட்ட பயனாளி ஒருவரின் வீட்டுக்கான குடிபுகு நிகழ்வுகள் பாணந்துறை பிரதேச ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர் நிலந்தி கொட்டகச்சி தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பாணந்துறை பிரதேச ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி நிலந்தி கொட்டகச்சி கலந்துகொண்டு குடும்பத்தவர்களுடன் புதுமனை திறந்து வைத்தார்.

# சீனா மற்றும் அமெரிக்கா இடையேயான வர்த்தக போட்டியின் விளைவுகள்



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் இரண்டாவது பதவிக் காலத்தில், சீன அதிபர் ஜி ஜின்பிங்குடனான முதல் சந்திப்பு மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாக இருந்தது.

இரண்டு தலைவர்களும் எதில் உடன்பட்டனர், எதில் உடன்படவில்லை என்பதை அறிய உலகம் உற்று நோக்கியது.

அமெரிக்காவும் சீனாவும் தற்போது பல துறைகளில் போட்டியிடுகின்றன. பொருட்களுக்கு விதிக்கப்படும் வரிகள் முதல், உயர் தொழில்நுட்ப உற்பத்திக்குத் தேவையான முக்கிய கனிமங்கள் மற்றும் செமிகண்டக்டர்கள் வரை அவை போட்டி போடுகின்றன.

சீனா, தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) துறைகளில் பெரும் அளவில் முதலீடு செய்து வருகிறது. அதேசமயம், நிறுவனங்கள் புதுமையான கண்டுபிடிப்புகளை உருவாக்கவும், புதிய சவால்களை எதிர்கொள்ளவும் ஊக்குவிக்கப்படுகின்றன.

பொருளாதாரத்தின் குறிப்பிட்ட துறைகளை ஒருங்கிணைக்க அரசின் ”திட்டமிட்ட தலையீட்டை” திறம்படப் பயன்படுத்தும் திறமையே, அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தைகளில் சீனாவை அதிக உறுதியானதாக காட்டுகிறது என்று ஸ்டெபானி காம் விளக்குகிறார்.

சீனா நீண்ட கால திட்டத்தை முன்னெடுக்கிறது என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். அதாவது, நீடிக்கக்கூடியதா இல்லையா என்பதில் உறுதியில்லாத ஒரு ஒப்பந்தத்தில் அவசரப்படுவதற்குப் பதிலாக, மேற்கத்திய நாடுகளை குறைவாக நம்பும் தொழில்துறைகளை உருவாக்குவதில் அதிக கவனம் செலுத்தி முதலீடு செய்கிறது.

ஏப்ரல் மாத ”விடுதலை தினத்திற்கு” முன்பே, டிரம்ப் சீனாவுக்கு எதிரான தனது வர்த்தகப் போரைத் தொடங்கினார். அப்போது அவர் பல நாடுகளின் மீது புதிய வரிகளை விதித்தார். இதனால் அமெரிக்காவின் நட்பு நாடுகளும் பாதிக்கப்பட்டன.

சீனா மீது டிரம்ப் நீண்ட காலமாக குறி வைத்திருந்தார். நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள் என விமர்சித்து, தனது முதல் பதவிக் காலத்திலேயே சீனா மீது அவர் வரி விதித்திருந்தார்.டிரம்பின் இரண்டாவது பதவிக்காலம் தொடங்கிய நேரத்தில், பிப்ரவரி மாதத்தில், சீனாவிலிருந்து வரும் அனைத்து இறக்குமதிகளுக்கும், அதற்கு முன்பு இருந்த வரிகளுக்கும் மேலாக கூடுதலாக 10ூ வரி விதித்தார்.சீனா உடனடியாக பதிலடி கொடுத்து தன் வரிகளை உயர்த்தியது. அதற்கு பதிலாக, டிரம்பும் மீண்டும் நடவடிக்கை எடுத்து, சீனாவுக்கு எதிரான அமெரிக்க வரிகளை 20ூ ஆக உயர்த்தினார்.பின்னர் ”விடுதலை தினத்தன்று” டிரம்ப் மேலும் 34ூ வரி விதிப்பதாக மிரட்டினார். இதனால் இரு தரப்பும் தொடர்ச்சியாக பதிலுக்கு பதில் கொடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டன. இறுதியில், அமெரிக்கா சீனாவுக்கு விதித்த வரிகள் 145ூ ஆகவும், சீனா அமெரிக்காவுக்கு விதித்த வரிகள் 125ூ ஆகவும் உயர்ந்தன.

இந்த அதிர்ச்சியூட்டும் வரி உயர்வுகள், உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களை பெரும் குழப்பத்திலும் நிச்சயமற்ற சூழலுக்குள்ளும் தள்ளின. சீனாவின் கிடங்குகளில் சரக்குகள் குவிந்தன. அதேசமயம், அமெரிக்க வணிக நிறுவனங்கள் திடீரென மாற்று விநியோகச் சங்கிலிகளை எவ்வாறு கண்டுபிடிப்பது என திணறின.

தற்போது நடந்துகொண்டிருக்கும் ஆசிய-பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு (APEC) உச்சி மாநாட்டின் இடையே, இரு தலைவர்களும் வியாழக்கிழமை (அக்டோபர் 30) தென் கொரியாவில் சந்தித்தனர்.

டிரம்பின் கூற்றுப்படி, முக்கிய உலகத் தொழில்களில் பயன்படுத்தப்படும் அரிய வகை கனிமங்களின் (Rare Earth Minerals) ஏற்றுமதியை ஓராண்டு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக உலகிற்குத் தொடர்ந்து வழங்கச் சீனா ஒப்புக்கொண்டுள்ளது”அரிய வகை கனிமங்கள் தொடர்பான அனைத்துப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டுவிட்டன. ””அரிய வகை கனிமங்களில் எந்தத் தடையும் இல்லை. அது கூடிய விரைவில் நம் அகராதியிலிருந்து மறைந்துவிடும் என்று நம்புகிறேன்,” என்றார் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப்.

இதற்கு மேல், அமெரிக்காவிற்குள் கொடிய போதை மருந்தான / பெண்டானில் நுழைவதற்குக் காரணமாகச் சீனா மீது விதிக்கப்பட்டிருந்த வரிகள் 20ூலிருந்து 10% ஆகக் குறைக்கப்படும் என்றும் டிரம்ப் கூறினார். இதன் மூலம் சீனா மீதான மொத்த அமெரிக்க வரி விகிதம் 57ூலிருந்து 47ூ ஆகக் குறைகிறது.

டிரம்ப் இந்தச் சந்திப்பை ”அற்புதமானது” என்று வர்ணித்ததுடன், ”பூஜ்யம் முதல் 10 வரை ஒரு அளவுகோலில், 10 சிறந்தது என்றால், இந்தச் சந்திப்புக்கு நான் “12“ கொடுப்பேன்,” என்றும் கூறினார். எனினும், நடந்தவை இரு தலைவர்களும் வெளிப்படுத்த விரும்பிய செய்திகளைக் குறிப்பால் உணர்த்துவதோடு, சில இடைவெளிகளையும் வெளிப்படுத்தியது.

இரண்டாவது பதவியேற்று எட்டு மாதங்களுக்குப் பிறகு, அமெரிக்க அதிபரின் ஆரவாரமான பேச்சு புதியதல்ல என்றாலும், சந்திப்பு முடிந்த உடனேயே ஜி-டிரம்ப் சந்திப்பு குறித்துச் சீனத் தரப்பில் இருந்து எந்தக் கருத்தும் வெளிவரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், முக்கியமாக, இரு தலைவர்களும் உலக அரங்கில் நாகரீகமான ராஜதந்திரத்தைக் கடைப்பிடித்தனர். இது சந்திப்பின் பின்விளைவுகளை அவர்கள் முழுமையாக உணர்ந்திருப்பதைக் காட்டியது. வாழ்த்துக்களைப் பரிமாறிக்கொண்ட பிறகு, டிரம்ப், ”நாம் மிகவும் வெற்றிகரமான சந்திப்பை நடத்தப் போகிறோம் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை... ஆனால் அவர் மிகவும் கடினமான பேச்சுவார்த்தையாளர், அது நல்லதல்ல,” என்றார். மேலும், ”நாம் ஒரு சிறந்த புரிதலைக் கொண்டிருப்போம். எங்களுக்கு எப்போதும் ஒரு சிறந்த உறவு இருந்துள்ளது,” என்றும் குறிப்பிட்டார்.மொழிபெயர்ப்பாளர் மூலம் டிரம்புக்கு ஆரம்பத்தில் வாழ்த்துத் தெரிவித்ததைத் தவிர, ஜி மௌனமாகவே இருந்தார்.

சந்திப்பு சுமார் ஒரு மணி நேரம் நாற்பது நிமிடங்கள் நீடித்தது. இருவரும் கட்டிடத்தை விட்டு வெளியேறியபோது, தலைவர்கள் இனிமையாகப் பேசிக்கொண்டு கை குலுக்கினர். புறப்படுவதற்கு முன் டிரம்ப், ஜியின் காதில் ஏதோ சொன்னார்.கடந்த காலங்களில் மற்ற உலகத் தலைவர்களுடன் டிரம்ப் பழகிய விதத்தைப் பார்க்கும்போது, உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரத்தைக் கையாளும் தனது வரம்புகளை அவர் உணர்ந்ததற்கான அறிகுறியாகச் சீன அதிபரிடம் அவர் காட்டிய இந்த இணக்கமான அணுகுமுறை இருந்தது. இந்தச் சூழ்நிலையில் அவரால் தனது வழக்கமான ஆக்ரோஷமான மற்றும் மிரட்டும் தந்திரங்களைப் பயன்படுத்த முடியவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. உண்மையில், அவர் இந்தச் சந்திப்பை ”பு-2” என்று குறிப்பிட்டார். இது ஜி-20 மற்றும் ஜி-7 போன்ற குழுக்களிலிருந்து பெறப்பட்ட சொல். சீனாவைப் பொறுத்தவரை, இந்த அங்கீகாரம் அதன் அதிகார நிலையை ஒப்புக்கொள்வதைக் குறிக்கிறது. ஜியின் தலைமையில், பெய்ஜிங் உலகின் முதல் வல்லரசாக மாறுவதற்கான இலக்கைத் தொடர்கிறது. எந்தவொரு



அமெரிக்க அதிபரும் சீனாவின் நிலையை இவ்வாறு பகிரங்கமாக ஒப்புக்கொண்டதில்லை, இது பெய்ஜிங்கிற்கு ஒரு பெரிய வெற்றியாக அமைந்தது.

ஜி-யும் தனது பங்களிப்பைச் செய்தார். டிரம்ப் மீதான பல உலகத் தலைவர்களின் பாராட்டு நிறைந்த அணுகுமுறையைப் பின்பற்றி, அவரது அமைதி முயற்சிகளுக்காக ட்ரம்பைப் பாராட்டினார். காசா அமைதித் திட்டம் மற்றும் தாய்லாந்து-கம்போடியா போர்நிறுத்தம் ஆகிய இரண்டு முயற்சிகளை அவர் குறிப்பிட்டார்.

உலகில் உள்ள ”பிரச்சினைக்குரிய இடங்களை” கையாள்வதில் அமெரிக்க அதிபர் காட்டிய ஆர்வத்தை அவர் வெகுவாகப் பாராட்டினார். தாய்லாந்து-கம்போடியா அமைதி ஒப்பந்தத்தில் சீனாவின் பங்கை டிரம்புக்கு நினைவூட்டினார் -இரு தலைவர்களும் ஒருவருக்கொருவர் மரியாதை காட்டிய விதம், அவர்களின் கட்டுப்பாடு, பரஸ்பர மரியாதை, மற்றும் இந்த நுட்பமான சூழ்நிலையைப் புரிந்துகொண்டதைக் காட்டியது.உலகளாவிய விநியோகத்தில் சீனா கொண்டிருக்கும் ஆதிக்கத்தைக் கருத்தில் கொள்ளும்போது, அது அரிய வகை கனிமங்களின் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தும் என்ற முக்கியமான கவலையைத் தாமதப்படுத்த டிரம்ப்பால் முடிந்தது என்று அவரது அறிக்கை தெரிவிக்கிறது.

அரிய வகை கனிமங்கள் என்பவை 17 உலோகத் தனிமங்களின் குழுவாகும். இவை ஏவுகணைகள் முதல் விமானங்கள், கார்கள், குளிர்சாதனப் பெட்டிகள் வரை அனைத்தையும் தயாரிப்பதற்குத் தேவையான காந்தங்கள் மற்றும் பிற கூறுகளை உருவாக்கப் பயன்படுத்தப்படுகின்றன. வரிப் போரின் மத்தியில், சீனா தனது பலத்தைக் காட்டுவதற்காக அதன் ஏற்றுமதியில் வரம்புகளை விதித்தது, இது உலகத் தொழில்களைப் பாதித்தது. இதனால், கு-35 போர் விமானங்களின் விநியோகம் பாதிக்கப்படும் என்று நேட்டோ அதிகாரிகள் புகார் அளிப்பதாகவும், ஃபோர்டு கார் உற்பத்தியை நிறுத்துவது பற்றி ஆலோசிப்பதாகவும் செய்திகள் வந்தன.

இதற்குப் பதிலாக, டிரம்ப் சீனா மீதான வரிகளை 10ூ குறைத்தார் - இது சீனத் தொழில்களுக்கு ஒரு கவர்ச்சியாக இருந்தது. ஏனெனில், அவர்கள் சீனத் தலைவர் மீது ஒப்பந்தம் செய்யும்படி அழுத்தம் கொடுத்து வந்தனர். அமெரிக்கா, சீனா ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கான மிகப்பெரிய இலக்காகும், அத்துடன் இரண்டாவது பெரிய இறக்குமதி மூலமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், இந்தக் கொடுத்தல்-எடுத்தல் செயல்பாடு அரிய வகை கனிமங்களின் பிரச்சினையை தற்காலிகமாகத் தள்ளிப் போட்டது மட்டுமே. சீனா இன்னும் கணிசமான ஆதிக்கத்தைக் கொண்டுள்ளது. இது முக்கியமான துறைகளைப் பொறுத்தவரை, பல நாடுகள் எதிர்க்கும் திறன் கொண்ட விநியோகச் சங்கிலிகளை நிர்வகிப்பதன் அவசியத்தைப் புரியவைத்தது. கோவிட்-19 தொற்றுநோயின்போதுதான் சீனா மீதான சார்ந்து இருப்பதையும், உலகளாவிய விநியோகச் சங்கிலி அமைப்புகள் மீது பெய்ஜிங் கொண்டிருந்த செல்வாக்கையும் உலகம் முதலில் கவனிக்கத் தொடங்கியது. இப்போது, சீனாவிடமிருந்து பல்வகைப்படுத்துவதற்கு உலகிற்கு அதிக நேரத்தை அமெரிக்கா வாங்கியுள்ளது.

அந்தக் கண்ணோட்டத்தில், இது அமெரிக்காவுக்கும் உலகுக்கும் ஒரு முக்கியமான வெற்றியாகும். அதே சமயம், சீனாவிடம் இருந்து அபாயத்தைக் குறைக்க வேண்டியதன் அவசியத்தை நாடுகளுக்கு நினைவூட்டுகிறது.

டிரம்ப் ஜி-க்கு ஒரு சிறிய வெற்றியை அளித்துள்ளார். ஆனால் அவர் சீன வல்லரசை முழுமையாகத் தழுவப் போவதில்லை என்றும் உலகிற்குச் சமிக்ஞை செய்துள்ளார்.

அரிய வகை கனிம விநியோகச் சங்கிலியைப் பெறுவது என்ற வரையறுக்கப்பட்ட இலக்கைத் தொடர்வதில், இது அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவை நிலைப்படுத்தும் ஒரு செயல்முறை என்றும், ஒரு பரந்த மறுசீரமைப்பு அல்ல என்றும் அவர் காட்டியுள்ளார்.

டிரம்ப் தென்கிழக்கு ஆசியத் தலைவர்களுடனும், மிக முக்கியமாக, ஜப்பானின் புதிய பிரதமர் சனே டகாயிச்சியுடனும் (முன்னாள் பழமைவாதத் தலைவர் ஷின்சோ அபேயின் சீடர் மற்றும் சீனா மீது கடுமையான பார்வை கொண்டவர்) சந்திப்புகளை நடத்தியது, ஜி-யுடனான சந்திப்பில் என்ன எதிர்பார்க்கலாம் என்பது பற்றிய ஒரு நுண்ணறிவைக் கொடுத்திருக்கும்.

சீனாவின் முடிவெடுக்கும் பாணி டிரம்பின் பாணியுடன் ஒத்துப்போகவில்லை என்பதால், இது பயனுள்ளதாக இருந்தது. சீன அமைப்பு கீழிருந்து-மேலாகப் பேச்சுவார்த்தை நடத்துகிறது வேலை மட்டத்தில் உள்ளவர்கள் சீனத் தலைவருக்கான களத்தைத் தயார் செய்கிறார்கள், கடைசி நிமிட ஆச்சரியங்கள் இருக்காது.

டிரம்ப் இதற்குத் தன்னை மாற்றிக்கொண்டு, தனது வழக்கமான மேலிருந்து-கீழான பாணியில் விளையாடவில்லை.

இந்தியாவுக்கு இந்தச் செய்தி தெளிவாக இருந்தது - அமெரிக்கா தெளிவாகச் சீனாவைக் கையாள்வதில் கவனம் செலுத்துகிறது. சீனாவை நிர்வகிப்பது பற்றிய டிரம்பின் நோக்கம் மாறவில்லை. ஆனால், அவருக்குச் சீனாவை நிர்வகிக்கக் கூட்டாளிகள் மற்றும் பங்குதாரர்கள் தேவையா, அல்லது அவரால் தனியாகச் சீனாவைக் கையாள முடியுமா என்பது மாறியிருக்கலாம். இங்குதான் குவாட் (Quad) குழுவின் (அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா அடங்கியது) பொருத்தப்பாடு இப்போது கேள்விக்குள்ளாகிறது.

மேலும், சீனாவின் வரிகள் 47% ஆகக் குறைக்கப்பட்ட நிலையில், 50% வரிகளைக் கொண்டுள்ள இந்தியா அதிகபட்ச வரிகளைக் கொண்ட நாடாகிறது. இது இந்தியாவுக்கு ஒரு பாதகமான நிலையைக் கொடுத்து, அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தைகளை மேலும் ஊக்குவிக்கும்.

தென் கொரியாவுக்குச் செல்லும் வழியில் இந்தியாவுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்வேன் என்று டிரம்ப் ஏற்கனவே கூறியுள்ளார். ஆனால், அது நடக்கும் வரை, அமெரிக்காவின் ஒரு மூலோபாயப் பங்குதாரர் (இந்தியா), அமெரிக்காவின் ஒரு மூலோபாயப் போட்டியாளருக்கு (சீனா) எதிராகப் பாதகமான நிலையில் வைக்கப்படுகிறார் என்பதே உண்மை.

பேச்சுவார்த்தைக்கு முன்தினம், சீனா இந்த பருவத்தின் முதல் சோயாபீன் சரக்குகளை வாங்கியதாக ராய்ட்டர்ஸ் தெரிவித்தது. இது டிரம்புக்கும் அமெரிக்க விவசாயிகளுக்கும் கிடைத்த ஒரு முக்கிய வெற்றி.

இதற்குப் பதிலாக, ஷி ஜின்பிங் சீனாவுக்கு சிப் விற்பனை மீதான கட்டுப்பாடுகளில் இருந்து சிறிதளவு தளர்வு அளிக்க முயல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆய்வாளர்கள் கணித்தபடி, டிக்டாக் ஒப்பந்தத்திற்கு இறுதி ஒப்புதல் கிடைத்தால், அது டிரம்பிற்கு கிடைக்கும் மற்றொரு முக்கிய வெற்றி ஆகும்.

இந்த நடவடிக்கை, சீன வளங்களை அமெரிக்கா எவ்வளவு தூரம் சார்ந்திருக்கிறது என்பதை வெளிப்படையாக சுட்டிக்காட்டியது. அதைத் தொடர்ந்து, ஆஸ்திரேலியா, மலேசியா, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் அமெரிக்கா தொடர்ச்சியான ஒப்பந்தங்களை மேற்கொண்டது. இவை அனைத்தும் அரிய பூமி கனிமங்களை சீனாவுக்கு வெளியே பெறுவதற்கான ”காப்பீட்டு திட்டங்கள்” என பேராசிரியர் டிம் ஹார்கோர்ட் விளக்குகிறார். இந்த ஒப்பந்தங்கள், டிரம்ப் மற்றும் அமெரிக்க பேச்சுவார்த்தை குழு சீனாவுடன் உள்ள பதற்றங்களைத் தணிக்க முயன்று, வியாழக்கிழமை நடைபெறும் சந்திப்பை ஏற்பாடு செய்ய சீன அதிகாரிகளைச் சந்தித்த நேரத்தில் உருவானவை.இரு நாடுகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் மிகப் பெரியவை, போட்டியும் ஆழமாக உள்ளது. ஆனால் எளிதில் அடையக்கூடிய சில பலன்கள் உள்ளன.

ஒரு ஒப்பந்தம் எவ்வளவு பலவீனமானதாக இருந்தாலும், அது எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய திடீர் முடிவுகளின்”ஆபத்தை குறைக்கலாம், “எ” டிரம்ப் நிர்வாகம் வரி தொடர்பான விஷயத்தில் இன்னும் சீரற்ற முறையில் நடந்து கொள்கிறது. ஆனால் இந்த பேச்சுவார்த்தை, உறவுகளைச் சமரசம் செய்யக்கூடும்.”ஆனால், அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையிலான எந்த ஒப்பந்தமும் நிரந்தரமாக நீடிக்காது என்றும் கூறப்படுகிறது.

# மகளிர் உலகக்கிண்ண சம்பியன் மகுடத்தை உச்சி முகர்ந்து

## சொந்த மண்ணில் சரித்திரம் படைத்தது இந்தியா





அரபாத் பஹுர்தீன்

மகளிர் ஒருநாள் கிரிக்கெட் உலகக் கிண்ண தொடரின் இறுதிப் போட்டியில் தென்னாப்பிரிக்கா அணியை 52 ஓட்டங்களால் வீழ்த்திய இந்திய மகளிர் அணி முதல் முறையாக சம்பியன் மகுடத்தை தனதாக்கி வரலாறு படைத்தது.

இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளின் 5 சர்வதேச மைதானங்களில் இடம்பெற்ற மகளிர் ஒருநாள் உலகக் கிண்ண தொடரில் மொத்தம் 8 அணிகள் பங்கேற்றிருந்தன.

இதில் முதல் லீக் சுற்றின் முடிவில் புள்ளிப் பட்டியலில் முதல் 4 இடங்களைப் பிடித்த அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து மற்றும் இந்தியா ஆகிய அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெற்றன.

இதில் முதல் அரையிறுதியில் இங்கிலாந்து அணியை வீழ்த்தி தென்னாபிரிக்கா முதல் அணியாக இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

பின்னர் இடம்பெற்ற 2ஆவது அரையிறுதிப் போட்டியில் நடப்புச் சம்பியனான அவுஸ்திரேலிய அணியை போரிடி வீழ்த்திய இந்திய அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

அதனடிப்படையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை (2) மும்பையில் இடம்பெற்ற இறுதிப் போட்டி மழை காரணமாக சுமார் இரண்டு மணி நேரம் தாமதமாகவே இந்தப் போட்டி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இப் போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாப்பிரிக்கா அணி முதலில் பந்து வீச முடிவெடுத்திருந்தது.

இதனை சாதகமாக பயன்படுத்திக் கொண்ட இந்திய அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 298 ஓட்டங்களை குவித்திருந்தது.

இந்திய அணி சார்பில் துடுப்பாட்டத்தில் ஆரம்ப வீராங்கனையான ஷெபாலி வர்மா 87 ஓட்டங்களையும், மத்திய வரிசை துடுப்பாட வீராங்கனையான தீப்தி சர்மா 58 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பின்னர் இந்திய அணியால் நிர்ணயிக்கப்பட்ட 299 என்ற சவால் மிக்க வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தென்னாப்பிரிக்கா அணியால் 45.5 ஓவர்களின் சகல விக்கட்டுக்களையும் இழந்து 246 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொள்ள முடிந்தமையால் இந்திய அணி 52 ஓட்டங்களால் அசத்தல் வெற்றியை பதிவு செய்து முதல் முறையாக மகளிர் ஒருநாள் உலகக் கிண்ணத்தின் சம்பியன் மகுடத்தை உச்சி முகர்ந்தது.

தென்னாபிரிக்க அணி சார்பில் துடுப்பாட்டத்தில் ஆரம்ப துடுப்பாட்ட வீராங்கனையும், அணித் தலைவருமான லாரா வால்வார்ட் தனி ஒருவராக போராடி சதம் (101) அடித்திருந்தார். இந்திய அணி சார்பில் பந்துவீச்சில் தீப்தி சர்மா ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார்.

அதற்கமைய இறுதிப் போட்டியில் சிறந்த வீராங்கனையாக ஷெபாலி வர்மாவும், இத் தொடரின் தொடர் நாயகியாக தீப்தி சர்மாவும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத் தக்கது.






# ரி20 கிரிக்கெட்டிற்கு விடை கொடுத்தார் கேன் வில்லியம்சன்



நியூசிலாந்து அணியின் முன்னணி நட்சத்திர வீரரான கேன் வில்லியம்சன், சர்வதேச ரி20 கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

கேன் வில்லியம்சன் இதுவரையில் 93 ரி20 போட்டிகளில் விளையாடி, 2500க்கும் மேற்பட்ட ஓட்டங்களை குவித்துள்ளார்.

எவ்வாறாயினும், நியூசிலாந்து அணிக்காக டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் தொடர்ந்து விளையாடவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

கேன் வில்லியம்சன் கடைசியாக 2024ஆம் ஆண்டு இடம்பெற்ற ரி20 உலகக் கிண்ண தொடரில் விளையாடி இருந்தார்.

2011ஆம் ஆண்டு ரி20 போட்டிகளில் அறிமுகமான கேன் வில்லியம்சன் 75 போட்டிகளில் அணியை வழிநடத்தியுள்ளார்.

இதில் இரண்டு முறை நியூசிலாந்து அணியை ரி20 உலகக் கிண்ண தொடர்களில் அரையிறுதிப் போட்டிக்கு அழைத்துச் சென்ற அவர் ஒரு முறை இறுதிப் போட்டிக்கு அணியை அழைத்துச் சென்றிருந்தார்.

2021 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இறுதிப் போட்டியில் அவர் அடித்த 85 ஓட்டங்கள், ஆடவர் ரி20 உலகக் கிண்ண எந்தப் பதிப்பிலும் அணித் தலைவர் ஒருவர் பெற்றுக்கொண்ட அதிகபட்ச ஓட்டமாக இதுவரையில் பதியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரைசிங் ஸ்டார்ஸ் ரி20 இம் மாதம் 14ஆம் திகதி ஆரம்பம்




ஆசிய கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் ரைசிங் ஸ்டார்ஸ் ரி20 தொடர் இம் மாதம் 14ஆம் திகதி கட்டார் டோஹாவில் ஆரம்பிக்கவுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப் பட்டுள்ளது.

ஆசியக் கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் ஏற்கனவே நடைபெற்றுவந்த வளர்ந்துவரும் அணிகளுக்கு இடையிலான ஆசியக்கிண்ணத் தொடர் தற்போது ரைசிங் ஸ்டார்ஸ் தொடர் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த தொடரில் மொத்தம் 8 அணிகள் பங்கேற்கின்றன. அதற்கமைய இத் தொடருக்கான குழு விபரம் மற்றும் போட்டி அட்டவணையினை ஆசிய கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது. அதன்படி இலங்கை தேசிய அணியின் இளம் சகலதுறை வீரரான துனித் வெல்லாலகே தலைமை தாங்கும் இலங்கை குழாம் குழு யுயில் இடம்பெற்றுள்ளது.

அதற்கேற்ப இலங்கை அணியுடன், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் மற்றும் ஹொங் கொங் ஆகிய 4 அணிகள் குழு யுயில் இடம்பெற்றுள்ளதுடன், குழு டீயில் இந்தியா, பாகிஸ்தான், ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமான் ஆகிய 4 அணிகள் குழு டீயில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media (PVT) Ltd. நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியிலிருந்து வெளிவருகின்றது.